
February 2026

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு





VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

iதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

February 2026

சுவடி — 15
ஓலை — 12

வணக்கம் பல

கோடிக்கணக்கான மக்களைக் கொண்டிருக்கும் நாட்டில், மக்களை ஆளும் தலைமைப் பொறுப்பில் ஒரு நபர் வந்து அமரும்போது, அத்தனைக் கோடி மக்களின் தலையெழுத்தையும் தீர்மானிக்கக்கூடிய மாபெரும் சக்தியாக அந்த மனிதர் மாறிவிடுகிறார்! அப்படிப்பட்டவருக்கான மாண்பு என்பது மனிதநேயமும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற அளப்பரிய சேவை மனப்பான்மையுமாக இருப்பார்கள் என்றுதான் அம்மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

உயர் பதவியில் வந்தமர்பவர்கள், மகத்தான அதிகாரம் பெறுகிறார்கள். அதனை நாட்டை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தினால் சிறப்பானதாக இருக்கும். மாறாக, அதைத் தனிப்பட்ட பலனாகவோ, பலமாகவோ நினைப்பார்களேயானால் அவர்களுக்கு மட்டுமல்லாது, அந்த நாட்டுக்கே அழிவை உண்டாக்கும்! இன்றைய நிலையில், சிலர் மிகப்பெரிய வல்லரசு நாடுகளின் தலைமையில் அமர்ந்து, அகிலத்தையே ஆட்டுவிக்கின்ற மகத்தான வல்லமை பெற்றதன் மூலமாக உலக சமுதாயத்திற்கும் மாபெரும் அச்சுறுத்தல்கள் அவ்வப்போது எழுந்த வண்ணம் இருக்கிறது.

இயற்கையையும் மனிதகுலத்தையும் சிதைக்கக்கூடிய செயல்கள் ஆங்காங்கே அரங்கேறிக் கொண்டிருப்பதற்கான காரணம், இது போன்ற தலைமைகள் எனச் சொல்லவும் வேண்டுமோ? இவர்களால் அது போர் வடிவாகவும், வரி விதிப்பாகவும், நாடு பிடிக்கும் எண்ணமாகவும் அவர்களிடம் இருந்து அது வெளிப்படுகிறது. இவை அடியோடு தடுக்கப்பட வேண்டும்!உலகத் தலைவர்கள், நாடுகள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு மட்டுமே உண்டானது என்பதை உணர்ந்து கொண்டு, வரக்கூடிய தலைமுறைக்கு தலைமைப் பண்பையும் நல்லாட்சியையும் வழங்கிச் செல்ல வேண்டும்!

பனிக்காலம் விடை பெறப் போகின்ற தருணம், வசந்த காலத்தை வரவேற்கும் விதமாக உலகம் தயாராகி வருகின்ற வேளையில், மக்கள் மனங்களிலும், வசந்தம் வீச வேண்டும்! பகைமை மறந்து நட்பு பாராட்டி உலகம் மகிழ வேண்டும் என்பதையே விழைவாக முன் வைக்கும் நல்ல பல ஆக்கங்களுடன் கதை, கவிதை, கலை, மருத்துவம் எனக் கலந்து கட்டிய கதம்ப மலராக மலர்கிறது இம்மாத 'அய் தமிழ்' இதழ்! வசந்தத்தை வரவேற்கும் விதமாக மலர்கின்ற 'அய் தமிழ்' இதழை வழமை போல வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...

உச்சக் கட்டம்
குரங்கு பூமாலை
தமிழே தமிழே
அத்துமீறும் படைப்பு சுதந்திரம்
சேரமான் கனவு
தல வலம்
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்
யோக யோகம்
மருத்துவ தமிழ்
வள்ளுவம் வழி



IThamil Monthly Magazine
Chief Editor & Publisher
Sivanesan
Editor
Khottravan
Editorial Team
Ganesan
Navani
Shanthakumar
Art Editor
Sriram
Art & Marketing Director
Jaya
Printers
Kanagam Pathippagam
Contact us:
editor@ithamil.com

(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# உச்சக்

## முதலாம் ஆண்டு நிறைவு: டிரம்ப்பின் ஆட்சி – உலகம் மிரட்சி!

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் தனது 2—ஆவது பதவிக்காலத்தின் முதலாம் ஆண்டை நிறைவு செய்துள்ளார்.கடந்த ஆண்டு ஜன. 20—ஆம் தேதி, 2—ஆவது முறையாக வெள்ளை மாளிகையில் அடியெடுத்து வைத்த டிரம்ப், அதிரடி முடிவுகளால் இந்த ஓராண்டு பதவிக்காலத்தில் உலக நாடுகளை மிரள வைத்தார் என்றால் மிகையாகாது. ‘அமெரிக்காவுக்கு முன்னுரிமை’ கொள்கையுடன் ஆட்சிக்கு வந்தவர், பதவியேற்ற முதல் நாளிலேயே பிறப்புரிமை அடிப்படையிலான குடியுரிமையை ரத்து செய்யும் நிர்வாக உத்தரவில் கையொப்பமிட்டு தீவிரம் காட்டினார்.




சட்டவிரோத குடியேற்றத்தைத் தடுக்க மெக்ஸிகோ எல்லையில் தடுப்புச் சுவர், சட்டவிரோத குடியேறிகளின் உடனடி வெளியேற்றம், விசா கட்டணம் பன்மடங்கு உயர்வு என குடியேற்றக் கொள்கைகளைத் தொடர்ந்து கடுமையாக்கினார். இதனிடையே, சட்டவிரோத குடியேறிகளின் கை, கால்களில் விலங்கிடப்பட்டு, ராணுவ விமானத்தில் நாடுகடத்தியது, மனித உரிமை மீறல் என சிறிய நாடுகளையும் கொதிப்படையச் செய்தது.

சட்டவிரோத குடியேறிகள் அமெரிக்காவுக்குள் ஊடுருவ உதவுவதாக, அண்டை நாடுகளான மெக்ஸிகோ, கனடாவிற்கு கூடுதல் வரி விதித்து, வரி யுத்தத்தை டிரம்ப் தொடங்கினார்.பின்னர், அமெரிக்காவுக்கு அதிக வரி விதிக்கும் சீனா, இந்தியா உள்பட பல்வேறு உலக நாடுகளுக்கு ‘பரஸ்பர’ விரி விகிதங்களையும் அறிவித்தார். இந்த வரி மோதலில் அதிகபட்சமாக, சீனா மீது 145 சதவீதம் வரை வரி விதிக்கப்பட்டது. பதிலுக்குச் சீனாவும் 110 சதவீத வரி விதித்தது.

உலக நாடுகளின் வரிசையில் இந்தியாவுக்கு முதலில் 25 சதவீத வரி விதிக்கப்பட்டது. பிறகு, ரஷியாவுடனான எண்ணெய் வர்த்தகத்துக்காக கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்பட்டது. இதற்கு பெரிதும் எதிர்வினையாற்றாத இந்தியா, இருதரப்பு

# கட்டம்

வர்த்தக ஒப்பந்தம் மூலம் வரி விலக்கைப் பெற பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தி வருகிறது.

வரி மோதலுக்கிடையே டிரம்ப்பின் பார்வை அவ்வப்போது ஆயுத மோதல்களின் பக்கமும் திரும்பியது. இந்தியா—பாகிஸ்தான் மோதலைத் தானே தலையிட்டுத் தீர்த்ததாக டிரம்ப் இன்றுவரை கூறிவருகிறார். ஆனால், இந்தியா இதைத் தொடர்ந்து மறுத்து வருகிறது.

அதேநேரம், தாய்லாந்து—கம்போடியா, எகிப்து—எத்தியோப்பியா, அர்மேனியா—அஜர்பைஜான், காங்கோ—ருவாண்டா மோதல்களில் அமைதி திரும்பியதற்கு டிரம்ப்பின் மத்தியஸ்தம் (மிரட்டல்) முக்கியப் பங்காற்றியதை மறுப்பதற்கு இல்லை.

இதனிடையே, இஸ்ரேல்—ஈரான் மோதலைப் பயன்படுத்தி, ஈரானின் அணுசக்தி தளங்களைக் குண்டுவீசி சீர்குலைத்தது டிரம்ப்பின் சாமர்த்தியமாகவே கருதலாம். இதன்மூலம், ஹமாஸுடன் சண்டை நிறுத்தத்துக்கு இஸ்ரேலை ஒப்புக்கொள்ளச் செய்ததுடன் காஸாவின் மறுசீரமைப்பிலும் ‘அக்கறை’ கொண்டு, அமைதி வாரியம் வரை அமைத்திருக்கிறார் டிரம்ப்.

ஆனால், டிரம்ப்பின் தேர்தல் வாக்குறுதியான உக்ரைன்—ரஷிய போரை மட்டும் அவரால் முடிவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. ரஷிய அதிபர் புதின், உக்ரைன் அதிபர் ஸெலென்ஸ்கி ஆகிய இருவரையும் அமெரிக்காவுக்கு அழைத்துப் பேசியும் போர் இன்னும் நீள்கிறது.

வல்லரசு நாட்டின் தலைவராக சில உலக மோதல்களில் தன் கடமையைச் செய்த டிரம்ப், அமைதிக்கான நோபல் பரிசை பலனாக எதிர்பார்த்தார். இஸ்ரேல், பாகிஸ்தான், கம்போடியா நாடுகள் அவரின் பெயரைப் பரிந்துரைத்தாலும், காலதாமதத்தால் அந்தப் பரிசு வெனிசுலாவின் மரியா கொரினா மச்சாடோவிற்கு சென்றது.

அண்மையில் டிரம்ப்பைச் சந்தித்த மரியா கொரினா மச்சாடோ, தனது நோபல் பதக்கத்தை அவருக்கு வழங்கினார். எனினும், சொந்தப் பெயரில் நோபல் பரிசு கிடைக்காததால் அமைதி மீதான பார்வை விலகிவிட்டதாக நார்வே பிரதமருக்கு






வருகின்றன. இதனால் பல்லாண்டுகளாக நீடிக்கும் நேட்டோ கூட்டமைப்பு உடையும் அபாயமுள்ளது. இது, உக்ரைன் மீதான ரஷியாவின் பிடியை மேலும் வலுப்படுத்தக் கூடும்.

சர்வதேச அளவில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முயலும் டிரம்ப், உள்நாட்டுப் பிரச்னைகளைக் கவனிக்கத் தவறிவிட்டதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க நீதித்துறையைப் பயன்படுத்துதல், நாடாளுமன்ற அனுமதியின்றி ராணுவத் தாக்குதல்களுக்கு உத்தரவிடுதல் என அரசமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைப் புறந்தள்ளிவிட்டு, அதிபரால் எதையும் செய்ய முடியும் என்ற டிரம்ப்பின் பிடிவாதம் அமெரிக்க ஜனநாயகத்துக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது.

டிரம்ப் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். டிரம்ப்பின் சமீபத்திய செயல்பாடுகள் அவரின் இந்த நிலைப்பாட்டையே பிரதிபலிக்கின்றன.

போதைப்பொருள் கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறி, வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடுரோவை அவரது படுக்கையறை வரை சென்று அமெரிக்கப் படை கைது செய்ததைப் பெரும்பாலான அமெரிக்கர்களே விரும்பவில்லை. இதன் பின்னணியில், வெனிசுலாவின் எண்ணெய் வளம் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக, டென்மார்க் கட்டுப்பாட்டில் உள்ள கிரீன்லாந்து தீவை வாங்கும் முயற்சியில் டிரம்ப் இறங்கியுள்ளார். ரஷியா, சீனா அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க, கிரீன்லாந்து அமெரிக்கா வசமிருப்பது முக்கியம் எனும் டிரம்ப்பின் வாதத்தை ஐரோப்பிய நாடுகள் ஏற்கவில்லை.

எனினும், அமெரிக்காவுக்கு ஒத்துழைக்கவில்லையெனில், டென்மார்க் மற்றும் 7 'நேட்டோ' கூட்டமைப்பு நாடுகள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் விடுத்துள்ள எச்சரிக்கை, உலக அரங்கில் அமெரிக்காவைத் தனிமைப்படுத்த வழிவகுக்கும் மோசமான நகர்வாக கருதப்படுகிறது.

டிரம்ப்பின் இந்த அதிரடிப் போக்கினால் அதிருப்தியடைந்துள்ள ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவுடனான உறவை மறுபரிசீலனை செய்து

டிரம்ப்பின் கடந்த ஓராண்டுகால ஆட்சி நடவடிக்கைகள் உண்மையில் அமெரிக்காவின் நலனுக்கு ஆக்கபூர்வமானதா எனும் விவாதம் எழுந்துள்ளது. இச்சூழலில், நடப்பாண்டு இறுதியில் வரும் நாடாளுமன்ற இடைக்காலத் தேர்தலில் செல்வாக்கை நிரூபிக்கும் அழுத்தத்துடன், டிரம்ப் அடுத்தகட்ட காய்நகர்த்தலாம்.

தென்அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள வெனிசுலா, 8,82,046 சதுர கி.மீ. பரப்பளவையே கொண்ட ஒரு சிறிய எண்ணெய் வளம் மிக்க வெப்பமண்டல நாடு. இதன் மக்கள்தொகை 2.90 கோடி மட்டுமே. உலகின் மிகப்பெரிய எண்ணெய் வளம் மிக்க நாடான வெனிசுலா, தினமும் 10 லட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்கிறது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இங்கு கச்சா எண்ணெய்யின் விலை மிகக் குறைவு. மேலும், எசெக்விபோ பிராந்தியத்துக்குப் பக்கத்திலுள்ள கடல் பகுதியில் கச்சா எண்ணெய் வளம் இருப்பதை அமெரிக்காவின் "எக்ஸலன்மொபில்' என்னும் நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறது.

அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாகப்

பதவியேற்ற டொனால்ட் டிரம்ப், வெனிசுலா அதிபர் மடூரோவின் அரசை “போதைப் பொருள் பயங்கரவாத அமைப்பாக’ அறிவித்தார். மடூரோவும் போதைப் பொருள் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டார். மேலும், வெனிசுலாவுக்கு அருகே கரீபியன் கடலில் இதுவரை இல்லாத மிகப் பெரிய அளவில் படைகளைக் குவித்த டிரம்ப், கிழக்குப் பசிபிக் கடல் வழியாகச் செல்லும் கப்பல்களைத் தாக்கி அழிக்க உத்தரவிட்டார். அந்தப் படகுகளில் போதைப் பொருள்கள்தான் கடத்தி வரப்படுகின்றன என்பதற்கான உரிய ஆதாரங்களை வெளியிடாமல் அமெரிக்கா நடத்திய 35 தாக்குதல்களில் இதுவரை 115 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை என்று உலக நாடுகள் விமர்சிக்கின்றன.





இந்நிலையில், போதைப் பொருள் கடத்தல்களுக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டி அதிபர் மடூரோவும், அவரது மனைவியும் அமெரிக்காவால் சிறை பிடிக்கப்பட்டது உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. இதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் வெளியிட்டுள்ள அறிக்கையில், “வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மடூரோவை அமெரிக்க ராணுவம் கைது செய்தது, சர்வதேச சட்டத்தை மீறிய செயல். இது இறையாண்மை கொண்ட ஒரு நாட்டின் தலைவருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அபாயகரமான முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் உலக அமைதிக்கும், நிலைத்த தன்மைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும்‘ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிக்கோலஸ் மடூரோவை அமெரிக்க ராணுவம் கைது செய்ததைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்ற நாடுகளுக்கு எதிராக இப்போது கருத்துகளைக் கூறி வருகிறார். குறிப்பாக, கிரீன்லாந்து, கொலம்பியா, மெக்ஸிகோ மற்றும் கியூபா ஆகிய நாடுகளின் மீது அவரது பார்வை திரும்பியுள்ளது. சமீபத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது அமெரிக்க அதிபர் டிரம்ப் பேசியது, உலக நாடுகளுக்கிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு காரணம் இதுதான்.

அமெரிக்கா ஏற்கெனவே கிரீன்லாந்தில் ஒரு ராணுவ தளத்தைக் கொண்டுள்ளது. “பிட்டுஃபிக்‘ விண்வெளித் தளம் கிரீன்லாந்தில்தான் உள்ளது. “அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு கிரீன்லாந்து முழுவதும் தேவை. அந்தப் பகுதி முழுவதும் ரஷியா மற்றும் சீனக் கப்பல்களால் சூழப்பட்டுள்ளது’ என சமீபத்திய செய்தியாளர்களின் சந்திப்பின்போது டிரம்ப் தெரிவித்தார். டென்மார்க் ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியான பரந்த ஆர்க்டிக் தீவு, அமெரிக்காவின் வடகிழக்கில் சுமார் 3,200 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்கு அறிதிறன்பேசிகள், மின்சார வாகனங்கள் மற்றும் ராணுவ வன்பொருள் உற்பத்திக்குத் தேவையான அரியவகை மண் தாதுக்கள் நிறைந்துள்ளன. தற்போது, சீனாவின் அரிய மண் தாதுக்களின் உற்பத்தி அமெரிக்காவைவிட அதிகமாகவுள்ளது.

கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ் பிரெட்ரிக் நீல்சன், தீவின் மீதான அமெரிக்க கட்டுப்பாட்டின் கருத்தை ஒரு “கற்பனை’ என விமர்சித்து டிரம்ப்புக்கு பதிலளித்துள்ளார். “நாங்கள் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக்கிறோம். அதே சமயம், அமெரிக்கா சர்வதேச சட்டங்களை மதித்து நடக்க வேண்டும்‘ என அவர்




அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

2016—ஆம் ஆண்டில் அதிகாரத்துக்கு வந்தவுடனேயே “மெக்ஸிகோவின் தெற்கு எல்லையில் சுவரைக் கட்டுங்கள்’ என டிரம்ப் அழைப்பு விடுத்தார். 2025—ஆம் ஆண்டு பதவியேற்ற முதல் நாளன்று மெக்ஸிகோ வளைகுடாவை “அமெரிக்கா வளைகுடா’ என்று மறுபெயரிடுவதற்கான நிர்வாக உத்தரவில் அவர் கையொப்பமிட்டார். அமெரிக்க எல்லையைப் பாதுகாக்க மெக்ஸிகோ போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என டிரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப் பொருள் கடத்தல் மெக்ஸிகோ வழியாகவே அதிகமாக நடக்கிறது என்றும், இதனால் அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு பாதிக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். மெக்ஸிகோ தேவையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தாவிட்டால் கடுமையான நடவடிக்கைளைச் சந்திக்க வேண்டி வரும் எனவும் எச்சரித்துள்ளார். ஆனால், அதிபர் கிளாடியா ஷீன்பாம், மெக்ஸிகன் மண்ணில் எந்தவொரு அமெரிக்க ராணுவ நடவடிக்கையும் இல்லையென பகிரங்கமாக மறுத்துள்ளார்.

தெரிவித்துள்ளார். மேற்கில், வெனிசுலாவில் அண்டை நாடான கொலம்பியா கணிசமான எண்ணெய் இருப்புகளைக் கொண்டுள்ளது. தங்கம், வெள்ளி, மரகதம், பிளாட்டினம் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் முக்கிய உற்பத்தியாளராகவும் உள்ளது. கொலம்பியா போதைப் பொருள் உற்பத்தி மற்றும் கடத்தலைக் கட்டுப்படுத்த தவறிவிட்டதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார் டிரம்ப். குறிப்பாக, கொலம்பியா அதிபர் மீது மறைமுகமாகக் குற்றங்களைச் சுமத்தினார்.வெனிசுலாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்குப் பிறகு, கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோவை “உங்கள் கழுதையைப் பார்த்துக் கொள்ளுங்கள்’ என டிரம்ப் எச்சரித்தது, அந்த நாட்டை எரிச்சலடையச் செய்துள்ளது.

கொலம்பியா அதிபர் பெட்ரோ, தன்னிச்சையாக “கார்டெல்ஸ்’ எனப்படும் போட்டி போட்டுக் கொள்ளாமல் பொருள்களின் விலைகளை நிர்ணயித்து லாபத்தைப் பெருக்கிக் கொள்ளும் நிறுவனங்களை ஆதரிப்பதாக டிரம்ப் குற்றஞ் சாட்டி, கடந்த அக்டோபரில் அந்த நாட்டின் மீது அமெரிக்கா தடைகளை விதித்தது. “என்னை அழைத்துச் செல்லுங்கள்; கைது செய்யுங்கள்; உங்களுக்காக நான் இங்கே காத்திருக்கிறேன். டிரம்ப், நீங்கள் ஒரு கோழை. நீங்கள் (அமெரிக்கா) குண்டு வீசினால், நாங்கள் கொரில்லாக்களாக மாறுவோம். நான் மீண்டும் ஆயுதத்தைத் தொட மாட்டேன் என சபதம் செய்துள்ளேன். ஆனால், தாய்நாட்டுக்காக நான் மீண்டும் ஆயுதம் ஏந்துவேன்’ என கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோ,

ஃபுளோரிடாவிலிருந்து வெறும் 145 கி.மீ. தெற்கேவுள்ள தீவு நாடு கியூபா. 1960—களின் முற்பகுதியில் இருந்து அமெரிக்கத் தடைகளின் கீழுள்ளது. தடையை மீறி சட்ட விரோதமாக கியூபாவுக்கு கச்சா எண்ணெய்யை ஏற்றிச் சென்றதாகக் கூறி, வெனிசுலாவின் “ஸ்கிப்பர்’ என்ற மிகப் பெரிய கப்பலை அமெரிக்காவின் கடலோரக் காவல் படை கடந்த டிச.10 ஆம் தேதி பறிமுதல் செய்தது. வெனிசுலா அரசு மானிய விலையில் கியூபாவுக்கு கச்சா எண்ணெய்யை ஏற்றுமதி செய்து வருகிறது. வெனிசுலாவிடமிருந்து வாங்கும் கச்சா எண்ணெய்யை சீனாவுக்கு மறுவிற்பனை செய்வதன் மூலம் கியூபா பெரும் வருமானத்தை ஈட்டியுள்ளது.

பல ஆண்டுகளாக, கியூபாவுக்கு வெனிசுலா மானிய விலையில் எண்ணெய் அனுப்பி வருவதற்கு, நன்றிக் கடனாக வெனிசுலாவுக்கு மருத்துவர்களையும், பாதுகாப்பு நிபுணர்களையும்




அனுப்பி வருகிறது கியூபா. இதுவும் அமெரிக்காவுக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. கியூபா வீழ்ச்சியடையத் தயாராக இருப்பதால், அங்கு அமெரிக்க ராணுவத் தலையீடு தேவையில்லை என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கியூபாவின் அரசமைப்பு தோல்வி அடைந்துவிட்டதாக டிரம்ப் தெரிவித்துள்ளார். மக்கள் கடுமையான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், கியூபா அரசு இன்னும் பழைய கொள்கைகளில் சிக்கி இருப்பதாகவும், மாற்றத்தை ஏற்காதவரை, அந்த நாடு முன்னேற முடியாது என்றும் அவர் விமர்சித்தார். விரைவில், கியூபாவில் அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் டிரம்ப் ஆருடம் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் இந்த விமர்சனங்கள் லத்தீன் அமெரிக்க நாடுகள் மீது அமெரிக்கா கொண்டுள்ள காழ்ப்புணர்வை எடுத்துக்காட்டுவதாக உலக அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். கிரீன்லாந்து, மெக்ஸிகோ, கொலம்பியா, கியூபா ஆகிய நாடுகளுடன் அமெரிக்காவின் உறவுகள் வரும் நாள்களில் மேலும் சிக்கலான நிலையை எட்டக்கூடும் என்றும் உலக நாடுகள் அஞ்சுகின்றன.


வெனிசுலா அதிபர் மடுரோவை அதிரடி ராணுவ நடவடிக்கையின் மூலம் அமெரிக்கா கைது செய்ததுபோல, ஈரான் அரசையும் அமெரிக்கா வீழ்த்த வேண்டும் என்று மக்கள் அங்கு உள்நாட்டு கலவரங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது வளைகுடா நாடுகளுக்கிடையே பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை முறியடித்து, அமெரிக்காவின் எதிரி நாடுகளுடன் இணைந்து செயல்பட லத்தீன் அமெரிக்க நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.




அமெரிக்கா — ரஷ்யா ‘நியூ ஸ்டார்ட் ‘ ஒப்பந்தம்

அணு ஆயுதக் கட்டுப்பாட்டு நிபுணரான மைக் ஆல்பர்ட்சன், அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான ‘நியூ ஸ்டார்ட்’ உத்தி ஆயுதக் கட்டுப்பாட்டு பேச்சுவார்த்தைகளில் ஒரு பேச்சுவார்த்தையாளராக இருந்துள்ளார். அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான அணு ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் பிப்ரவரி 2026—இல் முடிவடைய உள்ளது.

இது ‘நியூ ஸ்டார்ட் அணுசக்தி ஒப்பந்தம்‘ (**New START Nuclear Treaty**) அல்லது புதிய உத்தி ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.மேலும், பல நாடுகள்




தங்களின் அணு ஆயுத இருப்புகளை அதிகரித்து வருகின்றன. அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகள் அவற்றைப் பெற முயற்சிக்கின்றன. அப்படியானால், அணு ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகள் முடங்கிப்போகுமா?

எதிர் தரப்பின் ராணுவக் கட்டளை மையங்கள், போக்குவரத்து, மின்சாரம் மற்றும் இதர உள்கட்டமைப்புகளை அழிக்கப் பயன்படும் அணு ஆயுதங்களின் பயன்பாட்டைக் குறைப்பதே இந்தப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நோக்கமாக இருந்தது.2009—இல் தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தைகள் 2010—இன் பிற்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு, பிப்ரவரி 2011 முதல் அமலுக்கு வந்தன என்று குறிப்பிட்டார் மைக் ஆல்பர்ட்சன். "ஸ்டார்ட் 2" ஒப்பந்தம் அமலுக்கு வந்தது, ஆனால் கையெழுத்திடப்படவில்லை. இதனைத் தொடர்ந்து, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மற்றும் ரஷ்ய அதிபர் டிமிட்ரி மெத்வதேவ் ஆகியோரால் 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கான விதிகளைக் கொண்டிருந்தது. "

மிக முக்கியமாக, இரு தரப்பினரும் ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமான அணு ஆயுதங்களை வைத்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதிகளும் இதில் இருந்தன.இந்த ஒப்பந்தத்தின்படி, இரு நாடுகளும் ஆண்டுக்கு இருமுறை தங்கள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையைப் பற்றி ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள வேண்டும். மேலும், ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டின் அணுசக்தி நிலையங்களை ஆண்டுக்கு 18 முறை ஆய்வு செய்ய அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டு இரு தரப்புக்கும் இடையே விரிசல் உருவாகத் தொடங்கியது.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் மற்ற நாட்டுக்கு சென்று அணுசக்தி நிலையங்களை ஆய்வு செய்ய முடியாத சூழல் ஏற்பட்டதால், 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன என மைக் ஆல்பர்ட்சன் குறிப்பிடுகிறார்.பின்னர், யுக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு அமெரிக்கா காட்டிய எதிர்வினையைத் தொடர்ந்து, ரஷ்யா இந்த ஒப்பந்தத்தை கேள்விக்குள்ளாக்கத் தொடங்கியதுடன், அமெரிக்க ஆய்வாளர்கள் ரஷ்யாவிற்குள் நுழையவும் அனுமதி மறுத்தது. மறுபுறம், ரஷ்யா 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தை மீறுவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இந்த ஒப்பந்தம் பிப்ரவரி 2026—இல் காலாவதியாகிறது. இந்த ஒப்பந்தத்தை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே நீட்டிக்க முடியும் என்ற விதி ஏற்கனவே 2021—இல்




VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

பயன்படுத்தப்பட்டுவிட்டது.இதற்கு மாற்றாக ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு கணிசமான நேரமும் உழைப்பும் தேவைப்படும் என்கிறார் மைக் ஆல்பர்ட்சன். எனவே, நியூ ஸ்டார்ட் ஒப்பந்தம் காலாவதியான பிறகு என்ன நடக்கும் என்பது பெரும் கேள்வியாக உள்ளது. இதற்கு மாற்றாக ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்குவதற்கு கணிசமான நேரமும் உழைப்பும் தேவைப்படும் என்கிறார் மைக் ஆல்பர்ட்சன். ஜான்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் உயர்நிலை ஆய்வுகள் பள்ளியின் பேராசிரியர் நடாலி டூச்சி, உலகளாவிய அணு ஆயுதக் கட்டுப்பாட்டு அமைப்பு சரிந்துவிட்டதாகக் கூறுகிறார். ''நியூ ஸ்டார்ட் ஒப்பந்தம் அத்தகைய ஏற்பாடுகளில் எஞ்சியிருந்த கடைசி ஒப்பந்தமாகும், இது இந்த ஆண்டு முடிவடையும் நிலையில் உள்ளது''

நியூ ஸ்டார்ட் ஒப்பந்தம் முடிந்த பிறகு அமெரிக்காவும் ரஷ்யாவும் அணு ஆயுதக் கட்டுப்பாட்டைத் தொடர முடியுமா? என்ற கேள்விக்கு, ''கொள்கை ரீதியாக இரு நாடுகளும் ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் நிலைத்தன்மைக்கு ஆதரவாக இருப்பதாக'' அவர் பதிலளித்தார். ''நியூ ஸ்டார்ட் ஒப்பந்தம் முடிந்தவுடன் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை திடீரென அதிகரிக்கும் என்று நான் நினைக்கவில்லை, ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்தும் விதிகள் இருக்காது'' என்று அவர் கூறுகிறார்.




'நியூ ஸ்டார்ட்' காலாவதியான பிறகு அணுசக்தி நாடுகளுக்கு இடையே ஓர் ஒப்பந்தம் சாத்தியமா என்ற கேள்விக்கு, இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தத்தை எட்டுவதே மிகவும் கடினமாக இருப்பதாக நடாலி டூச்சி தெரிவித்தார். ''இதில் சீனா பங்கேற்காது. அமெரிக்கா மற்றும் ரஷ்யாவை விட தன்னிடம் மிகக் குறைவான அணு ஆயுதங்களே இருப்பதால், அது கவலைக்குரிய விஷயம் அல்ல என்று சீனா வாதிடுகிறது. மேலும் இந்தியாவிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதை சீனா சுட்டிக்காட்டும், அதே வேளையில் பாகிஸ்தானின் ஆயுதங்கள் குறித்து இந்தியா கேள்வி எழுப்பும்.

அணு ஆயுதக் கட்டுப்பாடு குறித்துப் பேச்சுக்கள் நடந்தாலும், ரஷ்யா மற்றும் அமெரிக்காவைத் தவிர மற்ற அணுசக்தி நாடுகளை ஒப்பந்தத்தில் சேர்க்க குறிப்பிடத்தக்க முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே, எதிர்காலத்தில் பல நாடுகளை உள்ளடக்கிய ஒப்பந்தமும் சாத்தியமாகும் என்று நான் நினைக்கவில்லை'' எனப் பகிர்ந்து கொண்டார் நடாலி டூச்சி. அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையிலான அணு ஆயுதக் கட்டுப்பாடு குறித்த கடைசி ஒப்பந்தம் முடிவுக்கு வந்த பிறகு, இந்த விவகாரத்தில் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கும்.

அணு ஆயுதங்களை தயாரிக்கும் திறன் கொண்ட சில நாடுகள் என்ன செய்யும் என்பதை கணிப்பதும் கடினம். நட்பு நாடுகள் மீதான நம்பிக்கை குறைந்து வருவதால், சில நாடுகள் அணு ஆயுதங்களை உருவாக்குவதில்லை என்ற கொள்கையை மாற்றிக்கொள்ள நேரிடும்.

நிபுணர் அலெக்ஸாண்ட்ரா பெல்லின் கூற்றுப்படி, ''பனிப்போர் காலத்தில் இருந்தது போலவே நாம் மீண்டும் அணுசக்தி போர் அச்சுறுத்தலை எதிர்கொள்வோம். இந்த முறை அதிர்ஷ்டம் நம் பக்கம் இல்லாமல் போகலாம்.''

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்




# சொல்றாங்க... சொல்றாங்க...



கிரீன்லாந்து விவகாரம் எங்களுக்கு தேவையற்றது”

**புதின்**


(அதானே! அவங்க உக்ரைனை கண்டுக்கிறாங்களா? அதுபோல நீங்களும் கண்டுக்காம போகப் பாக்கறீங்க?)



“நான் எதையாவது தேடிச் செல்லும்போது அது துரதிர்ஷ்டமாக அமைவதாக உணர்கிறேன். நான் எதற்குத் தகுதியானவனோ அதைக் கடவுளிடம் இருந்து பெறுகிறேன்.”

**ஏ.ஆர்.ரஹ்மான்**

(அடடா! என ஒரு தெளிவு! ஆனாலும், முன்னே மாதிரி நீங்க அமைதியா இருக்கறதுதான் நல்லது!)



“பத்ம பூஷன்’ மம்முட்டிக்கும் எனக்கும் உள்ளது. கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பு எங்களுடையது”

**கமல்**

(நல்லவேளை! அந்தக் கதை நம்ம சேட்டனுக்குத் தெரியாது! அதை நீங்க சொன்னாலும் யாருக்கும் புரியப் போறதில்லே!)



ஆளுநர் உங்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

**அண்ணாமலை**

(அதை விடுங்க, இவங்க அவருக்கு பாராட்டுப் பத்திரம் வாசிக்கணும்னு எதிர்பார்க்கிறீர்களா? )

# குரங்கு கையில்

**அணு ஆயுத சூட்கேசை செயல்படுத்திய ரஷ்ய அதிபர் – உலகம் பேரழிவின் விளிம்பு வரை சென்ற திகில் நிமிடங்கள்**

வடதுருவ ஒளியை ஆய்வு செய்வதற்காக 1995—ஆம் ஆண்டு ஜனவரி 25—ஆம் தேதி நார்வே ஏவிய ஒரு ராக்கெட், மாஸ்கோவை நோக்கி வரும் அணு ஆயுத ஏவுகணை என ரஷ்யாவால் தவறாகக் கருதப்பட்டது. ஒரு புதன்கிழமை மதிய வேளையில், அந்த உறைபனி குளிர்கால நாளில், சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக உலகம் ஒரு பயங்கரமான பனிப்போர் கால கனவை நேருக்கு நேர் சந்தித்தது.

வடக்கு ரஷ்யா முழுவதும் இருந்த ரேடார் நிலையங்களில் பணியில் இருந்த ராணுவ தொழில்நுட்ப வல்லுநர்கள், தங்கள் திரைகளில் ஒரு அச்சுறுத்தும் புள்ளியைக் கவனித்தனர். நார்வே கடற்கரைக்கு அப்பால் எங்கோ ஒரு ராக்கெட் ஏவப்பட்டு, அது அதிவேகமாக மேலே எழுந்து கொண்டிருந்தது. அது எங்கே சென்றுகொண்டிருந்தது? அது ஒரு அச்சுறுத்தலா? என்ற கேள்விகள் எழுந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக, பெர்லின் சுவர் இடிந்து விழுந்தபோதே இத்தகைய அணு ஆயுதப் பதற்றங்கள் மறைந்துவிட்டதாகப் பெரும்பாலானோர் நம்பியிருந்தனர். வான்வெளியைக் கண்காணித்துக் கொண்டிருந்தவர்களுக்கு, அதன் விளைவுகள் அச்சமூட்டுவதாக இருந்தன.

அந்தப் பகுதியில் உள்ள ஒரு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவப்படும் ஒரு ஏவுகணை, அடுத்த 15 நிமிடங்களுக்குள் மாஸ்கோ மீது எட்டு அணு ஆயுதங்களைக் கொண்டு தாக்க முடியும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். இந்தச் செய்தி உடனடியாக ரஷ்ய அதிபர் போரிஸ் யெல்ட்சினுக்கு அனுப்பப்பட்டது.

அணுகுண்டுகளை வெடிக்கச் செய்வதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்ட "அணு ஆயுத சூட்கேசை" செயல்படுத்திய உலகின் முதல் தலைவர் இவர் தான்.

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததிலிருந்து,






அணு ஆயுத நாடுகளுக்கிடையே ஒரு தாக்குதல் நடந்தால் அது இரு தரப்பினரின் முழுமையான அழிவிற்கே வழிவகுக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் அணு ஆயுதம் ஏந்திய நாடுகள் தடுப்புக் கொள்கையை செயல்படுத்தி வருகின்றன.

அந்தப் பதற்றமான தருணத்தில், இதற்குப் பதிலடி கொடுக்க வேண்டுமா வேண்டாமா என்பதை யெல்ட்சினும் அவரது ஆலோசகர்களும் அவசரமாகத் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த அபாயகரமான நிகழ்வுகள் பெரும் பேரழிவில் முடியவில்லை. இவ்வளவு பதற்றங்களுக்கு மத்தியிலும், அன்றிரவு செய்திகளின் இறுதியில் இந்தத் தகவல் ஒரு நகைச்சுவையான செய்தியாகவே முடிந்தது. டாம் லெரரின் நகைச்சுவைப் பாடலுடன் **(We Will All Go Together When We Go)** அந்தச் செய்தி வாசிக்கப்பட்டது.

## கிரெக் மெக்கெவிட்

பிபிசியின் நியூஸ்நைட் தொகுப்பாளர் ஜெரமி பேக்ஸ்மேன் இது குறித்துக் குறிப்பிடுகையில், "நாங்கள் விடைபெறுவதற்கு முன், ஒரு செய்தியைப் பதிவு செய்ய வேண்டும். ஒரு ரஷ்ய செய்தி நிறுவனத்தின் தீவிரமான முயற்சிகளையும் மீறி, இன்று அணு ஆயுதப் போர் வெடிக்கவில்லை. மதியம் 1:46 மணியளவில், ரஷ்யா ஒரு ஏவுகணையைச் சுட்டு வீழ்த்தியதாக மாஸ்கோவின் 'இன்டர்ஃபாக்ஸ்' செய்தி நிறுவனத்தை மேற்கோள் காட்டி தகவல்கள் வரத் தொடங்கின."

"உலகம் அழியப்போவதை நேரில் பார்க்கப் போகிறோம் என்று நினைத்த செய்தியாளர்கள், உடனடியாக பாதுகாப்பு அமைச்சகத்தைத் தொடர்புகொண்டனர். ஒரு செய்தித்தொடர்பாளர் சற்றும் பதற்றமின்றி, 'பிரிட்டன் ரஷ்யா மீது எந்த ஏவுகணையையும் ஏவவில்லை என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்' என்று உறுதியாகத் தெரிவித்தார்." இது குறித்து பென்டகன் செய்தித் தொடர்பாளரும், "எங்களிடம் இருப்பவை எல்லாம் தகவல்களைப் பற்றிய செய்திகள் மட்டுமே" என்று ஒன்றும் அறியாதவராகக் கூறினார். உலக நாணயச் சந்தைகள் தடுமாறின. அதே நேரத்தில் அரசியல்வாதிகள், ராணுவத் தளபதிகள்



மற்றும் பத்திரிகையாளர்கள் தகவல்களைத் திரட்டுவதற்காக ஒரு மணி நேரம் தீவிரமாகப் போராடினர். கிரீன்விச் நேரப்படி மதியம் 02:52 மணியளவில், இந்த சாத்தியமான நெருக்கடியைப் பற்றி அறிந்திருந்தவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ரஷ்யாவின் முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பு ஒரு ஏவுகணை ஏவப்பட்டதைப் பதிவு செய்திருந்தாலும், அந்த ராக்கெட் நார்வே எல்லைக்குள்ளேயே விழுந்ததாக இன்டர்ஃபாக்ஸ் தனது செய்தியைத் திருத்தியது. பின்னர், நார்வே பாதுகாப்பு அதிகாரி ஒருவர், இந்த ராக்கெட் அமைதியான நோக்கத்திற்காக ஏவப்பட்டது என்பதை உறுதிப்படுத்தினார்.

இது பொதுமக்களுக்கான ராக்கெட் ஏவுதளத்தில் மேற்கொள்ளப்பட்ட வழக்கமான அறிவியல் ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். அரோரா பொரியாலிஸ் என்று அழைக்கப்படும் தனித்துவமான வானிலை நிகழ்வான வடதுருவ ஒளியைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. அந்த ராக்கெட் திட்டமிட்டபடி ஆர்க்டிக் தீவான ஸ்பிட்ஸ்பெர்கனுக்கு அருகிலுள்ள கடல் பகுதியில் விழுந்தது. இது ரஷ்ய வான் எல்லைக்கு மிகத் தொலைவிலேயே அமைந்திருந்தது.

இந்தச் செய்தி தவறு என்று தெரிந்து பல மணிநேரத்திற்குப் பிறகு, பெயர் குறிப்பிட விரும்பாத ரஷ்ய பாதுகாப்புத் துறையினர், தங்கள் முன்கூட்டிய எச்சரிக்கை ரேடார் அமைப்பைச் சோதிக்கவே இந்த ஏவுதல் நடத்தப்பட்டதா என்பது பற்றிச் சொல்ல "இன்னும் சற்று நேரம் தேவை" என்று இன்டர்ஃபாக்ஸிடம் தெரிவித்தனர்.




1987—ஆம் ஆண்டு, மத்தியாஸ் ரஸ்ட் என்ற மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பதின்ம வயது இளைஞன், ஒற்றை எஞ்சின் கொண்ட சிறிய விமானத்தில் சோவியத் ஒன்றியத்தின் அனைத்து பாதுகாப்பு வளையங்களையும் மீறி 500 மைல் (750 கி.மீ) பறந்து சென்று கிரெம்ளின் மாளிகையின் வாசலிலேயே தரையிறங்கினார். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ரஷ்யா தனது வான் பாதுகாப்புத் திறன்கள் குறித்து மிகவும் கவனமாகவே இருந்து வந்தது.

அப்போது பனிப்போர் முடிவுக்கு வந்திருந்தாலும், சில ரஷ்ய அதிகாரிகள் அணு ஆயுத அச்சுறுத்தல் குறித்து இன்னும் பதற்றத்துடனேயே இருந்தனர் என்பதற்கு இது ஒரு அறிகுறியாக அமைந்தது.

"எங்களுடைய வழக்கமான ஏவுதல் முயற்சிக்கு இவ்வளவு பெரிய கவனம் கிடைத்ததை அறிந்தபோது நான் பயந்துவிட்டேன் " என்று நார்வே விஞ்ஞானி கோல்பியர்ன் அடோல்ஃப்சென் கூறினார். தொலைபேசி அழைப்புகள் வரத் தொடங்கியபோது அவர் ஒரு கூட்டத்தில் இருந்தார். இதில் மிகவும் விசித்திரமான விஷயம் என்னவென்றால், பல வாரங்களுக்கு முன்பே நார்வே இந்த ராக்கெட் ஏவுதல் திட்டம் குறித்து ரஷ்யாவிடம் தெரிவித்திருந்தது.

வடதுருவ ஒளி ஆராய்ச்சி ராக்கெட் 908 மைல் உயரத்தை எட்டும் வகையில் ஏவப்பட்டது இதுவே முதல் முறை என்பதால் ரஷ்யர்கள் இவ்வாறு எதிர்வினை ஆற்றியிருக்கலாம் என்று அடோல்ஃப்சென் குறிப்பிட்டார். இருப்பினும், இது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கக் கூடாது என்று அவர் கூறினார். "டிசம்பர் 14 அன்று




வெளியுறவு அமைச்சகம் மூலம் சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் நாங்கள் ராக்கெட் ஏவப்போகிறோம் என்ற செய்தி அனுப்பப்பட்டது," என்று அவர் தெரிவித்தார்.

இருந்தும் ஏதோ ஒரு காரணத்தால், அந்த எச்சரிக்கைச் செய்தி சரியான அதிகாரிகளின் மேசைக்கு சென்றடையவில்லை. ஒரு தகவல் தவறிப்போவது எவ்வளவு பெரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதற்கான ஒரு கசப்பான நினைவூட்டலாக இச்சம்பவம் அமைந்தது.

அணுசக்தி யுகம் தோன்றியதிலிருந்து, ஒருவர் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமான ஆபத்தான நெருக்கடியான தருணங்கள் ஏற்பட்டுள்ளன.

இது 1962ஆம் ஆண்டு நடந்த கியூபா ஏவுகணை நெருக்கடி பனிப்போர் காலத்தில் அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் முழுமையான அணு ஆயுதப் போரில் இறங்குவதற்கு மிக அருகில் சென்ற தருணமாக இருந்தது.

2020—ஆம் ஆண்டு, பிபிசி ஃப்யூச்சர் வெளியிட்ட செய்தியில், இடம்பெயரும் அன்னப்பறவைகள், நிலவு, கணினி கோளாறுகள் மற்றும் விண்வெளி வானிலை போன்றவற்றால் கூட தவறான எச்சரிக்கைகள் எழுந்ததாக குறிப்பிடப்பட்டது.

1958—ஆம் ஆண்டு, ஒரு விமானம் தவறுதலாக ஒரு குடும்பத்தின் தோட்டத்தில் அணுகுண்டை வீசியது. அதிர்ஷ்டவசமாக அதில் அவர்களின் கோழிகள் மட்டுந்தான் உயிரிழந்தன. 1966—ஆம் ஆண்டு, ஒரு ஸ்பெயின் கிராமத்தின் மீது இரண்டு அமெரிக்க ராணுவ விமானங்கள் மோதிக் கொண்டன. அவற்றில் ஒன்று நான்கு அணு ஆயுதங்களை எடுத்துச் சென்றது.

2010—ஆம் ஆண்டில்கூட, அமெரிக்க விமானப்படை தற்காலிகமாக 50 ஏவுகணைகளுடன் தொடர்பை இழந்தது. இதனால் தானியங்கி ஏவுதலைக் கண்டறியவோ தடுக்கவோ எந்த வழியும் இல்லாத நிலை ஏற்பட்டது.

ஆபத்தான தருணம்

அக்காலகட்டத்தில் ரஷ்யாவிலிருந்த பலரும், தான் முதன்முறையாக அணு ஆயுத சூட்கேசை பயன்படுத்தியதாக யெல்ட்சின் கூறிய அறிவிப்பை வெறும் பேச்சாகக் கருதி நிராகரித்தனர்.

அப்போது தீவிரமடைந்து கொண்டிருந்த செச்னியா போரிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பவே அவர் அவ்வாறு கூறியதாக அவர்கள் கருதினர்.

"நேற்று நான் முதன்முறையாக என் 'கருப்பு' சூட்கேஸைப் பயன்படுத்தினேன், அது எப்போதும் என்னுடன் எடுத்துச் செல்லப்படும் பொத்தானைக் கொண்டது" என்று அவர் மறுநாள் இன்டர்ஃபாக்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார். மேலும் "எங்கள் ராணுவம் பலவீனமாக இருப்பதாக ஊடகங்கள் எப்போதும் கூறிக் கொண்டிருப்பதால், யாரோ எங்களைச்

சோதிக்க முடிவு செய்திருக்கலாம்," என்றும் அவர் கூறினார். நார்வே ராக்கெட் பீதி குறித்த 'நியூஸ்நைட்' அறிக்கை மேலோட்டமானதாகவோ அல்லது கேலியாகவோ இருந்திருக்கலாம், ஆனால் இந்தச் சம்பவத்தின் தீவிரம் குறித்து கருத்துகள் மாறுபடுகின்றன. ஒரு முன்னாள் சிஐஏ அதிகாரியின் கூற்றுப்படி, இது "அணு ஆயுத




காலத்தின் மிகவும் ஆபத்தான தருணம்" ஆகும்.

ராணுவ ஆலோசகர் பீட்டர் ப்ரை இதுகுறித்து கூறுகையில், "உண்மையான அச்சுறுத்தல் இருப்பதாக கருதப்பட்ட சூழ்நிலையில், உடனடியாக உலகமெங்கும் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுதத் தாக்குதலைத் தொடங்க முடிவு எடுக்கக்கூடிய நிலையில், எந்த அணு சக்தி நாட்டின் தலைவரும் இதற்கு முன் ரஷ்யாவின் 'அணு ஆயுத சூட்கேசுக்கு இணையான தனது கருவியை இவ்வளவு தீவிரமாக திறந்ததில்லை"என்றார்.

இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையின் அணு ஆயுதக் குறைப்பு ஆராய்ச்சியாளர் பாவெல் போட்விக் இதுகுறித்துக் கூறுகையில், "இந்தச் சம்பவங்களை நான் வரிசைப்படுத்தினால்... இதற்கு 10—க்கு 3 மதிப்பெண்களை மட்டுமே கொடுப்பேன். பனிப்போர் காலத்தில் இதைவிட மிகவும் தீவிரமான சம்பவங்கள் நடந்துள்ளன." என்றார்.

அணு ஆயுத சூட்கேஸ் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சூழல், யெல்ட்சினுக்காகத் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு நாடகமாகக்கூட இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். ரஷ்ய அணு ஆயுத நிபுணர் விளாடிமிர் டிவோர்கின் கூறுகையில், நார்வே ராக்கெட் எச்சரிக்கையினால் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை, "நிச்சயமாக இல்லை" என்றார்.

அவர் 1998—இல் வாஷிங்டன் போஸ்ட் இதழுக்கு அளித்த பேட்டியில், "எச்சரிக்கை அமைப்பு ஒரு மிகப்பெரிய தாக்குதல் குறித்து சமிக்ஞை கொடுத்தாலும் கூட, ஒரு ஏவுகணை ஏவப்பட்டதைக் கண்டு பதற்றமடையும் ஒரு பகுத்தறிவற்ற தலைவர் கூட உடனடியாக (தாக்குதலுக்கான) முடிவை எடுத்துவிட மாட்டார். இது ஒரு வெறும் வீண் எச்சரிக்கை என்றே நான் நினைக்கிறேன்." என்று தெரிவித்தார்.

சம்பவம் நடந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, பிபிசி வானொலி செய்தி அறிவிப்புகளில், அந்த எச்சரிக்கையை ரஷ்யா "ஒரு தவறான புரிதல்" காரணமாக ஏற்பட்டதாகக் குற்றம் சாட்டியதாகவும், அது மீண்டும் நடக்கக் கூடாது என்று தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. வெளியுறவுத் துறை பேச்சாளர், நார்வே வழக்கமான நடைமுறைகளின் படி செயல்பட்டதாகவும், அவர்கள் மீது எந்தவித விரோத உணர்வும் இருக்கக் கூடாது என்றும் கூறினார்.

பேரழிவு தவிர்க்கப்பட்டிருந்தாலும், சாதாரண வானிலை ஆய்வு ராக்கெட் ஒன்றால் இவ்வளவு பெரிய பதற்றத்தை ஏற்படுத்த முடிந்தது என்பது இன்னும் அச்சமளிப்பதாகவே உள்ளது.


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# தமிழே

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து...

திருக்குறள் தமிழ்மறை என்று கொண்டாடப்படுகிறது. உலகுக்கு தமிழ் அளித்துள்ள கொடை திருக்குறள் என்னும் அளவுக்கு உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மனித குலம் முழுமைக்குமான பொதுவான வாழ்வியலை வகுத்துக் கொடுக்கிறது திருக்குறள் என்பதால், அதை உலகப் பொதுமறை என்று கொண்டாடுகிறோம்.

தமிழ் அறியாத தமிழர்கள்கூட திருக்குறள் என்றதும் தங்களைத் தமிழர்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்வது இயல்பு. வள்ளுவப் பேராசான், "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்று எந்த தெய்வத்தையும் குறிப்பாகச் சொல்லாமலும் இறைவனைக் குறிப்பிட்டும் சொல்லிவிட்ட பான்மையை அனைவரும் போற்றுகின்றனர்.



இறைவன் இருக்கிறான் என்றுதான் திருக்குறள் தொடங்குகிறது. "மூல முதல்வன்' என்று இறைவனைக் கொண்டாடும் பாரத மரபில் சற்றும் பிசகாது திருக்குறளும் ஆதிபகவன் என்று வணங்குகிறது.

திருக்குறள் நான்மறையின் சாரம் என்று சங்கப் புலவர்கள் சொல்கிறார்கள். சங்க இலக்கியத்தை, சங்கப் புலவர்களை நமது தனித்த அடையாளம் என்று கொண்டாடுகிறோம். திருக்குறளின் பெருமைகளைத் திருவள்ளுவ மாலை இயம்புகிறது.

வெள்ளி வீதியார் தமிழ் அறிந்தோர் நன்கறிந்த சங்கப் புலவர். அவர்,செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே' —என்று பாடுகிறார். அதாவது, நால்வேதங்கள் சொல்லும் பொருளையே திருவள்ளுவரின் திருக்குறளும் சொல்கிறது என்கிறார்.

"நான் மறையின் மெய்ப் பொருளை
முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த்
தந்துரைத்த" —என்று உக்கிரப் பெருவழுதியார் நான்முகக் கடவுளே திருவள்ளுவராகப் பிறந்து திருக்குறள் எழுதினார் என்கிறார்.

திருவள்ளுவமாலை ஒரு தொகுப்பு நூல்.

# தமிழே

## கோதை ஜோதிலட்சுமி

திருக்குறளை நன்குணர்ந்த புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு. பழைய திருக்குறள் பதிப்புகளில் திருவள்ளுவ மாலையும் சேர்த்தே அச்சிடப்பட்டிருக்கும். வள்ளுவம் போற்றுவோர் கட்டாயம் படிக்க வேண்டிய நூல். வள்ளுவம், சாதாரண மனித அறிவுக்குள் அடங்கக் கூடியதல்ல. இரண்டடிகள் கொண்ட ஒற்றைக் குறளுக்குள் புதிது புதிதான பொருள்கள் விரிந்து கொண்டே இருப்பது அதன் தனிச் சிறப்பு. அதனை வள்ளுவப் பேராசான் எப்படி எழுதினாரோ அப்படியே புரிந்து கொள்ள முயல்வதுதான் தமிழுக்கு நாம் செய்யக்கூடிய தொண்டாக இருக்கும். நாம் நம்பும் சித்தாந்தங்களுக்குள் அதை அடைக்க முற்படுவதும் குறுக்க முயற்சிப்பதும் அறியாமையின் வெளிப்பாடாகும்.

ஈராயிரம் ஆண்டுகளில் ஆயிரக்கணக்கானோர் ஆராய்ச்சி செய்து நூல்கள் எழுதிவிட்ட பின்னும் இன்றைக்கும் மாணவர்களுக்கு ஆராய்ச்சிக்கான இடமும் பொருளும் திருக்குறளில் இருக்கிறது.

திருக்குறள் இன்றைக்கும் நாம் பேசும் மொழியில் புரிந்து கொள்ள எளிமையாகவே இருக்கிறது என்றாலும், அதன் நுட்பங்களைப் புரிந்து கொள்ள நமக்கு இதுவரை அதிலே ஆழம் கண்ட பெருமக்களின் வழிகாட்டுதலும் வேண்டும். இலங்கை ஜெயராஜ் ஐயா குறிப்பிடுவதைப்போல நமக்குப் பொருள் விளங்கச் செய்வதற்காகவே உரையாசிரியர்கள் வழிகாட்டுகிறார்கள். அவர்களை விலக்கிவிட்டு நாம் நமது சிற்றறிவு கொண்டு திருக்குறளைப் புரிந்து கொள்வது "பார்வையற்றோர் யானையைத் தடவிக் கண்டதைப் போலவே' இருக்கும்.

"உரையாசிரியர்கள் பண்டைத் தமிழ் நூல்களுக்குச் செய்த ஒரு பெருந்தொண்டு மூலச் செம்மையாகும்' என்பார் வ.சுப.மாணிக்கம். அதாவது இடைச்செருகல்கள் ஏற்படாமல் காத்தவர்கள் உரையாசிரியர்களே. இவர்கள் தரும் விளக்கங்கள் நமது நம்பிக்கைகளுக்கும் சித்தாந்தங்களுக்கும் புறம்பாக இருப்பதால் அவற்றை ஒதுக்கிவிட முடியாது.

திருக்குறளுக்கு உரை எழுதியவர்கள், தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் வள்ளுவர் நூற்கு எல்லையுரை செய்தாரிவர்.



இவர்களுடைய உரைகளையும் கொண்டே நாம் திருக்குறளுக்குப் பொருள் கொள்ள வேண்டும். அவர்களில் எவரும் திருக்குறளை இறைநம்பிக்கை



இறைவனடி சேர்வது குறித்தும் பதிவு செய்து வைத்திருக்கிறார். பரமபதம் என்பதிலும் அவருக்கு நம்பிக்கை இருக்கிறது அதனால்தான், “தாமரைக் கண்ணான் உலகு’ என்று பரமபதத்தைச் சொல்கிறார்.

உலகத்தைப் படைத்தவன் இறைவன் என்பதை “உலகியற்றியான்” என்று பாடும் வள்ளுவம்,

“மடிஉளான் மாமுகடி என்ப மடிஇலான்

தாள்உளான் தாமரையினாள்’ (617) —என்று “சோம்பல் இல்லாத முயற்சி உடையவனிடம் திருமகள் தங்குவாள், சோம்பல் உடையவனிடம் மூதேவி தங்குவாள்’ என்று தாமரைக்கண்ணான் மனைவியையும் பாடுகிறார். இறைநம்பிக்கை இல்லாதவர்கள்கூட இந்தக் குறளுக்கு வேறு பொருள் காட்ட இயலாது.

அறம், பொருள், இன்பம் என மூன்றாகப் பகுத்து நூல் செய்த வள்ளுவப் பேராசான், மூன்று பகுப்புகளிலும் இறை நம்பிக்கையைப் பிரிக்க இயலாத வகையில் பிணைத்து வைத்துள்ளார். மூல முதல்வன் என்று தொடங்கி ஸ்ரீ ராமர் வரை திருக்குறள் பாடாத தெய்வங்கள் இல்லை.

அற்றதாகச் சொல்லவில்லை.

சமயம் கடந்த நூல் வள்ளுவம் என்று அதற்கு ஒரு புதிய வண்ணத்தைக் கொடுக்க முயற்சி செய்கிறார்கள். உண்மையில் திருமாலை, சிவனை, திருமகளை என்று இறைநம்பிக்கையை அழுத்தமாகப் பதிவு செய்கிறார் திருவள்ளுவர். ஏற்றத்தாழ்வற்ற பார்வை வள்ளுவருக்கு இருக்கிறது எனில், அவர் பின்பற்றிய சமயமும் அவர் பாடும் தெய்வங்களை வழிபடும்

மார்க்கமும், அந்த மக்களின் கலாசாரமும் எத்தகைய இயல்பு கொண்டது என்று புரிந்து கொள்ள வேண்டுமே அன்றி அவரை மதம் அற்றவராகச் சித்தரிக்க முடியாது.

“மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்

தாஅயது எல்லாம் ஒருங்கு’. (610) —இந்தக் குறளில் அடியளந்தான் என்ற சொல் வாமன அவதாரம் கொண்டு உலகைத் தனது திருவடிகளால் அளந்த திருமாலையே சுட்டுகிறது. “எல்லா உலகையும் அளந்த இறைவன் என்று இதற்குப் பரிமேலழகர் பொருள் கூறுகிறார்.

108 முறை ஜபம் செய்வது, 108 தேங்காய் உடைப்பது என்று ஹிந்து மரபில் காணப்படும் வழக்கத்தை அப்படியே பின்பற்றி ஒவ்வொரு பகுப்புக்கும் 108 அதிகாரங்களை அமைத்துள்ளவரின் சமய நம்பிக்கையை வியக்காமல் இருக்க முடியுமா? சமய சார்பற்றவர் என்ற கருத்துக்கு இங்கே இடமில்லை. மாற்று சமயங்களைச் சாடாதவர் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இறையைப் பாடும் வள்ளுவம் சமயக் கோட்பாடுகளையும் பாடத் தவறவில்லை.

‘யதோ தத: க்ருஷ்ண: யத: க்ருஷ்ண: ததோ ஜய:

தர்மஏவ ஹதோ ஹந்தி தர்மோ ரக்ஷதி ரக்ஷித:’ —இவை மகாபாரதத்திலும் மனுஸ்ம்ருதியிலும் இடம்பெறும் வாசகங்கள்.



தர்மம் எங்கே இருக்கிறதோ அங்கு க்ருஷ்ணன் இருக்கிறான்.

க்ருஷ்ணன் எங்கே இருக்கிறானோ அங்கு ஜயம் இருக்கிறது. தர்மத்தை எவன் அழிக்கிறானோ அவனை தர்மம் அழிக்கிறது. தர்மத்தை எவன் காக்கிறானோ அவனை தர்மம் காப்பாற்றுகிறது. இந்தக் கருத்தை அப்படியே செங்கோன்மை



அதிகாரத்தில் வைக்கிறது வள்ளுவம்.

“இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின்’. (குறள் 547) —அதாவது, நீதி வழுவாமல் ஓர் அரசன் ஆட்சி செய்தால் அவனை அந்த நீதியே காப்பாற்றும்.

ஹிந்துக்களின் நம்பிக்கையான மறுபிறப்பு, எழுபிறவி, வினைப்பயன், இறைவன் அடி சேர்தல் போன்ற கருத்துகள் அழுத்தமாக வள்ளுவத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொன்மையான பாரத தேசத்தின் சமயக் கோட்பாடுகளே வள்ளுவத்திலும் எதிரொலிக்கிறது. அவருக்கு மதச்சார்பின்மை அடையாளம் அர்த்தமற்றது.

“தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்— கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்’. — (நல்வழி 40)— என்கிறார் ஔவையார்.

அதாவது, திருவள்ளுவரை திருக்குறளை ஹிந்து சமய நூல்களோடு ஒன்றென வைத்துப் பாடுகிறார். திருக்குறள் பற்றி எடுத்துரைக்க ஔவையைக் காட்டிலும் தகுதி உடையோர் யார் உண்டு?

திருவள்ளுவருக்குக்கோயில்சிலநூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. மயிலை கபாலீஸ்வரர் கோயில் திருவிழாவில் நாயன்மார் அறுபத்து மூவரோடு திருவள்ளுவரும் பவனி வருகிறார். அவர் பாடிய சமயம் அவரைக் கொண்டாடுகிறது.

தமிழ் இருக்கும் வரை திருக்குறள் இருக்கும். வள்ளுவத்தைக் கொண்டாடும் வரை நாம் இந்த மண்ணின் சமயத்தையும் கொண்டாடுகிறோம் என்பதே உண்மை.

# அத்துமீறும்

## அதீத வன்முறை – கலைச் சுதந்திரமா? அபாய போக்கா?

2025—ல் பெரும்பாலான திரைப்படங்கள் ஆக்சன் காட்சிகளை மையமிட்டே உருவாக்கப்பட்டிருந்தன.

”இன்றைய திரைப்படங்களில் வன்முறைகள் திரில்க்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. வன்முறை ஆடம்பரமான அலங்கார பொருள் கிடையாது. அது உண்மையைக் காட்டுவதாக இருக்க வேண்டும். மகிழ்ச்சிக்கான விஷயமாக இருக்கக்கூடாது” சொன்னவர் உலகம் வியக்கும் இயக்குநர் மார்ட்டின் ஸ்கார்ஸசி. இன்னொருவர் இருக்கிறார். அவர் சொல்கிறார், “என்னைப் பொருத்தவரை சினிமா என்பது இயக்குநரின் கற்பனை. அதில் வன்முறை நல்ல பொழுதுபோக்கு. அந்த வன்முறையை நீக்கச் சொல்வதென்பது ஓவியனிடம் அவன் வரைந்த ஓவியத்திலிருந்து நிறங்களை நீக்கச் சொல்வதுபோல”. வேறு யார்? இயக்குநர் குயிண்டன் டாரண்டினோதான்.

நம்மூரில் ஆக்சன் திரைப்படங்களை எடுக்கும் இயக்குநர்களுக்கு மேலே சொன்ன இரு இயக்குநர்கள்தான் சீன் ஃபாதர் மாதிரி. ஆனால், இவர்களிடமிருந்து உத்வேகம் அடைந்த நம்முடைய சினிமாக்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றன என்பதை நோக்க வேண்டும். டாரண்டினோவையும், மார்டின் ஸ்கார்ஸசியையும் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு திரைக்குக் கதை சொல்ல வந்தவர்கள் எத்தனை பேர் அந்த இடத்தை அடைந்தார்கள்? டாரண்டினோவை தமிழகத்தில் அழுத்தமாக அறிமுகப்படுத்திய இயக்குநர்களில் ஓரளவேனும் வெற்றி கண்டவராக கார்த்திக் சுப்புராஜைத்தான் சொல்ல வேண்டும். அவரே ரெட்ரோவில் சினிமாவை கலையாகச் சொல்வதா இல்லை ஸ்டைலாக சொல்வதா என்கிற குழப்பத்தில் பழைய கா.சு.வைத் தொலைத்து



படைப்பு

# சுதந்திரம்

சிவசங்கர்

தடுமாறினார்.

இன்று டாரண்டினோவும் மார்டின் ஸ்கார்சியும் நம்மூர் திரைப்படங்களைப் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? நிச்சயமாக ஆஹோ ஓஹோ என்பது சாத்தியமில்லை. காரணம், இந்திய சினிமாவில் ஆண்டிற்கு ஆண்டு வன்முறைக் காட்சிகள் உச்சங்களை நோக்கி நகர்ந்தாலும் அதன்பின்பான உணர்வுகளோ லாஜிக்குகளோ நியாயமாகப் பதிவு செய்யப்படுவதில்லை. சில திரைப்படங்கள் விதிவிலக்காக அமைந்தாலும் பெரும்பான்மை படங்களில் ரத்த ஆறு ஏன் ஓடுகிறது; எதற்கு ஓடுகிறது என்பதே தெரிவதில்லை.

திரைப்படங்களை வெறும் பொழுதுபோக்காக பாருங்கள் என்கிற விமர்சனங்களைப் பார்க்கிறோம். பொழுதுபோக்கிற்காக இங்கு யாரும் இன்னொருவரை விதவிதமாக கொலை செய்வதில்லை; கூரான ஆயுதத்தைப் பார்த்தாலே நமக்கு மரண பயம் வந்துவிடுவதை நீங்கள் கவனிக்கலாம். பார்ப்பதற்கு விசித்திரமாகவும் குரூரமாகவும் இருப்பவை எல்லாம் நம் உயிரை எடுக்க வந்தவையோ என்கிற எண்ணங்களையே கடந்த சில ஆண்டுகளாக பான் இந்திய திரைப்படங்கள் முன்வைத்தும் வருகின்றன.



ஹிட் — 3, கூலி, காந்தாரா — 1, துரந்தர், ஓஜி என அண்மைகால திரைப்படங்களும் அழுத்தமான வன்முறையை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டிருந்தன. பிரம்மாண்ட பட்ஜெட் என்றாலே வன்முறை இருந்தால் மட்டுமே போட்ட பணத்தை எடுக்க முடியும் என்கிற ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட பல இயக்குநர்கள், தயாரிப்பாளர்களுக்கு கதை மற்றும் உணர்வுகள் குறித்து எதுவும் தெரியாமல் இல்லை. அவர்களுக்கு திட்டமிட்ட வணிக நடைபெற வேண்டுமென்றால் அதற்கு மட்டும் உழைத்தால் போதும்.

அப்படி வந்த திரைப்படங்களே ஹிட் — 3, கூலி, ஓஜி ஆகியவை. இப்படங்களின்





வன்முறைகள் இடம்பெற்றதற்கான தேவை என்னவென்றே தெரியவில்லை. ஹிட் — 3 திரைப்படத்தில் குரூரமான காவல்துறை அதிகாரியான நானி குற்றவாளிகளைச் சின்னா பின்னமாக கொத்துக்கறி போட மட்டுமே ஆசைப்படுகிறார்.

கூலியைக் குறித்து என்ன சொல்வது? திரும்பிய பக்கமெல்லாம் லோகேஷ் கனகராஜ் விமர்சிகப்பட்டு வருகிறார். ரசிகர்களின் ரூ. 150—க்கு இரண்டு ஆண்டுகளாக தூக்கமில்லாமல் உழைத்திருக்கிறேன் என படத்தின் மீது எதிர்பார்ப்பைப் புகட்டிவிட்டு படம் வெளியாகி கடும் விமர்சனங்களைச் சந்தித்தபின் ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கு என்னால் படம் இயக்க முடியாது என சொன்னால் எப்படியிருக்கிறது கதை? எந்த ஒரு எமோஷனல் பின்னணியும் இல்லாமல் வெறுமனே துப்பாக்கி, கத்தி, கொக்கிகளைக் கொண்டு திரைக்கதையை நழுவவிட்டு கதையைப் பற்றி எந்தக் கவலையும் படாத படமாகவே திரைக்கு வந்தது.

கூலி கடுமையான விமர்சனங்களைச் சந்தித்ததற்கான காரணம் படம் நன்றாக இல்லை என்பது மட்டுமல்ல. ரசிகர்களின் சிந்தனைத் திறனை மிகக் குறைவாக எடைபோட்டு பிணங்களை எரிக்க எந்திரம் கண்டுபிடித்து அவர்களின் ரசனையை மட்டமான வன்முறைக் காட்சிகளால் சிதறடிக்கலாம் என நினைத்ததுதான். இந்தியளவில் கவனிக்கப்படும் இயக்குநராகவுள்ள லோகேஷ் கனகராஜ், இவ்வளவு பட்ஜெட்களை கொட்டியும் தன் வன்முறைக் காட்சிகள் லாஜிக்குகளை மறைக்கும் என நம்புகிறார் என்றால் இது ஒரு அபாய போக்குதான்.

அண்மையில், ஆதித்ய தர் இயக்கத்தில் வெளியான ரன்வீர் சிங்கின் துரந்தரின் கதை சில உண்மைகளைப் பேசியிருப்பதால் ஒரு பக்க சார்புநிலை எடுத்த திரைப்படமாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆனால், பாகிஸ்தானின் சில குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த ரௌடிகள் எதிராளிகளை வீழ்த்திவிட்டு அவர்களை பாலியல் வன்கொடுமை செய்தவதையும் உடல்களை நார்நாராக கிழிப்பதையும் வழக்கமாக வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதைப்போன்ற பல தகவல்களைக் கொண்டு ஆதித்ய தர் நாயகன் ரன்வீர் சிங்குக்கான ஓர் காட்சியில் சில ரௌடிகள் அவரைப் பாலியல் வன்கொடுமை செய்ய முயற்சி செய்வதும், அக்ஷய் கன்னா ஒருவரை எடைக்கல்லைக் கொண்டே



மண்டையை உடைத்து மூளைச் சிதறவைக்கும் காட்சிகளையும் அமைத்திருந்தார். பாக். ரௌடிகளின் வழக்கங்கள், தாக்குதல் குணங்கள் ஆகியவற்றை கட்டுங்கடங்காத ஆக்ஷன் காட்சிகள் வழியாகவே பதிவு செய்திருந்தாலும் இதனை முற்றிலுமான கண்மூடித்தமான திரைப்படமாகக் குறுக்கவும் முடியவில்லை. காரணம், படத்தில் இடம்பெற்ற வன்முறைக்கான தருணங்களை கதாபாத்திரங்களின் குண உந்துதல்களுடன் கச்சிதமாக எழுதியிருந்தது ஓர் காரணம். 3.30 மணிநேர சினிமா அனைத்து கிராஃப்ட்களிலும் கச்சிதமாக அமர்ந்திருந்தது. இதனால், சில உண்மை சம்பவங்களின் தொகுப்பு என்பதால் மதரீதியான விமர்சனங்களைத் தடுக்கும் கேடயத்தை இயக்குநர் பயன்படுத்திக்கொண்டார்.

எதார்த்த சினிமா என்றில்லாமல் ஹாரர் வழியாகவும் இந்த சுதந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு ஓர் உதாரணம், இயக்குநர் ராகுல் சதாசிவன் — நடிகர் பிரணவ் மோகன்லால் கூட்டணியில் வெளியான’ டயஸ் ஈரே’ திரைப்படத்தில் இடைவேளைக் காட்சி ஒன்று உண்டு. நாயகியின் தம்பிக்கு அசம்பாவிதம் ஒன்று நிகழ்கிறது. அக்காட்சியைத் திரையரங்களில் கண்டவர்களில் பாதி பேர் கண்களை மூடியிருப்பார்கள். உக்கிரமான அந்த ரத்தப்போக்கு காட்சி அப்படத்தின் மனநிலைக்குச் சரியாகப் பொருந்தியது. இயக்குநர் அக்கதையின் மூலம் ஒரு குரூர நிகழ்வைக் கலைச் சாதகமாக மாற்றிக்கொண்டார். இதன் மேல் யாருக்கும் எந்த குற்றச்சாட்டும் எழவில்லை என்பதை கவனிக்க வேண்டும். அப்பையனுக்கு நிகழந்தது ஒரு வன்முறைதான் என்றாலும் செய்தது யார்? என்கிற கேள்விக்கு அமானுஷ்ய பின்னணி அதிலிருந்து வெளியேற உதவியது. இயக்குநர் அந்த ஜாக்பாட் சுதந்திரத்தைப் பயன்படுத்தினார்.

வலுவான நாயகன் என்றாலே தாக்க வருவோரையெல்லாம் தூக்கி போட்டு ரத்தம் சிதற அடித்து நொறுக்கிக் கொண்டே இருக்க வேண்டுமென அவசியமில்லை. நல்ல காட்சிகளுடன் வசனங்கள் இருந்தாலே ரசிகர்கள் அந்தக் கதாபாத்திரத்தை உள்ளிழுத்துக் கொள்கின்றனர். கைதி திரைப்படத்தில் கார்த்தி (தில்லி) தன்னைக் குறித்து சொல்லும்போது, ‘10 வருசமா ஜெயில்ல இருந்ததுதான தெரியும்? அதுக்கு முன்னாடி என்ன பண்ணிட்டு இருந்தேன்னு தெரியாதுல்ல’ என்கிறார். இந்த ஒரு வசனமே தில்லி யாராக இருக்கும் என்பதை கற்பனையில் விரித்துப் பார்க்க போதுமானதாக இருக்கிறது.

ஆனால், இன்று பெரும்பாலும் வன்முறையை நம்பி வேண்டுமென்றே அபத்தமான




உலகம் உருவாக்கப்படுகிறது. வலுவில்லாத கதாபாத்திரங்கள், நேர்மையில்லாத எழுத்து என அவை ரசிகர்களின் வன்முறை டோபமைனை மட்டும் நம்பி மந்தைத்தனமாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதற்காக ஆக்சன்களை மையமாக வைத்து உருவாக்குவதே தவறு எனச் சொல்லவில்லை. எந்த முகாந்திரமும் இல்லாத வெற்று ரத்தக்களறிகள்தான் ஆபத்தானவை. கூலியில் சௌபின் சாகர் மண்டையில் நாகர்ஜுனா சுத்தியலை அடிப்பது, ஹிட் — 3 படத்தில் நானி கோடாரியால் எதிரிகளின் உடல் பாகங்களை வெட்டியே அகற்றுவது என கண்களை மூடச்செய்யும் வன்முறைகள் அதற்கான வலுவான பின்னணிகளை வைத்திருக்கின்றனவா?

இது, அர்த்தமில்லாத வன்முறை ஒரு ஏமாற்று வேலை என்பதையும் அது வன்முறையை இயல்பாக்கும் என்பதையுமே சுட்டுகிறது. மனிதன் அடிப்படையில் வன்முறைக்கான தருணத்தை அன்றாடம் கற்பனை செய்துகொண்டிருப்பன்தான். ஆழ்மன குழப்பங்கள், குற்றவுணர்வுகள்,




> Violence doesn't seem to bother people anymore - they're inured to it. And I think it has a lot to do with the violence in movies and video games - it doesn't bother people as much. I'm not so sure it evokes a reaction anymore.
>
> — Jason Patric —

பழியுணர்ச்சி ஆகியவை முன்னிருத்தி உருவாக்கப்படும் திரைப்படங்களில் வெளிப்படும் வன்முறையே கலையாகக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், கில் பில் போன்ற ஸ்டைலான படங்களாக இருக்க வேண்டும்.

தல்லுமலா, ஆழாப்புழா ஜிம்கானா படங்களை இயக்கிய மலையாள இயக்குநர் கலித் ரஹ்மான் அதைத்தான் செய்துகொண்டிருக்கிறார். ஆனால், இதில் எந்த வகைக்குள்ளும் அடங்காமல் வெறும் ஆயுதக் கையாடல்களையும் ரத்தச் சொட்டுகளை மட்டுமே நம்பி உருவாக்கப்படும் திரைப்படங்கள் வன்முறையின் எல்லை தெரியாதவர்களுக்கு, அதனை மடியில் அமர்ந்து ஊட்டிவிடும் அபத்தங்களாகவே வெளிப்படும்.

அடுத்தாண்டும் பல ஆக்சன் அதிரடியான திரைப்படங்கள் வெளியாகக் காத்திருக்கின்றன. உண்மையில், இதுவரை காட்டிய வன்முறையிலிருந்து இன்னும் மேலேழுவார்கள். இதற்கு மேல், என்ன காட்டப்போகிறார்கள் என்பதில் ஒருவித பதற்றம்தான் எழுகிறது. துரந்தர் — 2, பாரடைஸ், லோகேஷ் கனகராஜ் நடிக்கும் டிசி என ஊகிக்க முடியாத வன்முறைகள் கண்முன் எழுகின்றன. இதுபோக, விஜய் தேவரகொண்டா உடல் முழுக்க ரத்தத்துடன் அருவாளை ஏந்திக்கொண்டு ரௌடி ஜனார்த்தன் திரைப்படம் மூலம் வருகிறார். நம்மூரில் வடசென்னை அரசனும் வருகிறார். டீசரில், டிரைலரில் காட்டப்பட்ட ரத்தகறையெல்லாம் இன்று சாதாரணமாக அறிமுக போஸ்டர்களிலேயே இடம்பெறுகின்றன. இந்த போக்கு படத்திற்கான வணிகத்தையும் நிர்ணயிக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கின்றன. இதனால், எதிர்காலத்தில் யார், யார் எதை எடுத்து வரப்போகிறார்கள் எனத் தெரியவில்லை.

*2025—ன் ஹாரர் திரைப்படங்கள் ஓர் பார்வை!*

இன்று உலகம் முழுவதும் வெளியாகும் ஆக்சன் திரைப்படங்களையும் இணையத் தொடர்களையும் பார்க்கும் ரசிகக் கூட்டம் உருவாகிவிட்டது. எளிதில் அவர்களை திருப்திப்படுத்த முடியாத சூழல்தான் என்றாலும் வன்முறைக்கு பின் இருக்கிற உணர்வுப்பூர்வ தருணங்களையோ அல்லது அழகியலையோ முன்வைக்கத் தெரியாதவர்கள் விதவிதமான கூர் ஆயுதங்களையோ ராணுவ உபகரணங்களையோ கொண்டு எடுக்காத ஒன்றை எடுத்துவிட்டதாக விதந்தோதப்படுகின்றனர்.

ஆனால், இன்று கிடைத்திருக்கிற கலைச் சுதந்திரத்தை வெறும் வணிக நோக்கமாக மட்டும் குறுக்கிக்கொண்டு போலித்தனங்களைப் படைப்பாக முன்னிருத்தினால் அது அபாயமான போக்காகவே மாறும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा




# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 13

### 13 கயல்விழியின் கருங்கல் மாளிகை!

**கொற்றவன்**

பொறையாறில் அன்று இரவு சுழன்றடித்த சூறாவளியை ஊர் மக்களில் ஒருவரும் அறிந்தபாடில்லை!

அதை விடவும் கோட்டைக்குள் சுழன்ற அந்தச் சூறாவளியை கோட்டைக்குள் இருந்த பலருமே அறியாமல்தான் இருந்தார்கள்.

ஆழ்கடலின் அடியில் ஏற்படும் பூகம்பம்போல் அந்த மாலைப் பொழுதில் நிகழ்ந்த சம்பவங்கள் அவ்வளவு கனகச்சிதமாக அமைந்ததற்குப் பின்புலமாகத் தகுந்த காரணங்கள் இருந்தன.

கிரேக்கப் பயணம் முடித்து முசிறிக்குத் திரும்பிய வளவத்திரையனுக்குத் அன்றிரவே ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது.

அது ஒற்றர்கள் மூலம் சேர நாட்டுக்கு வந்த இரகசியச் செய்தி!

பொறையாற்றில், பெரியவரின் மாளிகையை அபகரித்துக் கொண்டு அங்கேயே அவரையும், கயல்விழியையும் சிறைக் கைதிபோல வைத்திருக்கிறான் நெடுமுடியான்.

அத்துடன் அந்தக் கோட்டையிலும் பலமான காவலை அமைத்திருக்கிறான்.

பெரியவரை மீட்க, கிள்ளிவளவன் படை கொண்டு வரும் செய்தி தெரிந்தாலே, அவ்விருவரையும் கொன்றுவிட்டு அவன் தப்பிவிடுவான்!

இப்படியான செய்தியை அறிந்ததும், கயல்விழியைக் காப்பாற்றுவதற்கான வழி என்னவென்று ஆராய்ந்து திட்டம் வகுத்தான் வளவத் திரையன்.

அத்திட்டத்தின் படி, ஒற்றர் தலைவர் உதயணன், மதியொளி குழுவினரைச் சேர்த்து ஐம்பது குதிரை வீரர்களுடனும் பொதிகைமலை வழியாகப் பயணப்பட்டு அடுத்த சில நாட்களிலேயே, சோழ மண்டலத்தின் பொறையாறை வந்தடைந்தான்.

பொறையாறு எல்லைக்கு முன்பாக, ஐந்தைந்து வீரர்களாகப் பிரிந்து, வித விதமான வணிகர்கள் வேடத்திலும், கலைக் குழுவினர் வேடத்திலும் உருமாறி, மாலை வேளையில் ஊருக்குள் புகுந்ததனர்.

இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கான நேரத்தை எதிர்பார்த்து கோட்டைக்குப் பின்புறம் உள்ள மாமரத் தோப்பில் வளவத்திரையன் குழு காத்திருந்தது.

இரவு கோட்டைக்குள் உள்ளவர்கள் இரவு உணவை முடிக்கும் வரை காத்திருந்து, பிறகு திட்டம் அரங்கேற வேண்டும் என உத்தரவிட்டிருந்தான் வளவத் திரையன்.



அந்தத் திட்டப்படி, கோட்டையின் கிழக்கு வாசல் முகப்புக் காவல் வீரர்களின் கவனத்தைத் திசைதிருப்ப அங்கே ஒரு சிறு கலகம் உண்டாக்க வேண்டும். அது கோட்டையின் மேல் நிற்கும் வீரர்களின் கவனமும் முகப்பை நோக்கித் திரும்புவதாக இருக்க வேண்டும்.

அந்தச் சமயத்தில் உதயணன் குழுவினர் கோட்டை முகப்பின் மேல் தளத்தில் இருக்கும் வீரர்கள் ஒவ்வொருவரையும் மடக்கிப் பிடிக்க வேண்டும்.

கோட்டையின் தெற்கு வாசலில் இருக்கும் இரண்டே காவலர்களை மடக்கினால் உள்ளே நுழைவது எளிதாகி விடும். அங்குதான் வளவத் திரையன் குழுவினர் கோட்டைக்குள் நுழைய வேண்டும். நெடுமுடியானைச் சிறைப்படுத்தும் வரை கயல்விழியும் பெரியவரும் அவர்கள் இடத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கானத் திட்டம் துல்லியமாக முன்பே வகுக்கப்பட்டிருந்தது.

இதற்கெல்லாம் உறுதுணையாக கோட்டைக்குள்ளே சகல பகுதிகளையும், அறிந்தவரும், அங்கு நடக்கும் வாடிக்கையான நிகழ்வுகளையும் அறிந்தவருமான பெரியவருக்கு விசுவாசியான ஒருவர் வழிகாட்டி உதுவுவார்.

இதுதான் திட்டம்!

மாலையில் தோப்புக்கு வந்து சேர்ந்த அவர்கள், இரவு இருள் சூழ்வதற்காகக் காத்திருந்தனர்.

நேரம் கூடக்கூட, மரங்களில் வந்தடைந்த புள்ளினங்களில் ஓசையால் அந்தத் தோப்பு அதகளப்பட்டது. இருளும் சூழத் தொடங்கியது.

ஆந்தைகள் அலறலைத்தான் சங்கேத ஒலியாக எழுப்பச் சொல்லியிருந்தான் வளவத் திரையன்.

ஆனால் தோப்பினுள்ளோ உண்மையிலேயே ஆந்தைகள் அலறிக் கொண்டுதான் இருந்தன.

மாமரங்கள் மிகுதியாக இருந்த அந்தத் தோப்புக்குள், ஆங்காங்கே தங்கள் புரவிகளை மரத்தோடு கயிற்றால் பிணைத்து நிறுத்தி விட்டு, வந்திருந்த வீரர்களில் இருவரைப புரவிகளுக்குக் காவலாகவும் வைத்து விட்டு புறப்படத் தயாராக இருந்தான் வளவத் திரையன்.

அந்தச் சமயத்தில்தான் கோட்டைக்குள் இருந்து அந்த ஆந்தையின் ஒலி தொடர்ந்து மூன்று முறை ஒலித்தது.

அதைத் தொடர்ந்து தோப்பின் இருட்டினூடக வளவத்திரையன் குழு நகர்ந்தது.

திட்டப்படி கோட்டையின் கிழக்கு வாயிலை மதியொளியின் குழு நெருங்கிய நேரம், வளவத்திரையன் குழுவும் தெற்கு வாயிலை நெருங்கிருந்தது.

இடையிடையே கோட்டை மதிலின் மீது நின்ற வீரர்கள் ஒவ்வொருவரின் மீதும் தோப்பில் இருந்து வெளிப்பட்ட வீரர்கள் கண்வைத்தபடி இருந்தனர்.

அடுத்த சில நாழிகைகளில் அனைத்தும் திட்டமிட்டபடியே நடந்தது.

கிழக்குவாசலில் ஏற்பட்ட முத்து வியாபாரியின் நாடகம் நன்றாகவே களைகட்டியத்தில், வீரர்களின் கவனம் அங்கு திரும்பியது. கிடைத்த அந்தச் சந்தர்ப்பத்தைப பயன்படுத்திக் கொண்டு வளவத்திரையன் குழு, தெற்கு வாசலில் நுழைந்து காவலாளிகள் இருவரை மடக்கிப் பிடித்து, அவர்களிடம் இருந்து சத்தம் எழாதபடி செய்து, வாயைப் பொத்தி கைகால்களைப் பிணைத்து தூணோடு தூணாக இருளில் கட்டிப் போட்டனர்.



சற்றைக்கெல்லாம் ஆந்தையின் அலறல் தொடர்ந்து மும்முறை ஒலித்ததைத் தொடர்ந்து, தெற்கு வாசலுக்குக் கையில் தீப்பந்தத்துடன் வந்து சேர்ந்தார் கோட்டையின் சமையல்காரப் பெரியவர்.

அங்கே அவருக்காகக் காத்திருந்தனர் வளவத்திரையனுடன் முப்பது வீரர்கள்.

எல்லாம் திட்டப்படி சரியாக நடந்து வருவதை கூறிய வளவத்திரையனிடம், அங்கிருந்து அவர்கள் இரண்டிரண்டு பேராகக் கோட்டையின் கிழக்கு மேற்குப் பக்கங்களில் பிரிந்து சென்றால், ஆங்காங்கே நிற்கும் ஓரிரு காவலர்களை மடக்கி விடலாம் என்றும், அவர்களை உள்ளே வரமுடியாமல் செய்து விட்டால் கோட்டையின் மையத்தில் இருக்கும் மாளிகையில் இருக்கும் நெடுமுடியானின் பாதுகாப்பு செயலிழந்து விடும் என்பதை எல்லாம் விளக்கினார் பெரியவர்.

மைய மாளிகையின் மேல்தளத்தில் கிழக்குப் பகுதியில் தான் பெரியவரும் கயல்விழியும் தனித்தனி அறைகளில் சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், மேற்குப்புறத்தில் நெடுமுடியானும், அவனது ஆபத்துதவிகளும் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் தெளிவாக விளக்கினார்.

அவர்கள் அனைவரும் அதை நன்கு உள்வாங்கிக் காரியமாற்றத் தயாராகினர்.

அடுத்த ஒரு நாழிகையில் அந்தக் கோட்டைக்குள் பெரிய ஆரவாரம் ஏதுமில்லாமல் பல சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன.

ஆனால் அதற்கு நேர்மாறாக, கோட்டையின் பிரதான வாசலில் வெறும் ஐந்தே பேர்களுடன் அட்டகாசம் செய்து கொண்டிருந்தான் மதியொளி.

அதன் காரணமாக, அனைவரின் கவனமும் கோட்டையின் முகப்பிலேயே திரும்பியிருந்தது.

கோட்டைக்குள் நுழைந்த வளவத்திரையன் குழு, கச்சிதமாகக் காரியமாற்றத் தொடங்கியதன் விளைவாக, ஆங்காங்கே நின்றிருந்த வீரர்கள், வாள் முனையில் கைது செய்யப்பட்டு, ஆங்காங்கே உள்ள அறைகளில் ஐந்தாறு பேர்களாக ஓசையின்றி அடைக்கப்பட்டனர்.

வெகு சீக்கிரத்திலேயே கோட்டை வளவத்திரையனின் வசம் சேர்ந்து விட்டபோது, அதன் அறிகுறியாக அவ்வப்போது ஆங்காங்கே ஆந்தையின் அலறல்கள் மும்முறை எழுந்தன.

இறுதியாக, நெடுமுடியானையும், ஆபத்துதவிகளையும் வளவத்திரையன் வெறும் பத்து வீரர்களுடன் எதிர்கொண்டான்.

வாள்முனையில் நிகழ்ந்த அந்த எதிர்பாரத் தாக்குதலில் அவர்கள் எளிதாகவே வீழ்ந்தார்கள். அங்கேயே அவர்களை ஒழித்துக் கட்டியிருக்கலாம் என்றாலும், அவர்கள் அனைவரும் கைகால்கள் பிணைக்கப்பட்டு கைதிகளாக அந்த அறைகளிலேயே அடைக்கப்பட்டார்கள்.

அடுத்த ஒரு நாழிகையில் கோட்டையின் நான்கு வாசல்களிலும் காவலில் தங்கள் வீர்கள் வந்து நின்றபின், பொறையாறு கோட்டை முற்றாக வளவத் திரையன் குழு வசம் வந்து விட்டதை உறுதிப்படுத்தும் விதமாக மயில் அகவும் ஓசையை மும்முறை உதயணன் எழுப்பினான்.

அதைத் தொடர்ந்து கோட்டை பழையபடி அமைதியில் ஆழ்ந்தது.

எந்தக் கலவரமும் அங்கு நிகழ்ந்தாகவே தெரியாதபடி பொறையாறு கோட்டை நிலவொளியில் அமைதியாகக் காட்சி அளித்தது.



அந்த நேரத்தில்தான்…

கயல்விழியின் அறைக்குள் இருந்து ‘அம்மா!...’ என்ற குரல் கேட்கவே சந்தடியின்றி பூட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான் வளவத்திரையன்.

பிடுங்கிப் போட்ட தாமரை மலரெனப பஞ் சணையில் கிடந்த அந்தத் தளிர் மேனியாளைக் கண்டதும், மனமெல்லாம் மகிழ்ச்சி பொங்க, “கயல்விழி” என ஆதுரம் ததும்ப மெல்லிய குரலில் அழைத்தான்.

அவளோ, கண்கள்மூடி மல்லாந்த நிலையில், ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

ஒருவன் உள்ளே நுழைவது கூடத் தெரியாமல் கிடக்கிறாளே என்ற எண்ணத்துடன் அருகில் சென்று நின்றவனுக்குப் புரிந்தது, அவள் தன்னுடன் தான் கனவுலகில் சஞ்சரித்தபடியே புலம்பிக் கொண்டிருப்பது.

சில கணங்கள் நீடித்த அந்தக் கனவுலக உரையாடலின் இறுதியில், “ஏதாவது பேசுங்கள்!” என்றவள், தன்னருகே வந்தமர்ந்திருந்த வளவத்திரையனின் தன் கன்னங்களில் ஒற்றிக் கொண்டபோது, அவன் கயல்விழியின் கரத்தை எடுத்து மார்போடு சேர்த்துக் கொண்டான்.

அக்கணத்தில், தன் கரத்தில் இதயத் துடிப்பை உணர்ந்தவள், சட்டெனக் கண்கள் விழிக்க, தன் மஞ்சத்தின் அருகே ஓர் உருவம் அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியில் அலறப் பார்த்தவளின் அதரங்கள் பொத்தப்பட, அவள் வலக்கரம் சட்டென தன் மஞ்சத்தின் தலையணைக்கடியில் எதையோ துழாவியது.

ஆனால், அதற்குள் அந்த மஞ்சள் மதியின் ஒளியில் அவள் கண்ட அந்த முகமும், அதன் அருகாமையும், அவளுக்குள் இன்பத் தாக்குதல் நிகழ்த்தியதில் நிலைக்குலைந்து மயங்கினாள்.

அந்த மயக்க நிலைக்கு முன்பாக அவள் கரம் துழாவியது என்னவென்று தலையணை அடியில் கைவைத்துப் பார்த்தவனுக்கு குறுவாள் ஒன்று அகப்பட்டது.

அது, தான் விடைபெற்றுச் செல்லும்போது கடலரசியின் கீழ்த் தளத்தில் வைத்து கயல்விழிக்கு வழங்கிய தனது குறுவாள் எனபதை அறிந்தான்.

என்னதான் மனம், தான் காணும் நிழற்காட்சியால் கற்பனையில் மிதந்தாலும், அதே காட்சி நிஜம் என்றாகும் போது அதை ஏற்பதற்கு தடுமாற்றம் கொள்ளவே செய்கிறது.

அந்த நிலையில் மயங்கிக் கிடந்தவளை, அங்கிருந்த நீர்க் குடுவையில் இருந்து நீரெடுத்துத் தெளித்து அவள் மயக்கம் தெளிவித்தான் வளவத் திரையன்.

விழிப்படைந்தவள் பெரும் குழப்பத்துடன், “நான் காண்பது கனவல்லவே?” எனக் கூறி வளவத்திரையனின் கரங்களைப் பிடித்து மீண்டும் தன் கன்னங்களில் ஒற்றிக் கொண்டு அது உண்மைதானா என்பதை உறுதியும் செய்து கொண்டாள்.

அவளது குழப்பம் தீரவே, நடந்ததைச் சுருக்கமாக எடுத்துரைத்தான் வளவத்திரையன்.



“பெரியவரும் நீங்களும் இப்போது மிகவும் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்!” என்றவாறு புன்னகை புரிந்தான்.

அவள் அந்த அறையின் வாயிலைப் பார்த்தாள்.

“பெரியவர்தான், கயல்விழியைப் பார்த்து விட்டு வாருங்கள் என அனுப்பியிருக்கிறார்!”

“அப்படியானால்?...”

“நாம் அங்கு செல்லும் வரை வேறு யாரும் இங்கே வர முடியாது!” அவன் அவ்விதம் சொன்னதன் உள்ளர்த்தம் அவள் விலகக் கொண்டாள்.

“இந்த முகத்தைக் காண எத்தனை நாள் காத்திருந்தேன்...” என்றவளின் குரல் சற்றே உடைந்து வெளிப்பட்டன.

அவள் கண்கள் உடைப்பெடுப்பதற்கு முன்பாகவே அதற்குத் தடையிட்டான் வளவத்திரையன்.

சட்டென கன்னங்களைத் தாங்கிப் பிடித்து “மகிழ்ந்திருக்க வேண்டிய நேரத்தில் மனக் கவலை கூடாது! நீங்கள் அழக் கூடாது!” என்றான்.

சில நொடிகள் அவனையே பார்த்தவள், என்ன நினைத்தாளோ ‘களுக்’கெனச் சிரித்தாள்.

“ஏன் இந்தச் சிரிப்பு?” புன்னகையுடன் வினவினான் அவன். சிரிப்பினூடே எதிர்வினா தொடுத்தாள் அவள்.

“ஏன்? அழத்தான் கூடாது? சிரிக்கவுமா கூடாது?”

“அதற்கென்ன? இது உங்கள் மாளிகை! இந்த இளவரசியார் பிறந்து வளர்ந்த மாளிகை? தேவியார் சிரிக்கலாம்! உலா வரலாம்! ஓடியாடி எங்கும் திரியலாம்! இனி இந்த கருங்கல் மாளிகை... கயல்விழி தேவியாரின் ஆளுகைக்கு சொந்தமான மாளிகை! இங்கே தேவியார் இட்டதுதான் சட்டம்! தேவியார் எங்கும் இருக்கலாம்! எப்படியும் இருக்கலாம்!” அவ்வாறு அவன் சொன்னபோது சாளரத்தில் ஒளியைப் படரவிட்டுக் கொண்டிருந்த மஞ்சள் மதி, மேகத்தில் மறைய, அந்த அறையில் மங்கிய ஒளியும் மறைந்தது.

அறையில் ஒளி குறைந்திருந்தாலும், அவர்கள் இருவருக்குள்ளும் ஒரு புதிய ஒளி சுடர்விட ஆரம்பித்தது.

அது...

அன்பின் எழுச்சி அலைகளை உண்டாக்கும் காதல் ஜோதி!

(கனவு தொடரும்...)


படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

# அலங்கார சொலிப்பு

விரல் பிடித்து
கண்ணாமூச்சி ஆட முடியாமலும்
பறந்து செல்லும்
பலூன்களோடு தொலைந்து போகவும்

குச்சி ஐஸ் குச்சி மிட்டாய்
வாய் ஒழுகி சட்டை நனைய
சப்பி உறிஞ்சி சுவைக்க ஆசைப்பட்டு

தெருவில் ஓடிப் பிடித்து
விளையாடும் சிறுவர்களோடு
சேரக்கூடாதென்று
புத்தாடை அணிவித்து
அலங்கார சொலிப்பில் இருந்தபோதும்

தெருவில் இறங்க வழியின்றி
கட்டி வைத்திருக்கிறார்கள்
உலகநாதனையும் உமையாளையும்

அவர்களின் மனம்
குமுறி வெடிக்கிறது
திருவிழாக்களில்
வாணவெடியாய்
வண்ணப் பட்டாசுகள்...

**சதிஷ் குமரன்**

# விலகியோடல்

நினைவதில்
அத்தனை அலாதி
வரவேண்டுமென
மனதுக்குள் விரும்புகிறார்கள்
மேலே படாதவரை
இதமாயிருக்கிறது
அவர்களுக்கு

விரும்பியிறங்கி
கரைபுரண்டு
பொழிகையில்
விரோதியினைப் போல
விலகியோடும் அவர்களைப்
புரிந்துகொள்ள இயலவில்லை
அடைமழைக்கு.

**வ. ரகுநாத்**

# அப்படியும் இருக்கலாம்

மனித வாசனை நுகராத
நிலத்தில் வேரூன்றி நிற்கின்றன
புன்னை மரங்களும்
வேப்ப மரங்களும்.

வண்டிகளின் ஆரவாரமற்ற
தனிமையில் கதகதக்கிறது
காற்றின் மெல்லிய ஒலி.

நிசப்தமான நிழல்களினூடே
பதட்டமின்றி சுள்ளி சேர்க்கின்றன
சாம்பல் நிற மைனாக்கள்.

மழைக்கு ஒதுங்கவோ
வெயிலுக்குப் பதுங்கவோ
ஆளில்லாத அங்கே காணலாம்
ஓய்வெடுக்கும்
வலசைப் பறவைகளை.

மேற்சொன்னவை அனைத்தும்
காடுகளோடு மட்டும்
தொடர்புடையதெனச்
சொல்லிவிட முடியாது.

மனிதனின் பார்வைக்குத் தப்பி
இரு வீதிகளுக்கு நடுவே
வளைந்தோடும்
சாக்கடைக் கால்வாய்ச் சந்தோடு
சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம்.

**தி. கலையரசி**

## ஒளியிலே...

கைப்பிடித்து
நீண்ட தொலைவு
அழைத்துச்சென்றுவிட்டது
பாலபுத்தனின் புன்னகையோடு
மேஜையின்மீதிருந்த
புத்தகம்
சட்டென மின்சாரம் துண்டிக்கப்பட
பாலபுத்தனை காணவில்லை

தேடிச்சிறு
மெழுகுவர்த்தியொன்றை
ஏற்றுகிறேன்
வகைதொகையில்லாது
வளர்ந்து
அறையெங்கும்
ஆடிக்கொண்டுள்ளான்
புத்தன்.

**தணிகா**

## தமிழில் தப்பிப்பாரா கீர்த்தி?



### கீர்த்திக்கு உண்டாகட்டும் கீர்த்தி!

தெலுங்கில் 'உப்பெனா' படம் மூலம் அறிமுகமானவர் கிர்த்தி ஷெட்டி. அறிமுகப் படமே அவருக்கு பெரிய வெற்றி! அதன்பின் தமிழ், தெலுங்கில் தயாரான 'த வாரியர்' படம் மூலம் தமிழில் அறிமுகமானார். 'கஸ்டடி' 'வா வாத்தியார்' என தமிழில் நடித்த மூன்று படங்களும் ஹிட் ஆகவில்லை! மலையாள அறிமுகப் படமான 'எ.ஆர்.எம்' படம் 100 கோடி வசூலைக் குவித்தது. தெலுங்கு, மலையாளத்தில் வெற்றியைப் பார்த்தவருக்கு தமிழில் மட்டும் வெற்றி கிடைக்காமல் உள்ள நிலையில், 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' படத்தில் பிரதீப் ரங்கநாதனுடனும், 'ஜீனி' படத்தில் ரவி மோகனுடனும் நடித்துள்ளார். அடுத்தடுத்த படங்கள் கீர்த்தியை தமிழ் சினிமாவில் கரை சேர்க்குமா என்பதுதான் அவரது எதிர்பார்ப்பு!

## பிளாஷ் பேக்' தயாராகும் தனுஷ்!



### 'கறை' ஏதுமில்லாமல் வரட்டும் 'கர'!

நடிகர் தனுஷ் — இயக்குநர் விக்னேஷ் ராஜா கூட்டணியில் உருவான திரைப்படம் 'கர.' இது 90—களில் நடக்கும் வங்கிக் கொள்ளை கதையாக உருவாகிறது. இப்படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும் முக்கிய கதாபாத்திரங்களில் ஜெயராம் உள்ளிட்டோரும் நடித்துள்ளனர். ஏப்ரல் வெளியீடாகத் திரைக்குத் தர, தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## காந்தியின் மௌனம்



### நாட்டு நடப்புக்கு காந்தி நிலை இதுவோ?

இயக்குநர் கிஷோர் பாண்டுரங் பெலேகர் இயக்கத்தில் நடிகர்கள் விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி, அதிதி ராவ் ஹைதரி உள்ளிட்டோர் நடிப்பில் வசனங்களே இல்லாத சைலண்ட் திரைப்படமாக உருவாகியுள்ளது காந்தி டாக்ஸ். இந்தப் படம் கடந்த *2023* ஆம் ஆண்டு இந்தியத் திரைப்பட விழாவில் தேர்வாகி, சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வெளியீட்டுக்குத் தயாராகியுள்ள நிலையில், இதன் டிரைலரை வெளியிட்டுள்ளனர். வசனங்களே இல்லாமல் காட்சிகளாக இருந்தாலும் ஏ.ஆர். ரஹ்மானின் பின்னணி இசை ரசிக்க வைக்கிறது.

## சிம்புவுடன் இணையும் மிருணாள்!



### மிருணாளுக்கு ‘பாக்ஸ் நியூஸ்’ ரெடி?

இயக்குநர் வெற்றி மாறன் இயக்கத்தில், வடசென்னை கதையுடன் தொடர்புடைய கேங்ஸ்டர் படமான ‘அரசன்’ திரைப்படத்தில் நடித்து வரும் சிம்பு, அடுத்ததாக ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில், இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து இயக்கத்தில் ‘காட் ஆஃப் லவ்’ படத்தில் நடிக்கிறார். இதில் அவருக்கு ஜோடியாக மிருணாள் தாக்கூர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஏற்கெனவே தனுஷுடன் பேசப்படும் மிருணாள், சிம்புவுடன் நடிப்பதால், கோடம்பாக்கத்தில் புயல் கிளம்பவுள்ளது என்கிறார்கள்.



# தலவலம்

## கோனேரிராஜபுரம்

(சுயம்பு நடராஜர் )

புவனகிரி செயபாலன்

*சுத்த மதியோடு மரவச் சடை சூழ
முந்திய கையேந்தி முதுகாட்டு எரியாழ
சிந்தித்து எழ்வலலார் தீரா வினை தீர்க்கும்
நந்தி நமையாள்வான் நல்ல நகரானே!'*
—திருஞானசம்பந்தர்

274 சிவாலயங்களில் 97—வதும், காவிரி தென்கரை சிவாலயங்களில் 34 ஆவது தலமாகும்.

இறைவன் — உமா மகேஸ்வரர், பூமிஸ்வரர்.

இறைவி — அங்காளநாயகி, தேக சவுந்தரி.

தலவிருட்சம் — வில்வம் (ஒவ்வொரு காம்பிலும் 13 இலைகள்)

தீர்த்தம் — பிரம்ம தீர்த்தம், பூமி தீர்த்தம், ஞான கூபம் (கிணறு)

தலபுராணப் பெயர் — திருவல்லம், பூமிஸ்வரம்.


மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் மேன்மை பெற்றது.

அப்பர், சம்பந்தரால் பாடல் பெற்ற தலம்.

புராண வரலாறு

சோழ மன்னன் கனவில் சிவபெருமான், சிவாலயத்தில் நடராஜர் விக்ரகம் ஒன்றை அமைக்கும்படி உரைத்தார். மன்னன் உடனே மிகச் சிறந்த சிற்பி ஒருவரை வரவழைத்து, பஞ்சலோக நடராஜர் விக்ரகம் ஒன்றை உயிரோட்டமாக 90 நாட்களுக்குள் வடிவமைத்து தர வேண்டும் என உத்தரவிட்டான்.

குறிப்பிட்ட நாட்களுக்குள் சிலை வடிக்கவில்லை என்றால் தண்டனை கொடுப்பேன் என எச்சரித்தான். சிவ பக்தரான அந்தச் சிற்பி ஈசனை வணங்கி தனது பணியினைத் தொடங்கினார். எவ்வளவு முறை செய்தாலும் அதில் ஏதேனும் ஒரு



குறைபாடு ஏற்பட்டு மன்னன் சொன்னது போல் சிலையை சிற்பியால் வடிக்க முடியாமல் போனது.

மன்னன் கூறிய கால அவகாசம் நெருங்க நெருங்க, சிற்பிக்கு கவலையும் ஆதங்கமும் ஏற்பட்டது. இறுதி முயற்சியாக ஒருநாள் சிற்பி கொதித்துக் கொண்டிருக்கும் பஞ்சலோக குழம்பை, தான் செய்து வைத்திருந்த அச்சில் ஊற்றுவதற்கு தயாரானார்.

அப்போது ஈசன் புலையன் உருவத்தில் கையில் நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாகப் பிடித்துக் கொண்டு வந்தார். அவருடன் அம்பிகை தலையில் கள் குடத்தை சுமந்தபடி முருகனைச் சிறு குழந்தை வடிவில் இடுப்பில் வைத்துக் கொண்டு வந்தாள். அவர்கள் இருவரும் வீடு வீடாக சென்று குடிக்கத் தண்ணீர் கேட்டனர்.



இவர்களைப் பார்த்தவர்கள் இழிகுலத்தோர் எனக் கருதி தண்ணீர் தர மறுத்தனர். சிவனும் அம்பிகையும் உலைக்களத்தில் வந்து கவலையுடன் அமர்ந்தனர். அச்சில் வார்க்கத் தயாரான போது இவரிடம் அவர்கள் தண்ணீர் கேட்டனர். சிலையைச் சரியாக வார்க்க முடியவில்லையே என்ற யோசனையில் இருந்தவரிடம் கேட்டபோது, 'உலைக்களத்தில் தண்ணீர் ஏது? வேண்டுமென்றால் உலோகக் குழம்பு இருக்கிறது. குடியுங்கள்!' என்று சொல்லி இவர்களிடம் நீட்டினார். அவர்களும் அதனை வாங்கிப் பருகினர். மறு நொடியே அவர்கள் நின்றிருந்த இடத்தில் நடராஜர், சிவகாமி சிலையாக மாறிப் போனார்கள்.

விஷயம் கேள்விப்பட்டு அங்கு வந்த மன்னன் சிலையைப் பார்த்தான். நடராஜரின் சிலையில் நகங்கள், ரோமங்கள், மச்சம் என உயிரோட்டமாக இருந்ததைக் கண்டதும், மன்னன் ஆச்சரியமடைந்து, 'இவ்வளவு உயிரோட்டமாக ஒரு அதிஅற்புதமான சிலையை எவ்வாறு செய்ய முடிந்தது?' என்று சிற்பியைக் கேட்க, அவர் நடந்ததைக் கூறினார்.

சிற்பி பொய் கூறுவதாக நினைத்த மன்னன், அவரை வெட்ட வாளை ஓங்கினான். அப்போது வாள் சிலையின் காலில் பட, அதிலிருந்து ரத்தம் பீறிட்டது. அதே சமயம் மன்னனுக்கு தொழுநோய் உண்டானது.

தன் தவறை உணர்ந்த மன்னன், ஈசனிடமும் சிற்பியிடமும் மன்னிப்பு கேட்டான். தன் நோய் குணமாக ஈசனிடம் பரிகாரம் கேட்க, இவ்வூர் ஆலயத்தில் உள்ள வைத்தியநாத சுவாமியை 48 நாட்கள் பூஜித்தால் குணமடையலாம் என்று சொல்லி அருளினார். அதன்படி செய்து மன்னன் குணமடைந்தான்.

வரகுணப் பாண்டியன் என்ற மன்னனுக்காக, சிவனும் பார்வதியும் பஞ்சலோகக் குழம்பை அருந்தி நடராஜர், அம்பிகையாக மாறி காட்சியளித்ததாகவும் சொல்லப்படுகிறது.

மன்னனின் வாளால் ஏற்பட்ட காய வடுவை, நடராஜரின் வலது திருப்பாதத்தில் இன்றும் காணலாம். கையில் மச்சம், நகங்கள், ரேகைகள், ரோமங்கள் என இத்தல நடராஜர் உள்ளார்.

கோயில் அமைப்பு

இரு பிரகாரங்களைக் கொண்டது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், வலப்புறம் சண்டிகேஸ்வரர் சன்னதியும், இடப்புறம் கணபதி சன்னதியும் உள்ளன. முகப்பு மண்டபத்தில் அழகிய வண்ண ஓவியங்கள் உள்ளன. சென்ற நூற்றாண்டு கால ஓவியத்தில் கோயிலின் அமைப்பு, புராண வரலாறு, இத்தலத்தில் நடைபெறும் விழாக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

அதற்கு முன் கொடிமரம், பலிபீடம், நந்தி உள்ளன. முகப்பு மண்டபத்தின் வலப்புறம், பிரம்ம லிங்கம், வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியர், மகாலட்சுமி உள்ளார். இடதுபுறம் நவக்கிரக சன்னதி. இங்குள்ள சனி பகவான் மேற்கு பார்த்த நிலையில் உள்ளார்.

நளனும் அவனது மனைவி தமயந்தியும் திருநள்ளாறு செல்லும் முன் இத்தலத்தில் வழிபாடு



செய்து அனுக்கிரகம் பெற்றுள்ளனர். எனவே மற்ற தலங்களில் கறுப்பு ஆடை அணிந்திருக்கும் சனி, இங்கு வெள்ளை ஆடையில் அருள்பாலிக்கிறார். அருகே நவக்கிரகம் பூஜித்த லிங்கம் உள்ளது.

கருவறை

கருவறை மூலவர் முன்பாக நந்தி, பலிபீடம். வெளியே இரு பக்கங்களிலும் துவார பாலகர்கள். இடதுபுறத்தில் விநாயகர். கருவறை கோஷ்டத்தில் பிரம்மா. இவருடன், விஷ்ணுவுடன் லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி உள்ளனர்.

திருச்சுற்றில் மூன்று லிங்கங்கள், பைரவர், அக்னிஸ்வரர், சனத்குமார லிங்கம், சம்பகாரண்யேஸ்வரர், சூரியன், சந்திரன் உள்ளிட்டவர்கள் உள்ளனர். கருவறை மேலுள்ள விமானம் சற்றே பெரிய அளவில் அமைந்துள்ளது.

அஷ்டதிக் பாலகர்கள் இங்கு வந்து வழிபாடு செய்ததால் விமானத்தின் மேல் அஷ்டதிக் பாலகர்கள் உள்ளனர். கருவறை உள்சுற்றில் ஆனையுரித் தேவர், லிங்க பூஜை, ஈசன் அம்பிகையோடு இருத்தல் போன்ற மிகச் சிறிய அளவில் சிற்பங்கள் உள்ளன.

நடராஜர் கருவறையினுள் ஒளியாலும் ஒலியாலும் உலகைப் படைத்துப் பின், தனக்குள்ளே ஒடுக்கிக் கொள்ளும் தத்துவத்தை வெளிப்படையாக உணர்த்தும் அதிஅற்புத கோலம் நடராஜரின் திருவடிவம். சுமார் 6 அடி உயரம் உள்ள பஞ்சலோகத்தாலான சுயம்பு நடராஜர்.

அவரது நான்கு திருக்கரங்களில், இரண்டு திருக்கரங்கள் நடனத்திற்கு ஏற்ப அபிநயம் பிடிக்க, மற்ற இரு கரங்களிலும் அக்னியும், உடுக்கையும் உள்ளது. ஒலியினைக் குறிப்பது உடுக்கை, ஒளியினைக் குறிப்பது அக்னி. இவரது திருவுருவத்தில் மனித உடலில் இருப்பது போன்று மார்பில் மருவும், கைரேகைகள், மச்சம், நகங்கள், முடிகள் எனக் காணப்படுகின்றன.

அம்பாள்

அம்பிகை சன்னதி இரண்டாம் பிரகாரம் வடக்கு பகுதியில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. சுமார் 5 அடி உயரம் உள்ள அம்பாள் கலை, வேலைப்பாடுகள் நிறைந்த திருமேனியுடன் தனிச் சன்னதியில் அருள்பாளிக்கிறாள்.

பூமாதேவி

முன்பு ஒரு காலத்தில், யுகசுரன் என்ற அரக்கன் பூமியில் வசித்துள்ள உயிர்களை வதை செய்து வந்ததுடன், ஒரு சமயம் பூமியைத் தூக்கிக் கொண்டு போய், பாதாளத்தில் ஒளித்து வைத்தான்.

தேவர்கள் மகாவிஷ்ணுவிடம் முறையிட, மகாவிஷ்ணு கூர்ம (ஆமை) அவதாரம் எடுத்து பூமியை மீட்டு வந்தார். பின்னர் பூமாதேவியிடம், ‘இப்படி ஒரு நிகழ்வு எதிர்காலத்தில் நடக்காமல் இருக்க வேண்டுமென சிவனிடம் சென்று ஒரு வரம் கேள்!’ என திருமால் சொன்னார். பூமாதேவி, சிவனை நோக்கி பிரார்த்தனை செய்து வழிபட திருவீழி மிழலைக்கு வட மேற்கே ஒரு இடத்தைக் கண்டாள். அங்கே அரச மரமும் அதில் புள்ளினங்கள் கூடுகட்டி வசித்து வந்ததுடன், பிரம்மனால் ஏற்படுத்தப்பட்ட பிரம்ம தீர்த்தம் தூய்மையாக இருந்தது.



பூமாதேவி தேவ சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்து ஆலயம் அமைக்க சொன்னாள். வைகாசி மாதம் குருவாரம் ரோகிணியும் பஞ் சமியும் கூடிய சுபதனத்தில் தேவகுருவான பிரகஸ்பதி சூட்சுமாகம முறைப்படி உமா மகேஸ்வரரை பிரதிஷ்டை செய்தார். பூமாதேவி அதற்குரிய முறைப்படி நாள்தோறும் பூஜை செய்து தொழுது வந்தாள்



உமா மகேஸ்வரன் மகிழ்ந்து பூமாதேவிக்கு காட்சி கொடுத்ததுடன், இத்தலத்தில் நித்திய வாசம் செய்து பூரணமாய் இருந்து அருள்வதாக வரம் அளித்தார். பூமாதேவியும் மகிழ்ந்து வணங்கியவளிடம் தன் பாவங்களைப் போக்கிக் கொள்ள ஓர் தீர்த்தத்தை அமைக்கப் பணித்தார்.

பூமாதேவி கோயிலுக்குக் கிழக்கே பூமி தீர்த்தத்தை அமைத்தாள். அதில் பக்தர்கள் பலரும் நீராடி சாப பாவங்களை போக்கிக் கொள்கின்றனர். வைகாசி முழுவதும் இத்தீர்த்தத்தில் நீராடி 108 முறை ஸ்லோகங்களை ஜபித்து வர, வயிற்று வலி, குண்மம் நீங்கும் என்பது ஐதீகம்! பூமா தேவியால் இடம் அமைத்து அருளப் பெற்றதால் பூமிஸ்வரர் என்று இத்தள ஈசனுக்குப் பெயர் வந்தது.

குரு

பூமாதேவி வழிபடுவதற்காக தேவ சிற்பியான விஸ்வகர்மா திருநல்லம் என்னும் கோனேரிராஜபுரத்தில் ஆலயம் அமைய தேவகுரு பிரகஸ்பதி சூட்சுமாகம முறைப்படி சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ததாக தல புராணங்கள் கூறுகிறது. எனவே இத்தல ஈசனை வழிபட்டால் குரு பார்வை கிடைக்கும்.

அகத்தியர்

பல தலங்களிலும் அகத்தியருக்கு ஈசன் தனது திருமணக் காட்சியை காட்டி அருளியுள்ளார். அத்தலங்களில் இத்தலமும் ஒன்று.

மாப்பிள்ளை சாமி

திருவீழிமிழலை, திருமணஞ்சேரி போலவே இங்குள்ள ஈசன் மாப்பிள்ளை சாமியாக திருக்கல்யாணக் கோலத்தில் உற்சவராக எழுந்தருளி உள்ளார். திருமால் அம்பிகையை தாரை வார்த்து தரும் கோலத்தில் எழுந்தருளி இருக்கிறார். திருமணத் தடை உள்ளவர்கள் இத்தல மூலவரையும், உற்சவர் மாப்பிள்ளை சாமியையும், நெய் தீபம் ஏற்றி, வில்வ அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால், திருமணத் தடைகள் அகன்று நல்ல வாழ்க்கைத் துணை அமையும்.

நாரதர்

தர்ம சர்மா என்பவன் தருமபுரம் என்னும் பகுதியில் வசித்து வந்தான். இவன் ஒரு சமயம் தகுதியற்ற பொருளை அறியாமல் தானம் செய்து வறுமையானான். இதனை அறிந்த நாரதர் மாந்தாதா என்ற அரசனிடம் அழைத்துச் சென்று சிறிதளவு பூமியைப் பெறச் செய்தார். அதை பூமிஸ்வர சேத்திரத்தில் தானம் செய்ய நாரதர் சொல்லி, அதன்படி செய்து மகிழ்ந்தான். அதன் பயனாக நலம் பல பெற்றான்.

இத்தலத்தில் செய்யப்படும் தானம் கூட பெரும் பலனைத் தரும். இங்கு அரைக்கண நேரம் இருந்தால் மோட்சம் கிடைக்கும். இங்கு நடத்தப்படும் பிரார்த்தனை, பூஜை அளவற்ற பலன்களைக் கொடுக்கும் என நாரதர் சொன்னதாகச் சொல்லப்படுகிறது.

புரூரவஸ்

முனிவர் சாபத்துக்கு உண்டான சந்திரகுல புரூரவஸ் என்ற மன்னன் இத்தல வைத்தியநாதருக்கு பூஜை செய்து தன் குஷ்டரோகம் நீங்கப் பெற்றான்.

கல்வெட்டு

ராஜராஜன், ராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் ராஜேந்திரன் காலத்திய கல்வெட்டுகள் உள்ளன. சோழப்



விருத்தம்

‘மனம் மேறி மாயவினை புரிகின்ற மங்கை ஒரு பாகா
மால் அயனும் காணாத மலை ஈசா
தனம் கோரி தாள் பணிவார் திறமறிந்து
தக்க நிதி மிக்க சேர ஒக்கருளும் கலை ஈசா
தினம் மாறும் நினைவிருந்தும் உனை மறவா
உளம் மீந்த அருணை ஒளி பரவு தலை ஈசா
குணம் குன்றா கோனேரி தலம் நின்று
எமையாலும் உமைசா நின்னிரு தாளே சரணம்!’ —கோனேரி ராஜபுரம் வடமட்டத்தில் பிறந்த விஜயராகவன் என்கின்ற விஜய சியாமளா எழுதிய 10 விருத்தங்களில் முதலாவது விருத்தம்.

பேரரசர் முதலாம் ராஜராஜ சோழன் பாட்டியான செம்பியன் மாதேவி, தன் கணவரின் நினைவாக கற்றளி (கோயில்) அமைத்தார் என்று கல்வெட்டு கூறுகிறது.

திருவிழா — பிரார்த்தனை

மார்கழி திருவாதிரை, ஆனி திருமஞ்சனம், இத்தல சுயம்பு நடராஜருக்கு செய்யப்படுகிறது. மதுரை, உத்தரகோசமங்கை தலங்களைப் போலவே இத்தல நடராஜருக்கு திருவீதி உலா நடைபெறுவதில்லை. இத்தல வைத்தியநாத சுவாமிக்கு வைகாசி விசாகத்தில் சிறப்பாக உற்சவம் நடக்கும்.

வைத்தியநாத சுவாமி சன்னதியின் எதிரில் முத்துக்குமர சுவாமியாக முருகப்பெருமான் வீற்றிருக்கின்றார். இன்னும் தீர்க்க முடியாத சகல நோய்களையும் இத்தல வைத்தியநாதன் தீர்த்து வைப்பதாக நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

பக்தர்கள் நிலம், வீடு வாங்க, வீடு கட்ட, வீடு கட்டுவதில் சிக்கல், நிலப்பிரச்சினை உள்ளவர்கள், இங்குள்ள இறைவனுக்கு வழிபாடு செய்தால் நலம் பயக்கும். சுவாமி அம்பாளுக்கு வஸ்திரம் அணிவித்தும், கோயில் திருப்பணிக்கு பொருள் உதவி செய்தும் நேர்த்திக்கடன் செய்கின்றனர்.

பலன்

இவ்வாலயத்தில் ஒரு தீபம் ஏற்றினால், மகா தீபம் ஏற்றிய பலனைப் பெறுவர். சிறிதளவு நைவேதனம் செய்தால், பெரிய அளவில் செய்த நிவேதித்த பலன் கூடும். உமாமகேஸ்வரரை ஒரு முறை வலம் வர, இப்பூமி முழுவதும் வலம் வந்த பலன் தரும்.

கும்பாபிஷேகம் 04.02.2004—ல் நடந்தது. அடுத்து 29.05.2015—ல் ஜெயலலிதா ஆட்சியில் நடந்தது.

பூஜை

தினசரி அபிஷேகம், அலங்காரம், தீப ஆராதனை என மூன்று கால பூஜைகள் நடைபெறுகின்றன. அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், சதுர்த்தி, கார்த்திகை போன்ற நாட்களில் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.

இணையதளங்கள் மூலமும் தினசரி மற்றும் சிறப்பு பூஜைகளுக்கு முன்பதிவு செய்யலாம்.

திருக்கோயில் நேரம்

தினமும் காலை 6:00 மணி முதல் 12.30 வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8:30 மணி வரையிலும் திறந்து இருக்கும்.

இருப்பிடம்

கும்பகோணம் — காரைக்கால் சாலையில் 22 கி.மீ. தூரத்தில் எஸ். புதூர். இதற்கு அடுத்து வடமட்டம் செல்லும் சாலையில் ஒரு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. திருவிடைமருதூரில் இருந்து தெற்கே 10 கி.மீ. தொலைவிலும், திருவாவடுதுரையிலிருந்து தெற்கே 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது திருநள்ளம் என்னும் கோனேரிராஜபுரம்.


தொடர்புக்கு: 91435 24983.

(தொடரும் வலம்.....)




# தமிழன் என்றே சொல்லடா!

**நூலாசிரியர்: புவனகிரி கல்யாண்**




**(கவிதைகள்)**

**விலை : ரூ. 160**

**பக்கங்கள் :**

**வெளியீடு:**

**விஜய் பதிப்பகம்**
**7/ஏ. 18. பாளையக்கார தெரு,**
**புவனகிரி –608 601**
**கடலூர் மாவட்டம்.**

மயிலிறகாய் வருடுவது கவிதை என்றால், மத்தளம் கொட்டி முழங்கி சம்மட்டியடியாய், சாட்டையடியாய் சத்தத்தோடு வருகின்றதும் கவிதையே என நிரூபித்திருக்கிறது, கவிஞர் புவனகிரி கல்யாண் எழுதிய 'தமிழன் என்றே சொல்லடா' என்ற கவிதைத் தொகுப்பு! தமிழர்கள் மிகப் பெருமிதமாகச் சொல்லிக் கொள்ள வேண்டிய தலைப்புதான் என்றாலும், தமிழ் மண்ணில் நிலவும் எண்ணற்ற சீர்கேடுகளை அடையாளம் காட்டுவதோடு, அவற்றைக் களைவதற்கும் முயற்சிக்கின்ற முன்னெடுப்பாக இக்கவிதைகள் இருப்பது சிறப்பு! ஒரு மிகச்சிறந்த பொன்னாரம் புழுதியில் கிடந்து பொலிவை இழப்பது ஏன் என்ற கேள்வி எழுப்பியபடி சிறந்த கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்பாக மலர்ந்திருக்கிறது.

அக இருளைக் கிழிக்கும் ஒளிப்பிழம்பாக ஆங்காங்கே தெறித்து விழுகின்ற கவிதைகள், கவிஞரின் அறச்சீற்றத்தை மட்டுமல்ல, அகத்தோற்றத்தையும் வெளிபடுத்துவதில் இவர் ஆகச்சிறந்த படைப்பாளி என்பதைப் பிரகடனப்படுத்துகிறது. நாட்டை ஆள்வதற்கான தலைமையைத் தக்க முறையில் தேர்ந்தெடுக்கா விட்டால் அந்த நாடு படக்கூடிய அவலம் எத்தகையது என்பதையெல்லாம் போகிற போக்கில் சொல்லிச் செல்வது போலவே, பொட்டில் அறைந்தாற்போலவும் சொல்கிறார் கவிஞர். தமிழகத்தின் காட்சிகளை சாட்சிப் படுத்துகிற இத்தொகுப்பு, தமிழ்ச் சமூகம் ஏறெடுத்து பார்த்து ஏற்றி வைக்க வேண்டிய சிறந்த தொகுப்பு என்றால் மிகையல்ல!




புவனகிரி கல்யாண்

(வரும் காலங்களில் தாய்மொழியில் கலப்பு செய்து எழுதுபவர்கள் கட்டாயம் நாடு கடத்தப்படுவார்கள் என்கிற சட்டம் நடைமுறை படுத்தப்பட்டிருக்கும் என்பதால் இப்போதே முடிந்தவரையில் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது)

கி.பி. 14—02—2050

“சிபி நாம கணவன் மனைவியா வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தம் பண்ணிக்கறத்துக்கு முன்னாடி சில விசயங்களை இப்பவே மனச விட்டுப் பேசிக்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன்.”

“சொல்லுங்க கவி!”

“இந்தத் திட்டத்துக்கு நீங்க எவ்வளவு முதலீடு செய்யறீங்களோ அதே அளவுக்கு நானும் முதலீடு செய்யறேன்.”

“சரி!”

“மத்தபடி என்னோட இதர அசைவும் மற்றும் அசையா சொத்துக்கள் எல்லாம் என்னோட தனிப்பட்ட பராமரிப்புல மட்டும்தான் இருக்கும். இதே மாதிரி நீங்க, ஒப்பந்தத்திற்கு உட்படாத சொத்துக்களை தனியா பராமரிக்கிறதும் பராமரிக்காமல் இருக்கிறதும் உங்களுடைய தனிப்பட்ட சுதந்திரத்திற்கு உட்பட்டது.”

“ரொம்ப சரி!” என்றான் சிபி.

“இன்னொரு சமாச்சாரம்; நீங்களும் நானும் சம அளவு பங்குதாரர்கள் என்கிறதால என்னை ஒருமையில் அழைக்கிறதோ மரியாதை குறைவா நடத்துவதோ கூடாது; முடியாது! அப்படியும் நடந்துக்கிட்டிங்கனா அதிவிரைவு நீதிமன்றத்தில் ஒரு வாரத்துக்குள்ள விவாகரத்து தான்!

வீட்டு வேலைகளை நாம சரிசமமா பகிர்ந்துக்கணும். எக்காரணம் கொண்டும் இதுல சமரசத்துக்கோ சால்சாப்புக்கோ இடமில்லை! அதிமுக்கியமான விஷயம், எக்காரணம் கொண்டும் உங்களுக்கான வாரிசை நான் கண்டிப்பா சுமக்க மாட்டேன்! இதுமாதிரியான அற்ப விஷயங்களில் என்னை ஈடுபடுத்திக் கொண்டு என்னோட மேனி அழகு குலஞ்சிடவோ நேர விரையத்தையோ ஒருபோதும் இழக்க சம்மதிக்க மாட்டேன்!”

பொறுத்துப் பொறுத்து காத்திருந்த சிபி ஒரேயொரு கேள்வி கேட்டான்.

“உங்களுக்கும் எனக்கும் உடலளவில் ஏதாவது தொடர்பு இருக்குமா இருக்காதா?”

“இருக்கும்! வாடகைத் தாயாக ஒரு பெண்ணை நீங்க அமைச்சுக்கணும். அல்லது ஒரு வேலைக்காரியை அதாவது உங்க வாரிசு சுமப்பதற்கு ஒரு பெண்ணை இந்த வீட்டுக்கு

அழைத்து வரலாம்! வர்றவ கர்ப்பம் தரித்து ஒரு வருட காலத்துக்கு இங்க இருக்கலாம்! அதுக்கான எல்லா செலவுகளையும் உங்களோடு தனிக் கணக்கிலிருந்து நீங்க செய்யணும்!"

"நீங்க சொல்றபடியே வச்சுப்போம். ஆனா பொறக்கப் போற குழந்தை மேல உங்களுக்கு என்னதான் உரிமையும் பொறுப்பும் இருக்கும்?"

"அது நீங்க வளர்க்கும் விதத்தையும் என்னோட விருப்பத்தையும் பொறுத்தது. ஒருவேளை உங்க வாரிசு எனக்கு பிடிச்சு இருந்தா அதுநாள் வரையில் நீங்க செய்திருக்கிற செலவுல பாதியை நான் உங்ககிட்ட கொடுத்திடுவேன்!"

"உங்க நிபந்தனைகள் எல்லாத்துக்கும் நான் சம்மதிக்கிறேன்." என்றான்.

"அப்ப நாம ஒப்பந்தம் போட்டுக்கலாம்!" என்றாள்.

கி.பி. *04—04—2068*

"அந்தக் காலத்துல நான் எங்க தாத்தாவுக்கு எதையெல்லாம் தருவேன் தெரியுமா?" என சிபியின் அப்பா, சிபியின் மகனிடம் புலம்பிக் கொண்டிருந்தார்.






“உங்க கிட்ட பேசிக்கிட்டிருக்கறதுக்கு எனக்கு நேரமில்லை! என்ன வேணும்னு சுருக்கமா சொல்லித் தொலைங்க.” என்றான் இ.த.க.சி.பு—00000786.

(இன்னும் 50 ஆண்டுகளுக்குப் பிறகு பெயர் வைக்கும் முறை முற்றிலும் மறைந்து எண்களால் அழைக்கப்படும் முறை சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கும். இதில் முதல் எழுத்து நாட்டையும், இரண்டாவது எழுத்து மாநிலத்தையும், மூன்றாவது எழுத்து மாவட்டத்தையும், நான்காவது ஐந்தாவது எழுத்து முறையை வட்டத்தையும் ஊரையும் குறிக்கும்.

எண்களால் நபர்களை குறிக்கப்படும் முறை நடைமுறைக்கு வந்த பிறகு குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, எரிவாயு உருளை இணைப்பு, கடவுச்சீட்டு இன்னும் இத்யாதிகளும் ஒரே அடையாள அட்டையோடு இணைக்கப்பட்டிருக்கும். பல கோடி ஜனத்தொகையில் உலகெங்கும் விரவி வாழ்வதாலும், தொன்மையான மொழி என்பதாலும், தமிழில் மட்டுமே கணிப்பொறிக்கு மிகவும் உகந்த தனித்தனி எழுத்துக்கள் இருப்பதாலும், தமிழே சர்வதேச மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது!

ஒவ்வொருவரின் அடையாள அட்டையிலும், தமிழ் முதல் மொழியாகவும் அடுத்து அவர்களுடைய தாய் மொழியிலும், அவர்களைப் பற்றிய குறிப்புகள் அச்சிடப்பட்டிருக்கிறது)

“என்னடா? நான் இந்த அளவுக்கு கெஞ்சிக் கேட்டுக்கிட்டிருக்கேன். நீ கொஞ்சம் கூட மனசே இரங்க மாட்டேங்குற? நான் என்னடா ஊர்ல உலகத்துல இல்லாததையா கேட்டுட்டேன்? உன்னோட இளமையை கொஞ்சம் கடனாக கொடுத்தா நடப்பு வரை இறுதி நாட்களை மகிழ்ச்சியா கொண்டாடிட்டு திரும்பத் தந்துடப் போறேன்”

“மகாபாரத காலத்திலேயே யயாதின்னு ஒருத்தன் தகப்பனுக்காக இளமையை வாழ்நாள் முழுவதும் தாரை வார்த்தான். நீ என்னடான்னா ரெண்டு நாளுக்கு தர்றத்துக்கு இவ்ளோ பிகு பண்ணிக்கிறே... ஒன்னு மட்டும் மனசுல வச்சுக்கோ. நான் உங்க அப்பனையே உனக்கு கொடுத்தவன். அதை மறந்துடாதே!”

கடைசி ஆயுதம் சரியாகத்தான் பிரயோகப்படுத்தப் பட்டிருக்கிறது.

பேரன் தன்னுடைய நிலையைப் பரிசீலனை செய்யத் தொடங்கினான்.

“சரி சரி! ரொம்ப புலம்பாத... இதுதான் கடைசி. இனிமே இது மாதிரி வந்து இளமையைக் கடனா கேட்டு தொந்தரவு பண்ணக்கூடாது! வெள்ளி நள்ளிரவு 12 மணிக்கு வந்து வாங்கிக்கோ. அது மாதிரியே ஞாயிறு இரவு 12 மணிக்கு திருப்பிக் கொடுத்துடணும். 48 மணி நேரத்திற்கு மேல் ஒரு மணித் துளி கூட கால அவகாசம் எடுத்துக்கக் கூடாது!” என எச்சரித்து அனுப்பினான்.

தாத்தா இப்பவே திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லாத இளமையை வாங்கிக் கொண்டவர் மாதிரி வீறுநடை போட்டு வெளியேறினார்.

கி.பி. 01.07.2070

தாத்தா என்னுடைய முதுமையை இவனிடம் கொடுத்துவிட்டு, இளமையை கடனாக வாங்கிக் கொண்டு போனதற்கு பிறகு வரவேயில்லை! தலைமறைவாகிவிட்டார்!

அவர் மட்டும் இவன் கையில் சிக்கினால் அதோகதி தான்! இவனோ, அவருடைய முதுமைக்கு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஒப்பனை செய்து காலம் தள்ளிக் கொண்டிருக்கிறான்!

இவனுடைய தற்போதைய வருத்தம் எல்லாம் செவ்வாய் கிரகக் காதலியைச் சந்தித்து வர ஒரு



நாள் ஆகும். இதற்கு யாராவது தன்னுடைய இளமையை கடனாக தந்தால் நன்றாக இருக்கும் என நினைத்துக் கொண்டிருக்கிறான். இப்போது தன் வசத்தில் இருக்கும் முதுமைக்கு என்னதான் ஒப்பனை செய்தாலும் அவள் கண்டுபிடித்து விடுவாள் என்கிற பயம் இவனிடத்தில் இருக்கிறது. என்ன செய்யலாம் என யோசித்தவனுக்கு ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

இதுநாள் வரையில் சம்பாதித்த அனைத்து சொத்துக்களையும் பிணையாய் வைத்துவிட்டு அந்த இளைஞனிடம் தன்னுடைய தற்போதைய முதுமையை இறக்கி வைத்து அவனுடைய இளமையைக் கடனாகப் பெற்றுக் கொண்டான்.

போகும்போது யாரிடமும் சொல்லிக் கொண்டு போவதில்லை என தீர்மானித்தான். யாரிடமேனும் சொல்லிச் சென்றால்... அங்கு அது மலிவாய் கிடைக்கும், இது மலிவாய்க் கிடக்கும் என எதையாவது வாங்கி வரச் சொல்வார்கள் என்பது இவனுக்குத் தெரியும்!

இவன் திட்டமிட்டிருந்தபடியே யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை! செவ்வாய் வந்திறங்கிய போது இவனுடைய காதலி வேறொருவனுடன் தொடர்பில் இருந்தாள்.

"முன் அனுமதி பெறாமல் வருவது என்ன நாகரீகம்?" எனக் கடிந்து கொண்டாள்.

அவன் தன்னுடைய அறியாமையை நினைத்து மனம் வந்து திரும்பினான்.

கிபி 14.11.2072

இன்று ஓட்டுப்பதிவு!

வழக்கம் போல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் ஓட்டுப்பதிவு. போன முறை 18 வயது நிரம்பாததால் ஓட்டு போட முடியவில்லை!

"இன்னும் எத்தனை மாமாங்கமானாலும் இப்படி வரிசையில் காத்துக் கிடந்து ஓட்டு போடும் முறையை மட்டும் மாத்தவே மாட்டீங்களா?"

நம்முடைய கதாநாயகன் தான் இவ்வளவு தைரியமாய் கேள்வி கேட்கிறான்?

"இந்த ஒருநாள்தான் சகோதரா!" என வேட்பாளர் இவனிடத்தில் மிகப் பணிவாக சொல்லிச் செல்கின்றார்.

வேட்பாளர் தனக்கு பாதுகாப்பாய் இருக்கும் அல்ல கையிடம் கிசுகிசுத்தார்...

"திருவாளர் இ.த.க.சி.பு 00000307"

"சொல்லுங்க இ.த.க..சி.பு 00000420"

"அந்த இ.த.க.சி.பு 00000786. ஓட்டு போட்டவுடன் கொன்னுடுங்க. இப்பவே கேள்வி கேட்கிறான். இவனையெல்லாம் விட்டு வச்சா நம்முடைய எதிர்காலத்துக்கு உகந்ததாய் இருக்காது!"

அன்று மாலையில் ஓட்டு போட்டு விட்டு வீட்டுக்கு வந்த இளைஞர் மன அழுத்தம் காரணமாக தற்கொலை செய்து கொண்ட செய்தி தொலைக்காட்சி பெட்டிகளில் வெளியானது.

(தற்கொலை என்பது மனித உரிமைகளை அப்போது அங்கீகரிக்கப்பட்டிருக்கும். ஒருவரின் தற்கொலை முயற்சியில் இன்னொருவர் தலையிடுவது அநாகரீகம் என்கிற நாகரீகம் அப்போது எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும்!)

வேட்பாளர் தனது ஜனநாயகக் கடமையைச் செவ்வனே செய்த இளைஞருக்கு இறுதி மரியாதை செலுத்தி விட்டு அவனைப் பற்றிய ஊடக விவாதத்தில் பங்கேற்றார்!

# அறிவோம் தமிழர்

## நம்மாழ்வார் முன்னெடுத்த அறிவுப் புரட்சி!

இரும்பின் தொன்மை தொடங்கி, கீழடி வழி நடந்த பல்லாயிர ஆண்டுகளின் அறிவுத் தொடர்ச்சியாகும் இன்றைய தமிழ்ச் சமூகம். குறைந்தபட்சமாக 5,000 ஆண்டுகளின் நீட்சி கொண்ட வாழும் சமூகம் உலகில் ஏதுமில்லை. கல்வியும் அறிவும் தலைமுறை தலைமுறையாக இடைவெளியின்றி கை மாற்றப்பட்டிருந்தால் பல்லாயிரமாண்டுகள் நிலைத்திருப்பது சாத்தியம். ஒவ்வொரு முறை கைமாறும்போதும் மேலும் அது செழுமைப்படுத்தப்பட்டு கைமாற்றப்பட்டிருக்கிறது. சமூகக் குழுக்கள், சிற்றரசுகள், பேரரசுகள் என ஆட்சிமுறைத் தோன்றி மறைந்திருந்தாலும் அறிவின் கைமாற்றம் இடையறாது நிகழ்ந்திருக்கிறது.

இரும்பு, கல்லணை, கப்பல்கள் கட்டி கடல் பயணம், பெரிய கோயில், காலிங்கராயன் வாய்க்கால் என பல்தள அறிவின் பரிமாற்றமும், கைமாற்றமும்தான் தமிழ்ச் சமூகம் இன்றைய இடத்தை அடைந்திருப்பதற்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது. வணிகமும், அதிகார ஆதிக்கமும் திட்டமிட்டுக் கட்டமைத்துள்ள இன்றைய நவீனக் கல்வி, அறிவுப் பரிமாற்றம் போன்ற ஒன்றல்ல அது. அறிவு சமூகத்தில் ஊடும் பாவுமாக, ஒரு சுதந்திர சமூகத்தின் சுதந்திரமான அறிவாண்மைக்கான கல்வியாக, ஓடையில் பயணிக்கும் தண்ணீரைப் போல் தலைமுறைக்குத் தலைமுறை பயணித்து வந்துள்ளது.

இந்த பூமி எல்லா உயிரினங்களுக்கும் சொந்தமானது; மனித இனத்தின் தனிச் சொத்தல்ல;அவற்றின் கூட்டு இயக்கமே உலகின் இயக்கம். எனவே, அனைத்து உயிரினங்களுக்குமான ஜனநாயகம் தேவை என இன்றைய அறிவுலகம் கூறுவதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ்ச் சமூகத்தின் நடைமுறையில் இருந்திருக்கிறது.இந்த அறிவாண்மையில் இடையிடையே தொய்வுகளும், சிதைவுகளும் தாழ்ச்சியான நிலையும் ஏற்படும்போது, அதிலிருந்து மீண்டு எழுந்து கொண்டேயிருக்கிறது. தாழ்வுற்ற நிலையிலிருந்து, அறிவடிமையாக இருந்த நிலையை மாற்ற அவ்வப்போது யாரேனும் ஒருவர் தன் வாழ்நாள் முழுவதும் உழைத்து மாற்றத்தை விதைத்துச் செல்கிறார்; சமூகத்தைப் புரட்டிப் போடுகிறார்.

இப்படித்தான் நம் அண்மைக் காலத்து தமிழ்ச் சமூகத்தில் ஒரு நூற்றாண்டுக்குள் மூன்று புரட்சிக்காரர்கள் புரட்டிப் போட்டனர். மகாகவி பாரதியார் பண்டிதத் தமிழை மக்கள் தமிழாக்கினார்; பெண் சமத்துவம் காட்டினார். பெரியார் ஈ.வெ.ரா. மனிதர்களிடையே சமத்துவம், பகுத்தறிவுப் புரட்சியை விதைத்தார். நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை மூலம் அறிவுப் புரட்சியையும், சமத்துவத்துக்கான புரட்சியையும் முன்னெடுத்தார்.

மொத்த சமூக அமைப்பில் நகரங்களும், கிராமங்களும் நாணயத்தின் இரு பக்கங்கள். கிராமங்கள் அதனதன் இயற்கை வளங்களையொட்டி சாத்தியமான உணவை உற்பத்தி செய்யும் மையங்கள். நகரங்கள் பொருள் உற்பத்தி, வணிக மையங்கள் ஆகும். கிராமங்கள் இயற்கையின் பல்வேறு இயக்கங்களை அறிந்து அவற்றோடு இயைந்து பயிரை வளர்க்கும் வித்தையை தனக்குள் வைத்திருந்த ஒன்று. தன்னைச் சுற்றியுள்ள உயிரினங்களின் தேவை, தனக்கான தேவை, தனது கால்நடைகள், சமூகத்துக்காக, உயிரினங்களின் தேவை, அவை விவசாயத்துக்காக, வாழ்க்கைக்காக எந்த வகையில் பயன்படும் என்பதை அறிந்திருந்த சமூகம் அது. இயற்கையோடு பிணைந்து, இயைந்து இயங்கி சமூகத்துக்கான உணவை உருவாக்கியது.

கிராமங்களின் உணவு உருவாக்கல் என்பது சூழலியல் செயல்பாடு. இத்தகைய உணவு உருவாக்கும் முறை கைக் கொண்டிருந்த காரணத்தால்தான், மனிதர்களிடையே சமூகச் சமமின்மை இருந்த போதிலும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் சமத்துவப் பண்பு இருந்தது. இந்தப் பண்பால் பல்லாயிரமாண்டுகளாக கிராமங்களின் உயிர்ச் சூழல் சிதையவில்லை. கிராமச் சமூகம் தனக்குள் கொண்டிருந்த அறிவாண்மை இத்தகையது. அப்படியான கிராமங்களின் உயிர்ச்

# பெருமை

## அறச்சலூர் செல்வம்

சூழல் சிதைவுற்று வெறுமை மிஞ்சுகிறது. வாழும் மனிதர்களின் மனமும் வெறுமையுற்று இருக்கிறது. சமூக சமத்துவத்துக்கான கருவியாக கல்வியை முன்னெடுத்தார் பெரியார் ஈ.வெ.ரா.

நம்மாழ்வார் செய்த பணியும் கல்வி வழங்கிய பணியே. அவரது இயற்கை வேளாண்மை என்பது ரசாயன இடுபொருள்களுக்கு மாறாக இயற்கை இடுபொருள்கள் என்ற மேற்கத்திய இயற்கை விவசாயம் அல்ல. அவரே பல சமயங்களில் கூறியது, ‘இந்த நம்மாழ்வாரை இயற்கை விவசாயத்தை பரப்பும் ஆளாவே பாக்கறாங்க; ஆனால், இந்த நம்மாழ்வார் செய்யறது மனித வள மேம்பாடு, கல்வி கொடுப்பது’ என்பதாகும்.

நம்மாழ்வாரின் சமூகச் செயல்பாடுகளுக்கு அடித்தளமாக இருந்த கல்வியியல் தத்துவ ஞானியான பாவ்லோ பிரையர், ‘இருக்கிற சமூக அமைப்புக்குத் தக்கவராக மனிதர்களை மாற்றுதல் அல்லது இருக்கிற ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பைக் கவிழ்த்து, முற்றிலும் மாற்றி மனிதரின் விடுதலைக்கு வழிவகுப்பது மட்டுமே கல்வியாக இருக்க முடியும். இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நிலையிலிருக்கும் கல்வி என ஒன்று இல்லவே இல்லை. மேலும், கல்வியில் இருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது’ என்றார். இயற்கை வேளாண்மையை கிராம சமூகத்தின் ஏற்றத் தாழ்வை மாற்றுவதற்கான கருவியாகக் கொண்டார் நம்மாழ்வார்.

நகரங்களில் வாழும் மனிதர்களால் தனித்துவமான கட்டமைப்புகளின்றி பொருளை உருவாக்கி, சமூகத்துக்கான செல்வத்தை உருவாக்கிடல் அரிது. ஆனால், கிராமங்களில் வாழும் மனிதர்கள், அவர்கள் வாழும் அந்தந்த இயற்கை நிலையோடு இணைந்து தங்களுக்கும்





ஒரு வகையான சமத்துவப் பரிமாற்றமே இருந்திருக்கிறது.

எந்த இடத்திலும், காலகட்டத்திலும் கட்டைவிரல் கேட்ட துரோணர்களும், கட்டை விரல் இழந்த ஏகலைவன்களும் இருந்ததில்லை. நவீன வேளாண்மை என்ற போர்வையில் திணிக்கப்பட்ட அறிவியல் அல்லாத ரசாயன வேளாண்மை, துரோணராகி உழவர்களின் சமூக அறிவைக் கட்டைவிரலாக தானே எடுத்துக் கொண்டது. வணிகத்துக்காக கட்டமைக்கப்பட்ட கல்வி நவீனம் என்று முத்திரை குத்தி விட்டாலே அது அறிவியலின் புதிய கண்டுபிடிப்பு என்ற உருவாக்கப்பட்ட பொது எண்ணம் கட்டைவிரலை வெட்டியெடுக்கும் கத்தியானது. நம்மாழ்வார், கேள்வியை அவரே கேட்டு, பதிலாக அறிவியலையும் கூறி, வணிகம் கட்டமைத்த போலி அறிவை உடைத்தார். தங்களுக்குத் தேவையான உணவை ஒளிச்சேர்க்கை மூலம் தானே சமைத்துக் கொள்ளும் சக்தி கொண்டவை; செடிகளுக்கு ‘சாப்பாடு’ போடுவது மனித வேலையில்லை என உண்மையான அறிவியல் விளக்கை ஏற்றியவர். சூழலியலோடு இணைந்து இயங்கிய நம் வேளாண்மையில் புதைந்திருந்த அறிவியலை விளக்கி மரபு அறிவைத் தூக்கிப் பிடித்தார். சமூகத்தின் அறிவுக்குள் விரவி இருந்த பழைமையையும் மூடநம்பிக்கையையும் அறிவியல் உண்மைகள் கொண்டு அகற்றும் வேலையையே அவர் செய்தார்.

சமூகத்துக்குமான உணவை உருவாக்கும் அறிவாண்மையைக் கைக்கொண்டவர்கள். ஒரே கிராமத்தில், ஒரு விவசாயியின் நிலத்தில் இருக்கும் வெவ்வேறு தன்மையுள்ள நிலத்தில் எப்படியானவற்றை, எப்படி வளர்க்க வேண்டும் என்ற சூழலியல் அறிவைக் கொண்டவர்கள்; சுய அறிவால் நிற்பவர்கள்.தன் நிலத்துக்கான விவசாயத்தை சுயமாகச் சிந்தித்து இயங்கி வாழ்ந்த விவசாயிகளை வேளாண் விஞ்ஞானிகள் அறிவை அண்டி விவசாயம் செய்யும் அறிவு அடிமையாக்கியது ரசாயன விவசாயம். இந்த அறிவு அடிமைத்தனத்திலிருந்து விவசாயிகளை விடுவித்து தன் சொந்த அறிவைக் கொண்டு விவசாயம் செய்ய வேண்டும் என்று இயங்கியவர் நம்மாழ்வார். அவர் காலங்காலமாக செய்துவந்த விவசாயத்தில் புதைந்திருக்கும் அறிவியலை விளக்கி, அறிவியல் உனக்கு அந்நியமான ஒன்றல்ல, உன் வேளாண்மை அறிவியலின் அடிப்படைகளை உள்வாங்கிச் செய்யப்பட்டது என்பதைப் புரியவைத்தார்.

‘பெரும்பான்மையான மக்களை ஒடுக்கும், ஏற்றத்தாழ்வான சமூக அமைப்புக்குள் பெரும்பாலும் உரையாடல்கள் நிகழ்வதில்லை. அதனால்தான், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் முதலில் மக்களைக் கேள்வி கேட்க வைப்பதையே முதன்மையான கல்வி’ என்கிறார் பிரையர். ஜாதியும் நிலவுடைமையும் உருவாக்கிய ஆதிக்கம் கிராமச் சமூகம் முழுவதும் விரவி ஆழமாகவும், அகலமாகவும் பரவிக் கிடந்த போதும், சமூகத்தின் அறிவானது பொதுவானதாகவே இருந்திருக்கிறது; எல்லோருக்குமானதாக இருந்திருக்கிறது. உணவு உற்பத்தி என்ற சூழலியல் சார்ந்த, நடவடிக்கை சார்ந்த அறிவைக் கைக்கொண்டிருப்பதில்

இயற்கை விவசாயத்தை முழுமையான அரசியல் செயல்பாடாக்கினார் நம்மாழ்வார். இயற்கை விவசாயத்தை சமூக அரசியல், அறிவியல், சமூக நீதி, அனைத்து உயிரினங்களுக்குமான ஜனநாயகத்தை உள்ளடக்கிய அறிவு இயக்கமாகவே கட்டமைத்து வழிநடத்தினார். இதன் இலக்கு சுய சிந்தனையால் உருவாகும் சுயச் சார்பும், சுய மரியாதையும், அனைத்துத் தளத்திலும் சமத்துவமான தன்மையும் கொண்ட சமூக நீதியாகும்.

தங்களுக்கு அறிவு உள்ளது, பகுத்துப் பார்க்கும் அறிவு உள்ளது, தங்களது வேலைகள் அறிவியல்பூர்வமானது என்பதை கிராமத்தவர்களை உணர வைக்கும் வேலையாகவே அவரது வேலை இருந்தது. அதே சமயம் சுரண்டலையே அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள




வணிகக் கட்டமைப்பு குறித்தும், சக மனிதர்களிடையே இருக்கும் ஜாதிய கட்டமைப்பு உருவாக்கிய சமத்துவமின்மை குறித்த புரிதலையும் உருவாக்கி வந்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் கீழக்கோட்டை கிராமத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அந்தக் கிராமத்தினரை இணைத்து வேலை செய்த சிறிது காலத்துக்குள்ளாகவே அந்தக் கிராமத்தில் நிலவிய ஜாதியக் கட்டமைப்பையின் இறுக்கத்தை உருக்குலைத்து ஜாதி தாண்டிய சமத்துவத்தை அவர்களாகவே அடைய வைத்தார். தான் தங்கும் இல்லங்களில் ஆண்— பெண் சமத்துவத்தை உருவாக்கினார். அவரது இறுதி இலக்கு இயற்கை விவசாயம் மட்டுமல்ல; சக மனிதர்களிடையே இருந்த சமூக சமத்துவமின்மையையும், வர்க்க சமத்துவமின்மையும் நீக்குவதாகவே இருந்தது.

எந்த அறிவு பிற்போக்குத்தனங்களாலும், மூட நம்பிக்கையாலும் மிகுந்து இருக்கிறது என்று கருதி பெரியார் ஈ.வெ.ரா. தொடாமல் விட்டாரோ, அதை நம்மாழ்வார் கையில் எடுத்துக் கொண்டார். அதில் படிந்திருந்த தேவையற்றவைகளை நீக்க இயங்கியவர். இதை உணர்ந்தோ அல்லது உணர இயலாத நிலையிலோ அல்லது வணிகத்துக்கான விவசாயம்தான் முன்னுரிமையானது என்று நினைத்தோர் அவரோடு இணைந்து சென்ற பயணத்தில் வழியிலேயே விலகினர் அல்லது உதிர்ந்தனர் அல்லது இயற்கை வேளாண்மையை ரசாயனங்களுக்கு மாற்றாக இயற்கையான இடுபொருள்கள் என்று தொழில்நுட்பமாகச் சுருக்கினர்.

கோமியம், பஞ்சகாவியம் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்துவது சமூகத்தின் அறிவே; அதை இன்று நம்மிடம் இருக்கும் அறிவியல் முறைகளால் ஆய்வுக்கு உட்படுத்தாமல் மூட நம்பிக்கை என்று பகடி செய்வதை நம்மாழ்வார் ஏற்கவில்லை. சமூகம் கைக்கொள்ளும் முறை ஒன்று பயனளிக்கிறது என்றால், அதை அறிவியலுக்குப் புறம்பானது என ஒதுக்காமல் முதலில் சமூகத்தின் அறிவு என அங்கீகாரம் அளிப்பது, பயன்படுத்துவோரின் அனுபவங்களை அறிவது, பிறகு அதற்குள் இருக்கும் அறிவியலை அறிய முற்படுவது, அறிந்த அறிவியலை மக்களிடம் விளக்குவது என்பது அவரது வழிமுறை.அறிவியல் முறை வேலை செய்கி என்றால் வேலை செய்கிறது; எப்படி வேலை செய்கிறது என்பதைக் கண்டறிய வேண்டியவர்கள் விஞ்ஞானிகள்.

இயற்கை வேளாண்மையைத் தமிழகத்தில் இயக்கமாக மாற்றியவர் வேளாண் அறிஞர் நம்மாழ்வார். தமிழகத்தில் இன்று இயற்கை வேளாண்மை, நஞ்சற்ற உணவு என்ற சொற்கள் மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்படுகிறதென்றால் அதற்கான அத்தனை பெருமையும் நம்மாழ்வார் என்ற ஒற்றைச் சொல்லையே சென்றடையும்.

1998 பிப்ரவரி மாதமாக இருக்க வேண்டும். சபரிமலைக் காடுகளில் விழிப்புணர்வின்மை காரணமாக பக்தர்கள் வீசிச் செல்லும் பிளாஸ்டிக் குப்பைகளால் நேரிடும் சூழல் அபாயம் பற்றி அறிவதற்காக ஆய்வுப் பயணத்தைத் திட்டமிட்டு நடத்தினார் தமிழக பசுமை இயக்கத்தின் தலைவரான டாக்டர் வெ. ஜீவானந்தம். வண்டிப் பெரியாறிலிருந்து மலை — வனப் பாதையில் இறங்குமுகமாக சபரிமலைக்குச் செல்லத் திட்டம். இடைவழியில் பெருவனத்தின் நடுவிலுள்ள வனத் துறைக் கட்டடத்தில் இரா தங்கல்.

அந்த இரவில்தான் வந்துசேர்ந்தார் இயற்கை



வேளாண் அறிஞர் நம்மாழ்வார். முதல் சந்திப்பு. அந்த ஆய்வுப் பயணத்திற்கு வந்திருந்த அனைவரும் சூழ்ந்திருக்க நள்ளிரவைத் தாண்டியும் உரையாடிக் கொண்டிருந்தார் அவர். எத்தனை புத்தகங்களைப் படித்தாலும் கிடைக்க முடியாத விஷயங்கள். புதிய திறப்புகள். இயற்கை விவசாயம் பற்றி பேசத் தொடங்கிய காலம். பின்னால் வாய்த்தபோதெல்லாம் சந்திப்பு.

இயற்கை வேளாண்மை வழியில் தமிழகத்தின் பல இடங்களில் மாதிரிப் பண்ணைகளை உருவாக்கித் தந்துகொண்டிருந்த நம்மாழ்வார், 2000—ல் மாவட்ட அளவிலும் விழிப்புணர்வு வேலைகளைத் தொடங்கினார். 2002—ல் ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் தொடங்கி, கொடுமுடி வரையிலும் சுமார் 500 கி.மீ. தொலைவு விழிப்புணர்வுப் பயணம். ஒவ்வொரு நாளும் 20 கி.மீ. நடை, மக்களுடன் மக்களாக மக்களுக்காக. நம்மாழ்வாருக்கு ஈரோடு மாவட்டத்தின் மீது கடைசி வரையிலும்கூட சற்றுக் கூடுதலான ஆர்வமும் பற்றும் இருந்தது.

பிற்காலத்தில் ஒரு நேர்காணலில் கூறுகிறார்:

“ஈரோடு மாவட்ட விவசாயிகள் மிகவும் சிறப்புமிக்கவர்கள். அவர்களிடம் நான்கு தனிக் குணங்கள் இருக்கின்றன.

1. கோவைக்கு அருகில் இருப்பதால் விரைவிலேயே பச்சைப் புரட்சியை மேற்கொண்டு களைத்துவிட்டவர்கள்.

2. பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள் என அனைவருமே விவசாயத்தின், விவசாயிகளின் மீது அக்கறையும் கவலையும் கொண்டவர்கள்.

3. விவசாயத்தில் புதுமை என்று எங்கேனும் கேள்விப்பட்டால் ஒரு மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அங்கே செல்வார்கள். பார்ப்பார்கள், வந்து நடைமுறைப்படுத்தியும் விடுவார்கள்.

4. வெற்றிகரமாக இருந்தால் முதல் வேலையாக அனைவருக்கும் தொலைபேசியில் அழைத்துப் பரப்பியும் விடுவார்கள். எனவேதான் இயற்கை வேளாண்மையில் முன்னணியில் இருக்கிறது ஈரோடு மாவட்டம்.”


என்றாவதொரு நாள் வேறு வழியே இல்லாமல் இயற்கை விவசாயத்தை நோக்கி விவசாயிகள் — மக்கள் தள்ளப்படுவார்கள் என்று பெரிதாக நம்பினார் நம்மாழ்வார். அவர் கூறுகிறார்:

“இயற்கை விவசாயம் வெற்றி பெற யாரும் காரணமில்லை. எதிரிகள் கடுமையாக வேலை செய்கிறார்கள், உண்பவர்களை நோயாளிகளாக்குகிறார்கள், பூமியை நஞ்சாக்குகிறார்கள். எனவே, இயற்கை விவசாயத்தைக் கவ்விப் பிடிக்க வேண்டிய கட்டாயம் நேரிட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் ஓராண்டில் பூமியில் ஒரு லட்சம் டன் நஞ்சு கொட்டப்படுகிறது. ஒருவேளை இந்த அளவு சற்று கூடக்குறைய இருக்கலாம். வணிகப் பயிர்களில்தான் மிக அதிக அளவில் ரசாயன உரம் என்ற பெயரில் நஞ்சு கொட்டப்படுகிறது. மஞ்சள், வாழை போன்றவற்றில் நிலத்தைத் தயார் செய்யும்போதே சில ரசாயனங்களைக் கொட்டுகிறார்கள். ஒரு பயிர்கூட விளையாமல் போய்விடக் கூடாது என்பதற்காகக் கவலைப்படுகிறார்கள்.

“நாட்டில் அடிப்பரப்பு,மேற்பரப்பு என அனைத்துத் தண்ணீரும் நஞ்சாக மாறிவிட்டது. எனவேதான், இவ்வளவு அதிகமாகப் புற்றுநோயாளிகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். மண்ணும் காலி, தண்ணீரும் காலி.”

பசுமைப் புரட்சி, இயற்கை விவசாயம் ஆகியவை பற்றி மிக உறுதியான கருத்துகளைக் கொண்டிருந்தார் நம்மாழ்வார்.

“பசுமைப் புரட்சியினால் பயனடைந்தவர்கள் 100—க்கு 25 விவசாயிகள்தான். பலன் எல்லாருக்கும்




போய்ச் சேரவில்லை என்றாலும் ஒட்டு விதைகளும் ரசாயனங்களும் எல்லாரையும் தொட்டுவிட்டன. பாரம்பரிய விதைகள் காணாமல்போய்விட்டன. நிலங்கள் அனைத்தையும் பசுமைப் புரட்சி பாழ்படுத்திவிட்டது. பணக்கார விவசாயி ஆழ்துளைக் கிணறு போட்டு நிலத்தடி நீரை உறிஞ்சி எடுத்துவிடுகிறான். ஏழை விவசாயிகளுக்கு நீர் கிடைப்பதில்லை.”

தன்னுடைய இறுதிக் காலத்தில் மிக உடல் நலன் குன்றிப் போயிருந்தார் நம்மாழ்வார், வயிற்று வலி. ஆனால், எத்தனையோ வற்புறுத்தியும் கடைசி வரையிலும் ஆங்கில மருந்துகளை எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார். எத்தனை சொன்னாலும் கேட்க மறுக்கிறாரே என்பார் டாக்டர் ஜீவானந்தம். மக்களின் நல்வாழ்வுக்காகத் தன்னுடைய உடல் நலனையும் கருதாது இறுதிக் காலம் வரை உழைத்து இயற்கையுடன் கலந்தவர் அவர்.

2013 டிசம்பர் 30—ல் நம்மாழ்வார் மறைந்தார். முந்தைய நாள், டிச. 29—ல் தஞ்சை முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில், மறைந்த பாசனப் பொறியியல் வல்லுநர் முனைவர் பழ. கோமதிநாயகம் (நினைவு நாளில்) எழுதிய ‘நீரின்றி அமையாது நிலவளம்‘ என்ற நூல் வெளியீட்டு விழா. நூலை நம்மாழ்வார் வெளியிட டாக்டர் ஜீவானந்தம் பெற்றுக்கொண்டார். உடல் நலம் மிகவும் குன்றியிருந்த நிலையில் அவர் வருவாரா என்பது சந்தேகமாகவே இருந்தது. ஆனால், விழா தொடங்கவிருந்த நேரத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார். நடக்கவே முடியவில்லை. கைத்தாங்கலாகத்தான் அழைத்து வந்தனர். சந்தித்து நீண்ட காலமாகிவிட்டது. அருகே சென்று ஐயா, நல்லாயிருக்கிறீர்களா என்றால் கேட்டால் கேலி செய்வதைப் போலதான் இருக்கும்.

மேடையேற்ற வேண்டாம், அனைவரும் இறங்கிவர கீழேயே புத்தகத்தை வெளியிட்டுவிடலாம் என்றபோது மறுத்துவிட்டு நம்மாழ்வார் மேடையேறினார். நூலை வெளியிட்டு முழு நேரமும் மேடையில் அமர்ந்திருந்த அவர் மூச்சிரைக்க, மூச்சிரைக்கத்தான் பேசினார். முடியவில்லை. மறு நாள், டிச. 30—ல் அவர் பங்கேற்ற விழாச் செய்திகள் நாளிதழ்களில் வெளியாகி, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த நேரத்திலேயே, பெருந்துயராக அவருடைய மறைவும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

தமிழகத்தில் இயற்கை விவசாயத்தின் முன்னத்தி ஏர் நம்மாழ்வார். ரசாயனம் கலக்காத மாற்று விவசாயத்தைத் தமிழகத்தில் பரவலாக்கியவர், பஞ்சகவ்யம், மண்புழு உரம் மற்றும் மக்கிய குப்பை உரம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் குறைந்த செலவில் விவசாயம் செய்து விவசாயிகள் நேரடியாக அதிக லாபம் அடைய முடியும் என்று நம்பினார், வெற்றிகரமாகச் செயல்படுத்தியும் காட்டினார்.

வேம்புக்கு அமெரிக்கா உரிமை கொண்டாடியபோது அங்கேயே சென்று எதிர்த்துக் களமாடி வெற்றி பெற்றவர் நம்மாழ்வார். பெரும்பாலான விதைகளின் காப்புரிமைகள் நம்மைவிட்டுச் சென்றுவிடாமல் காத்தவர் அவர். கடைசிக் காலத்தில் காவிரி டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு எதிர்ப்பு போராட்டங்களில் மக்களுடன் மக்களாக நின்றார். அவருடைய நினைவாக கரூர் மாவட்டம் கடவூர் பகுதியில் இன்றிருக்கிறது சுமார் 40 ஏக்கர் பரப்பில் அவர் உருவாக்கிய வானகம். இங்கிருந்தபடிதான் இயற்கை விவசாயத்துக்கான எண்ணற்ற முன்னெடுப்புகளை மேற்கொண்டார் நம்மாழ்வார். இறுதியில் அவரும் இங்கேயேதான் விதைக்கப்பட்டார்.

நம்மாழ்வாரின் இன்னமும் நிறைவேறாத ஆனால் நிறைவேற்றியே தீரவேண்டிய கனவான நஞ்சற்ற, இயற்கை விவசாயம். மருந்தில்லா நல வாழ்வு என்ற இலக்கை நோக்கிய பயணத்தைத் தொய்வின்றித் தொடருவதே சிறப்பான அஞ்சலியாக இருக்கும்.

# சிவகாமியின்




## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## இராஜகுல தர்மம் 57

அமைச்சர்களும் சற்று விலகிச் சென்றார்கள். மறுபடியும் சக்கரவர்த்தி அழைத்தவுடனே திரும்பி வருவதற்கு ஆயத்தமாகக் காத்திருந்தார்கள். சக்கரவர்த்திக்குச் சமீபமாக மாமல்லரும் அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் பரஞ்சோதியும் வணக்கத்துடன் நின்றார்கள்.

மகேந்திர பல்லவர் படுத்திருந்த மண்டபத்துக்கு ஒரு பக்கத்தில் அந்தப்புரத்தின் வாசல் இருந்தது. மகேந்திர பல்லவர் அங்கே திரும்பி நோக்கியதும் தாதி ஒருத்தி ஓடி வந்தாள். அவளிடம், “மகாராணியை அழைத்து வா!” என்று பல்லவ வேந்தர் ஆக்ஞாபித்தார்.

“பின்னர் மாமல்லரைப் பார்த்து, “குழந்தாய்! நான் கண் மூடுவதற்குள் இரண்டு காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். அதில் ஒன்று நிறைவேறி விட்டது. சிவகாமியின் சபதத்தைப் பூர்த்தி செய்து அவளை வாதாபியிலிருந்து நீ அழைத்து வரும் விஷயத்தில் நமது மந்திரிப் பிரதானிகளால் ஏதேனும் தடை நேராதிருக்கும் பொருட்டு அவர்களிடம் உன் முன்னிலையில் வாக்குறுதி பெற்றுக் கொண்டேன். வாக்குறுதியிலிருந்து அவர்கள் பிறழ மாட்டார்கள். வாதாபிப் படையெடுப்புக்கு உனக்குப் பூரண பக்கபலம் அளிப்பார்கள்” என்றார். மாமல்லர் மறுமொழி எதுவும் சொல்லவில்லை.




“மகனே! நான் செய்ய விரும்பும் இரண்டாவது காரியம் உன்னைப் பொறுத்திருக்கின்றது. நீதான் அதை நிறைவேற்றித் தர வேண்டும். மரணத்தை எதிர்பார்க்கும் சக்கரவர்த்தியின் கோரிக்கையை மந்திரி பிரதானிகள் உடனே ஒப்புக் கொண்டார்கள். என் அருமைப் புதல்வனாகிய நீயும் என் அந்திமகால வேண்டுகோளை நிறைவேற்றித் தருவாயல்லவா?” என்றார் மகேந்திரர்.”

“அப்பா! என்ன வேண்டுமானாலும் எனக்குக் கட்டளையிடுங்கள். நிறைவேற்றுகிறேன். கோரிக்கை, வேண்டுகோள் என்று மட்டும் சொல்லாதீர்கள்!” என்றார் மாமல்லர்.

“குமாரா! இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கூடிய சீக்கிரம் உன் தலையில் சாரப் போகிறது. ஆயிரம் ஆண்டுகளாகப் புகழ்பெற்ற காஞ்சிமா நகரின் சிம்மாசனத்தில் நீ வீற்றிருக்கும் காலம் நெருங்கி வந்திருக்கிறது..”

“அப்பா! இவ்விதமெல்லாம் தாங்கள் பேசுவதானால், நான் இங்கிருந்து போய் விட விரும்புகிறேன். எனக்குச் சிம்மாசனமும் வேண்டாம், சாம்ராஜ்யமும் வேண்டாம். தாங்கள்தான் எனக்கு வேண்டும். நெடுங்காலம் தாங்கள் திடகாத்திரமாக வாழ வேண்டும்...”

“மாமல்லா! நம்முடைய கண்களை நாமே மூடிக் கொண்டு எதிரேயுள்ளதைப் பார்க்காமல் இருப்பதில் பயனில்லை. இனி நெடுங்காலம் நான் ஜீவித்திருக்கப் போவதில்லை. அப்படி ஜீவித்திருந்தாலும் திடகாத்திரமாக இருக்கப் போவதில்லை. சாம்ராஜ்ய பாரத்தை இனிமேல் என்னால் ஒரு நிமிஷமும் தாங்க முடியாது. அந்தப் பொறுப்பை நீதான் வகித்தாக வேண்டும்..”





“பொறுப்பு வகிக்க மாட்டேன் என்று நான் சொல்லவில்லையே? காஞ்சி சிம்மாசனத்தில் தாங்கள் இருந்து கொண்டு எனக்குக் கட்டளையிடுங்கள், நான் நிறைவேற்றாவிடில் கேளுங்கள்.”

“நல்லது மகனே! இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பொறுப்பை நிர்வகிப்பதற்குத் தகுதி பெற வேண்டுமானால் அதற்கு முக்கியமான ஒரு நிபந்தனை இருக்கிறது. அதை நீ பூர்த்தி செய்தாக வேண்டும்!”

“நிபந்தனையைச் சொல்லுங்கள், அப்பா!” என்றார் மாமல்லர் அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒருவித வேதனை உண்டாயிற்று.

“குழந்தாய்! வளைத்து வளைத்துப் பேசுவதில் என்ன பயன்? நீ எனக்கு ஒரே மகன், வாழையடி வாழையாக வந்த பல்லவ வம்சம் உன்னோடு முடிவடைந்து விடக்கூடாது. காஞ்சி





சிம்மாசனத்தில் ஏறத் தகுதி பெறுவதற்கு நீ கலியாணம் செய்து கொள்ள வேண்டும். மாமல்லா! பாண்டிய இராஜகுமாரியை மணந்து கொள். நான் கண்ணை மூடுவதற்குள்ளே நீ இல்லறம் மேற்கொண்டு நான் பார்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் நிம்மதி அடையாது, என் நெஞ்சு வேகாது!" என்றார் சக்கரவர்த்தி.




மேற்படி மொழிகள் மாமல்லரின் இருதய வேதனையை பன்மடங்கு அதிகமாக்கின. அவருடைய நெஞ்சில் ஈட்டியால் குத்தியிருந்தால் கூட அத்தனை துன்பம் உண்டாகியிராது.

சற்று மௌனமாய் நின்று விட்டு, "அப்பா! ஏன் இப்படி என்னைச் சோதனை செய்கிறீர்கள்? என் மனோநிலை உங்களுக்குத் தெரியாதா? சிவகாமியின் மேல் நான் அழியாத காதல் கொண்டிருப்பதை அறியீர்களா? ஒரு பெண்ணிடம் மனம் சென்ற பிறகு, இன்னொரு பெண்ணை எப்படி மணப்பேன்? அப்படிச் செய்வது மூன்று பேருடைய வாழ்க்கையையும் பாழாக்குவதாகாதா? இத்தகைய காரியத்தைச் செய்யும்படி எனக்குக் கட்டளையிடுகிறீர்களா?" என்று மாமல்லர் கேட்டார்.

அவருடைய வார்த்தை ஒவ்வொன்றும் இருதயத்தின் அடிவாரத்திலிருந்து நெஞ்சின் இரத்தம் தோய்ந்து வெளிவந்தது.

மகேந்திர பல்லவர் குமாரனை அன்புடனும் ஆதரவுடனும் தடவிக் கொடுத்தார். பிறகு கனிவு ததும்பும் குரலில் கூறினார்: "ஆம், நரசிம்மா! அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும்படி தான் சொல்கிறேன். அந்தக் காரியத்தின் தன்மையை நன்கு அறிந்து சொல்கிறேன். கேள், மாமல்லா! இந்த உலகத்தில் சாதாரண மனிதர்களுக்குத் தர்மம் வேறு. இராஜகுலத்தில் பிறந்தவர்களுக்குத் தர்மம் வேறு. சாதாரண ஜனங்கள் தங்களுடைய சொந்த சுகதுக்கங்களை உத்தேசித்துக் காரியம் செய்யலாம். ஆனால் ராஜ குலத்தில் பிறந்தவர்கள் அவ்வாறு செய்வதற்கில்லை. தங்கள் சுகதுக்கங்களை அவர்கள் மறந்துவிட வேண்டும். இராஜ்யத்தின் நன்மையைக் கருதியே இராஜ குலத்தினர் தங்கள் சொந்தக் காரியங்களையும் வகுத்துக் கொள்ள வேண்டும். மாமல்லா! யோசித்துப் பார்! சிவகாமியை நீ மணந்து கொள்வது இனிமேல் சாத்தியமா? வாதாபிக்கு நீ படை எடுத்துப் போவது இன்றோ நாளையோ நடக்ககூடிய காரியமா? வருஷக் கணக்கில் ஆயத்தம் செய்ய வேண்டியிருக்கும். அப்புறம் யுத்தம் எத்தனை காலம் நடக்குமோ, யார் சொல்ல முடியும்? அத்தனை நாளும் நீ கலியாணம் செய்து கொள்ளாமல் இருப்பாயா? அதற்கும் பல்லவ நாட்டுப் பிரஜைகள் சம்மதிப்பார்களா?"

மாமல்லர் பெருமூச்சு விட்டார். சிவகாமியின் மீது அவருக்குச் சொல்ல முடியாத கோபம் வந்தது. அந்தப் பாதகி தன்னுடன் புறப்பட்டு வர மறுத்ததனால் தானே இப்போது இந்தத் தர்மசங்கடம் தனக்கு நேரிட்டிருக்கிறது! அவருடைய உள்ளப் போக்கை அறிந்து கொண்ட மகேந்திர பல்லவர், "குமாரா! இராஜ குலத்தினர் தங்களுடைய சுகதுக்கங்களைப் பாராமல் இராஜ்யத்துக்காகவே எல்லாக் காரியங்களும் செய்தாக வேண்டும் என்று உனக்குச் சொன்னேனல்லவா? அதை நானே என் வாழ்க்கையில் அனுசரித்து வந்திருக்கிறேன். இப்போது கூட இராஜ்யத்தின் நன்மைக்காக ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்வதற்கு மனம் துணிந்திருந்தேன். அந்தப் பயங்கரமான காரியம் என்ன தெரியுமா?" என்று மகேந்திர பல்லவர்

நிறுத்தினார். மாமல்லர் ஒன்றும் புரியாதவராய்த் தாயாரையும் தந்தையையும் மாறி மாறிப் பார்த்தார். "ஆம், குமாரா! இந்த வயதில் உன் தாயாருக்கு இன்னொரு சக்களத்தியை அளிப்பதென்று தீர்மானித்திருந்தேன். நீ வாதாபியிலிருந்து சிவகாமியை இப்போது அழைத்து வந்திருந்தால், அவளை நானே மணந்து கொள்வதென்று முடிவு செய்திருந்தேன்..." என்றதும் மாமல்லர் "அப்பா!" என்று அலறினார்.

"மாமல்லா! என்னை மன்னித்து விடு! இராஜ்யத்தின் நன்மைக்காகவே அந்தப் பயங்கரமான காரியத்தைச் செய்யத் துணிந்திருந்தேன். நீ சிவகாமியை மணக்காமல் தடுக்கும் பொருட்டே அவ்விதம் செய்ய எண்ணினேன். உன் அன்னையிடமும் சொல்லி அனுமதி பெற்றேன். ஆனால், அந்தப் புண்ணியவதி வாதாபியிலிருந்து வர மறுத்து என்னை அந்தப் பயங்கரச் செயலிலிருந்து காப்பாற்றினாள்!"

மாமல்லருடைய மனம் அப்போது வாதாபி மாளிகையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருக்கும் சிவகாமியிடம் சென்றது. 'ஆ! அவள் தம்முடன் புறப்பட்டு வர மறுத்தது எவ்வளவு நல்லதாயிற்று?'



"குமாரா! இப்போது யோசித்துப் பார்! இராஜ்யத்தின் நன்மைக்காக நான் செய்யத் துணிந்ததைக் காட்டிலும் உன்னைச் செய்யும்படி கேட்பது பெரிய காரியமா? பாண்டியகுமாரியை மணப்பதனால் பல்லவ ராஜ்யத்துக்கு எவ்வளவு பலம் ஏற்படும் என்று சிந்தனை செய். நீ செய்வதற்குரிய மகத்தான பிரம்மாண்டமான காரியங்கள் இருக்கின்றன. வாதாபிக்குப் படையெடுத்துச் சென்று சளுக்கப் பூண்டை அடியோடு அழித்து வருவதென்பது சாமான்யமான காரியமா? அதற்கு எத்தனை துணைப் பலம் வேண்டும்? தென்னாட்டிலுள்ள எல்லா மன்னர்களும் சேர்ந்து பிரயத்தனம் செய்தாலொழிய அது சாத்தியப்படுமா? தெற்கே ஒரு சத்ருவை வைத்துக் கொண்டு வடக்கே படையெடுத்துச் செல்வது முடியுமா? நரசிம்மா! எந்த வழியில் பார்த்தாலும் பாண்டிய ராஜகுமாரியை நீ மணப்பது மிகவும் அவசியமாகிறது...."

இவ்விதம் இடைவிடாமல் பேசிய காரணத்தினால் மகேந்திர பல்லவர் பெருமூச்சு வாங்கினார். அவருடைய கஷ்டத்தைப் பார்த்த புவனமகாதேவி, "பிரபு! இவ்வளவு நேரம் பேசலாமா? வைத்தியர் அதிகம் பேசக் கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறாரே?" என்று சொல்லி விட்டு, மாமல்லனை பார்த்து, "குழந்தாய்! உன் தந்தையை..." என்றாள். அன்னை மேலே பேசுவதற்கு மாமல்லர் இடம்கொடுக்கவில்லை.

"அப்பா! தாங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். பாண்டியகுமாரியை நான் மணந்து கொள்கிறேன்!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னார்.

மகேந்திர சக்கரவர்த்தியின் முகம் மலர்ந்தது. புவனமகாதேவியோ தன் கண்களில் துளித்த கண்ணீரை மறைக்க வேறு பக்கம் திரும்பினாள்.

மகேந்திர பல்லவர் சமிக்ஞை காட்டியதும் தளபதி பரஞ்சோதியும் முதல் மந்திரி பிரதானிகளும் அருகில் வந்தார்கள்.

"தலைவர்களே! அதிக நேரம் உங்களை காக்க வைத்து விட்டேன். அவ்வளவுக்கவ்வளவு உங்களுக்குக் குதூகலச் செய்தியைத் தெரிவிக்கப் போகிறேன். குமாரச் சக்கரவர்த்திக்கும் பாண்டிய குமாரிக்கும் கலியாணம் நிச்சயமாகியிருக்கிறது. அதே பந்தலில் அதே முகூர்த்தத்தில் சேனாதிபதி பரஞ்சோதிக்கும் கலியாணம் நடைபெறுகிறது!" என்று மகேந்திர பல்லவர் கூறியதும், கேட்டவர்கள் அவ்வளவு பேரும் ஒரே குதூகலமாக மாமல்லர் வாழ்க! சேனாதிபதி வாழ்க!" என்று கோஷித்தார்கள்.

(சபதம் தொடரும்)



# யோக

**உடலுக்கு ஒளி... மனதுக்கு அமைதி !**

யோகா அல்லது யோகம் என்ற சொல்லுக்கு ஒருங்கிணைதல், ஒன்று சேருதல், பதங்கமாதல் என்று பல அர்த்தங்கள் உண்டு. உடல், மனம், ஆன்மா இம்மூன்றும் ஒருங்கிணைதல் என்று நாம் இதனை எடுத்துக் கொள்ளலாம். மஹரிஷி பதஞ்சலி கூறியிருக்கும் யோகசூத்ரம் என்ற நூலிலும், திருமூலர் அருளியிருக்கும் திருமந்திரத்திலும் அட்டாங்க யோகம் அல்லது அஷ்டாங்க யோகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒருங்கிணைதல் என்ற மெய்யுணர்வு, மெய்யறிவு பெற எட்டு படி நிலைகள் குறித்து இவர்கள் விவரித்துள்ளனர். அதில் ஒரு பகுதி மட்டுமே இந்த ஆசனம்.

முறையான உடற் பயிற்சிகள் மூலம் உடலை நோயின்றி வைத்துக்கொள்வதால், அதிக நேரம் தியானத்தில் ஈடுபட முடிகிறது. இந்த தியானத்திலிருந்தே ஒருங்கிணைதல் அகம் பிரம்மாஸ்மி என்கிற மெய்யுணர்வு கிடைக்கப் பெறுகிறது. ஆழமான தியானத்தில் ஈடுபடவும், உடலை தயார்படுத்தவுமே ஆசனம் என்கிற படிநிலை வைக்கப்பட்டுள்ளது.

ஆசனம் என்பது இங்கு மூன்றாவது படிநிலைதான். முதல் இரண்டு படிநிலைகள் அதைவிட முக்கியமானவை. அவைதான் அஸ்திவாரமும். முதல் படி நிலை இயமம். இரண்டாவது படி நிலை நியமம். இந்த இயம, நியமங்கள் மனிதனின் ஒழுக்க பழக்கங்களை பற்றி பேசுகிறது. இதில் இயமம் ஐந்தாய் பிரிக்கப்படுகிறது.முதலில் அஹிம்சை. அதாவது, கொல்லாமை என்று இதற்கு பொதுவான அர்த்தம் உண்டு. மனம், சொல், செயல் இந்த மூன்றின் மூலமாகவும் தன்னையோ, பிறரையோ புண்படுத்தாமல் இருப்பது. இரண்டாவது சத்தியம். பொய் பேசாமல் இருத்தல். இதில் சிந்தையும், சொல்லும், செயலும் ஒற்றுமையாய் இருத்தலே சத்தியம்.

மூன்றாவது அஸ்தேயா. அதாவது, திருடாமை. பிறருடைய பொருட்களை திருடாது இருத்தல் என எடுத்துக் கொண்டாலும், பிறருடைய எண்ணம், பிறருடைய உடமை, பிறருடைய உழைப்பின் பலனை, மனதாலும் ஆசைப்படாமல் இருத்தல் என்பதே இதன் ஆழமான அர்த்தமாகும். நான்காவது பிரம்மச்சர்யம். உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி ஆற்றலை உயர்ந்த நோக்கத்தில் எடுத்துச் செல்லுதல். ஐந்தாவது அபரிகிரஹம். பற்றின்மை. தேவைக்கு மேல் பொருட்களை சேர்க்காமல் இருத்தல். பேராசையை விடுதல். இவை அனைத்தும் பற்றின்மையில் வரும். இனி






ஆ.வின்சென்ட் பால்

ஆசனங்கள் குறித்து பார்ப்போம்.

வக்ராசனம்

முதுகுத் தண்டு வளைந்து இருப்பதனால் வக்ராசனம் என்று பெயர். தமிழில் வளைந்த ஆசனம் அல்லது முறுக்கு பயிற்சி என்று அழைக்கப்படும் இந்த ஆசனம் செய்ய எளிமையானது. பலன் தரக்கூடியது. விரிப்பின் மீது தண்டாசனத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும். இப்போது வலது முட்டியை மடக்கி வலது பாதத்தை இடது கால் முட்டிக்கு இணையாக வைத்துக் கொள்ள வேண்டும். வலது கையினை நன்றாக சுழற்றி, பின்பக்கம் முதுகுத் தண்டுவடத்துக்கு நேராய் வைக்க வேண்டும். இடது கையை வலது காலுக்கு வெளிப்புறமாக கொண்டு வந்து கணுக்கால்களை பிடித்துக் கொள்ள வேண்டும்.




வெளி மூச்சை இழுத்தபடி, தலையை வலது புறம் பின்பக்கமாகத் திரும்பிப் பார்க்க வேண்டும். இந்த ஆசனத்தில் 30 விநாடியில் இருந்து ஒரு நிமிடம் வரை இயல்பான மூச்சில் இருக்கலாம்.

முதுகுத் தண்டோடு இணைந்து உள் உறுப்புகளும் வளையும்போது, ஜீரண உறுப்புகளுக்கு நல்ல இயக்கம் கிடைக்கிறது. இயல்பான சுவாசத்தில் இருந்த நிலையில் இடது கையினை வலது கணுக்காலிலிருந்து விலக்கி, பின் பக்கம் இருக்கும் வலது கையினை முன் பக்கம் கொண்டுவர வேண்டும். இப்போது வலது காலை நேராக்கி ஓய்வு நிலைக்கு செல்லலாம். வலது பக்கம் செய்தது போலவே இடது பக்கமும் அதே கால அளவில் செய்வது அவசியம்.

பலன்கள்

*முதுகுத் தண்டின் நெகிழ்வை அதிகரிக்கும்.

*மலச்சிக்கல், செரிமானக் கோளாறுகள் குறையும்.


*இடுப்பு வலி, முதுகு வலி பிரச்னைகளுக்கு நிவாரணமாய் அமையும்.

*நரம்பு மண்டலத்தில் ஒத்திசைவு ஏற்படும்.

*கணையம், ஈரல் போன்றவை சுத்திகரிக்கப்பட்டு உடல் ஆரோக்கியம் அதிகமாகும்.

*நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு உபயோகமான ஆசனம்.

*கர்ப்பிணிப் பெண்கள், மிகச் சமீபத்தில் அறுவை சிகிச்சை செய்தவர்கள், உடலுக்கு மிகவும்




முடியாதவர்கள் செய்வதை தவிர்க்கவும்.

அர்த்த பவன முக்தாசனம்

இதை பவன முக்தாசனம், அர்த்த பவன முக்தாசனம் என இரண்டு வகையாகச் செய்யலாம். முதலில் அர்த்த பவன முக்தாசனம். அர்த்த என்ற சமஸ்கிருத சொல்லுக்கு பாதி எனப் பொருள். ஒரு காலை மட்டும் மடக்கி வயிற்றுப் பகுதியில் அடைந்திருக்கும் காற்று, அதாவது, அபான வாயுவை வெளியேற்ற உதவி செய்யும் ஆசனம்.

விரிப்பின் மீது மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். வலது காலை முதலில் செங்குத்தாக தூக்கி வலது முட்டியை மடக்கி மடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளாலும் கெண்டைகால் பகுதியை நன்றாக அணைத்துப் பிடிக்க வேண்டும். வலது காலின் தொடைப் பகுதி வலது பக்க வயிற்றுப் பகுதியை நன்றாக அழுத்துவதாக இது அமைந்திருக்கும்.

இடது காலை தலையிலிருந்து 45 டிகிரி கோணத்தில் தூக்கிய நிலையில், மூச்சை வெளியிட்டவாறு, தலை, கழுத்துப் பகுதியினை வலது முட்டியை நோக்கி மடக்க வேண்டும். 30 விநாடிகள் முதல் ஒரு நிமிடம் வரை இருந்துவிட்டு, பொறுமையாகத் தலை பகுதியை முதலில் கீழே வைக்க வேண்டும்.

இரண்டாவது இடது காலை கீழே இறக்க வேண்டும். மூன்றாவதாக கைகளை தளர்த்திய நிலையில், வலது காலை நேராக நீட்டிக் கொள்ள வேண்டும்.இப்போது வலது பக்கம் செய்ததை, அதே கால அளவில் இடது பக்கமும் செய்து பழகுதல் அவசியம்.

பவன முக்தாசனம்

இரண்டு கால்களையும் சேர்த்து செய்வது பவன முக்தாசனம். பவன என்றால் காற்று அல்லது வாயு. முக்தா என்றால் வெளியேற்றம். பவன முக்தாசனம் என்பது உடலில் அடங்கி இருக்கும் காற்றை வெளியேற்றும் ஆசனம். விரிப்பின் மீது மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும். இரண்டு கால்களையும் செங்குத்தாக தூக்கி நிறுத்த வேண்டும். பொறுமையாக முட்டியினை மடக்கி இரண்டு கால்களையும் மடித்துக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளாலும் வெளிப் பக்கத்திலிருந்து நன்றாக அணைத்துப் பிடிக்க வேண்டும்.

இப்போது தொடைப்பகுதி இரண்டும் வயிற்றுப் பகுதியில் அழுத்தம் கொடுக்க வேண்டும். வெளி மூச்சை எடுத்தபடியே தலையை தூக்கி, மூக்கின் நுனிப் பகுதி, இரண்டு முட்டிகளுக்கு இடையில் நுழையும்படி கழுத்தை நன்றாக வளைக்க வேண்டும். மூச்சு இதற்கு முக்கியம். மூச்சை எவ்வளவு நேரம் அடக்கி இருக்க முடிகிறதோ, அவ்வளவு நேரம் மட்டுமே இந்த ஆசனத்தில் இருக்க வேண்டும்.

இப்போது தலையை பொறுமையாகக் கீழே கொண்டுவந்து விரிப்பின் மீது வைத்த பிறகு உள் மூச்சினை எடுக்க வேண்டும். எவ்வளவு நேரத்திற்கு ஒருவரால் வசதியாக மூச்சுப் பிடித்து இருக்க முடிகிறதோ அதுதான் இந்த ஆசனத்திற்கான கால அளவு. உடலை வற்புறுத்தி இந்த ஆசனத்தைச் செய்தல் கூடாது.

பலன்கள்

*செரிமானத்தை மேம்படுத்தி சீராக்கும்.

*மலச்சிக்கல் குறையும்.

*வயிறு வீக்கம், வாயுத் தொந்தரவு குறையும்.

*குடலில் சிக்கியுள்ள காற்று வெளியேறுவதால், வயிற்றுப் பகுதி இலகுவாகும்.

*வயிற்றுத் தசைகள், அடிவயிற்றுப் பகுதி

தசைகள், மையத் தசைகள் உறுதியாகும்.

*முதுகுத் தண்டின் இறுக்கத்தை தணிக்கும்.

*கீழ் முதுகுப் பகுதியில் உள்ள வலி, தளர்ச்சி ஆகியவற்றைக் குறைத்து நெகிழ்வுத் தன்மையை அதிகரிக்கும்.

அஷ்டாங்க யோகத்தின் மூன்றாவது படி நிலையே ஆசனம். அடுத்தடுத்த படிநிலைகளுக்கு மனமானது சென்று உச்சபட்ச சமாதி நிலையை எய்த வேண்டுமெனில், நமது உடலானது ஆரோக்கியமான கருவியாக இயங்க வேண்டும்.




இதற்கு ஆசனங்கள் மற்றும் ஆசனப் பயிற்சிகள் அவசியமாகிறது.

நான்காவது பிராணாயாமம். பிராணன், அயமம் என்ற இந்த இரண்டு வார்த்தைகளை சேர்த்தால் பிராணாயாமம் என்று வருகிறது. பிராண என்றால் உயிர் வாழ்வதற்கு அவசியமான ஆற்றல். அதாவது, உயிர் ஆற்றல். அயமம் என்றால் கட்டுப்படுத்துதல். எனவே, பிராணாயாமா என்பது மூச்சுப் பயிற்சி மட்டுமல்ல, இது உயிர் ஆற்றலை மேம்படுத்தும் பயிற்சியும் ஆகும். முதல் மூன்று படிநிலைகளான இயம, நியம ஆசனங்கள் உடலை சார்ந்தது. கடைசி மூன்றான இந்த தாரணை தியானம், சமாதி ஆகியவை மனதை சார்ந்தது. இந்த பிராணாயாமம், பதியாகாரம் இவை இரண்டும் புறத்துக்கும், அகத்துக்கும் இடையே ஒரு பாலமாக அமைகின்றன.

முறையான பிராணாயாமா பயிற்சிகளை மேற்கொண்டால் வலிகளிலிருந்து சுலபமாக விடுபடலாம். உடலில் இருக்கும் ஜீரண மண்டலம், ரத்த ஓட்ட மண்டலம், நரம்பு மண்டலம் என அனைத்து மண்டலங்களையும் ஆரோக்கியமாக வைக்க இது உதவும்.நம் மூச்சும், நம் மனமும் நெருங்கிய தொடர்புடையவை. இதைத்தான் சலே வாதே, சலே சித்தம், நிச்சலெ நிச்சலம் பவே தத் என ஸ்லோகம் குறிப்பிடுகிறது. அதாவது, மூச்சு அசையும் பொழுது சித்தம் அசைவிற்கும், மூச்சு அசையாமல் இருக்கும் பொழுது சித்தமும் அசைவில்லாமல் இருக்கும் என்று இதற்குப் பொருள்.

சேது பந்தாசனம்

ஆங்கிலத்தில் இதனை **Bridge Pose** என்று கூறுவார்கள். விரிப்பின் மீது மல்லாந்துபடுத்து, முட்டிகள் இரண்டையும் மடக்கி,இருபாதங்களையும் உடலுக்கு அருகில் வைக்க வேண்டும். கைகள் இரண்டால், அந்தந்த காலின் கணுக்கால்களை படத்தில் காட்டியிருப்பது போல் பிடித்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் தலை, தோள்பட்டை, பாதங்கள் தரையில் இருக்க, மூச்சினை நன்றாக உள்ளிழுத்தபடி இடுப்பை மட்டும் மேல் நோக்கி உயர்த்த வேண்டும். இதுவே சேது பந்தாசனம். இப்போது மூச்சை வெளியே விடுத்தபடி, இடுப்பு பகுதியினை கீழே இறக்கி, கால்களை நீட்டி சவாசனத்தில் உடலை தளர்த்திக் கொள்ள வேண்டும்.

ஏகபாத சேது பந்தாசனம்

முதலில் சேது பந்தாசனம் நிலைக்கு உடலைக் கொண்டு வந்து, வலது காலை உயர்த்தி, கால் பாதம் வானத்தை நோக்கி பார்த்த நிலையில் உயர்த்திப் பிடித்து, முப்பது வினாடிகளுக்கு அப்படியே பிடித்திருந்துவிட்டு, பிறகு காலை கீழே இறக்க




வேண்டும். வலது காலில் செய்ததை அப்படியே இடது காலை உயர்த்தி செய்தல் வேண்டும்.

பலன்கள்

*இந்த ஆசனங்கள் வழியே சிறுசிறு மாற்றங்களைச் செய்வதன் மூலமாக, முதுகுத் தண்டுக்கு நெகிழ்வும், ஆரோக்கியமும் கூடும். முதுகுவலி குறையும்.

*கழுத்துப் பகுதி, மேல் முதுகு, நடு முதுகு, பிட்டம், தொடைகள், கண் மற்றும் கால் தசைகள் வலுப்பெறும்.

*மார்பு மற்றும் தோள்களின் நெகிழ்வுத் தன்மை மேம்படும்.

*தைராய்டு சுரபி தூண்டப்படும்.

*செரிமான மண்டலத்தின் செயல்பாடுகள் மேம்படுகிறது.

*பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் குறைவதை நன்றாக உணர முடியும்.

*ரத்த ஓட்டம் அதிகரிப்பதால், சோர்வு நீங்கி உடலுக்கு புத்துணர்வு கிடைக்கிறது.

*மன அழுத்தத்திற்கு காரணமான **Cortisol** ஹார்மோனை கட்டுப்படுத்துவதால், மன அழுத்தம், பதட்டம் குறைத்து மன அமைதி கிடைக்கும்.

*உளவியல் பிரச்னைகளுக்கு பலனுண்டு.

*உடலின் தோரணையை இந்த ஆசனம் மேம்படுத்தும்.

உபவிஷ்ட கோனாசனா

விரிப்பின் மீது தண்டாசனத்தில் அமர்ந்த நிலையில், படத்தில் காட்டியிருப்பது போல், ஆங்கில எழுத்து வடிவமான வி(க்ஷி) வடிவில் இரண்டு கால்களையும் இரண்டு பக்கவாட்டிலுமாக நன்றாக விரித்துக் கொள்ள வேண்டும். முதுகுத் தண்டுவடம் இப்போது நேராய் இருத்தல் அவசியம். கால்கள் இரண்டின் பாதவிரல்கள் உள்நோக்கி இருக்க, இடுப்பு மற்றும் தொடைப் பகுதியின் தசைகள், முட்டிக் கால்கள் இரண்டிலும் நன்றாக விரிந்திருப்பதை உணர முடியும்.

இப்போது நுரையீரல் நிரம்பும் அளவுக்கு உள் மூச்சை நன்றாக இழுத்து, கைகள் இரண்டையும் தோள் பட்டை உயரத்திற்கு உயர்த்த வேண்டும். உள் மூச்சினை இப்போது வெளியேற்றியபடி, இடுப்பு பகுதிக்கு மேலிருக்கும் உடல் பகுதியை முன் பக்கம் மெதுவாக வளைத்து மெல்ல மெல்ல கொண்டு செல்ல வேண்டும். இப்போது இரண்டு கைகளால், பாத விரல்கள் அல்லது கணுக்கால்களை பிடித்துக் கொள்ளலாம்.

உடல் நெகிழ்வுத் தன்மை அதிகம் உள்ளவர்கள் நன்றாக உள் மூச்சையும், வெளி மூச்சையும் எடுத்த நிலையில், தாடைப் பகுதியானது தரை வரை அல்லது தரை விரிப்பு வரை அல்லது மார்புக்கு கீழே தொடும் வரை தாடையை கொண்டு வரலாம். இதுவே உபவிஷ்ட கோனாசனம்.உள் மூச்சை இழுத்த நிலையில், உடம்பின் மேல் பகுதியை நேராக்கி, பாத விரல்களிலிருந்து கைகளை விலகிக்கொண்டு, பிறகு கால்கள் இரண்டையும் நேராக இணைத்து, தண்டாசனத்தில் உடலை தளர்வுப்படுத்திக் கொள்ள வேண்டும்.




பலன்கள்

*முதுகுத் தண்டுவடம், தோள்கள், இடுப்புத் தசைகள், தொடை தசைகள், கெண்டைக்கால் தசைகள் வலிமை பெறும்.

*ரத்த ஓட்டம் மற்றும் உடலின் நெகிழ்வுத் தன்மை மேம்படும்.

*சியாடிகா வலி, கீழ்முதுகு வலிக்கு நிவாரணம் கிடைக்கும்.

*இடுப்பு பகுதி ரத்த ஓட்டம் அதிகரிப்பதால், பெண்களின் மாதவிடாய் நேர எனப்படும் அடி வயிற்று வலி குறைவதுடன், மாதவிடாய் சுழற்சி சீராகும்.

*கர்ப்பப்பை சிக்கல்கள் குறையும்.

*உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் தாராளமாய் இந்த ஆசனத்தை செய்தால் பலன் உண்டு.

*நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி மன அழுத்தம், பதட்டத்தைக் குறைக்கும். மன அமைதி மேம்படும்.

மஹரிஷி பதஞ்சலி கூறியிருக்கும் அஷ்டாங்க யோகத்தில் ஐந்தாவது படி நிலை தாரணை. ஒரே ஒரு பொருள் புள்ளி அல்லது எண்ணம். அந்த ஒரே ஒரு பொருள் மீது மனதை சிதறாமல் உறுதியாக நிலை நிறுத்துதல் என்று அர்த்தம். ஏழாவது படி நிலை தியானம். அதே பொருளின் மீது மன ஓட்டம் இடைவிடாது தொடரும் நிலை. தியானிக்கும் அந்தப் பொருளின் மீது ஆழமாக சிந்தனையை செலுத்துதல் என்று கொள்ளலாம்.

எட்டாவது படி நிலை சமாதி. தியானிக்கும் நபர், தியான பொருள், தியானம்... இந்த மூன்றின் வேறுபாடு கரைந்து தூய சுத்த உணர்வு மட்டும் நிலைக்கும் நிலைதான் சமாதி. சம+ஆதி. அந்த ஆதி நிலைக்கு சமமாக நிற்பது என்று பொருள்.ஒரே பொருளின் மீது தாரணை, தியானம், சமாதி என்ற மூன்றையும் தொடர்ச்சியாகவும், ஒருங்கிணைந்தும் பயிற்சி செய்வதுதான் சம்யமம். இது மனதை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதனால் அந்தரங்க யோகம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அந்தரங்க யோகத்திற்கு யாரெல்லாம் தகுதியுடையவர்கள்?

இயம நியமங்களை உறுதியாக கடைப்பிடிப்பவர், உள் வளர்ச்சிக்கு தயாரான பக்குவம் கொண்டவர், விடா முயற்சி மற்றும் வைராக்கியம் கொண்டவர், அகம்பாவம் இல்லாத பணிவான இயல்பு படைத்தவர். சித்திகளை நாடாமல் சத்தியத்தை மட்டும் நாடும் மனம் படைத்தவர்கள் இந்த அந்தரங்க யோகம் அல்லது சம்யமத்திற்கு தகுதியான மனநிலைக் கொண்டவர்கள்.

தாரணை, தியானம், சமாதி ஆகிய பயிற்சிகளில் அயராது தம்மை ஈடுபடுத்திக் கொள்பவருக்கு கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் பற்றிய அறிவு, அனைத்து உயிர்களின் மொழி புரிதல், முந்தைய பிறவிகளின் அறிவு, பிறரின் மனநிலையை அறிதல், அசாதாரண உடல் வலிமை, இலகு தன்மை, கூர்மையான உணர்வு திறன், பிரபஞ்ச ரகசியங்களின் அறிவு போன்ற பல சித்திகள் கிடைக்கும் என்று பதஞ்சலி மஹரிஷி கூறுகிறார். ஆனால், இந்த சித்திகளின் மீது பற்று ஏற்பட்டு விட்டால் அது மோட்சத்திற்கு தடையாய் மாறும் என்றும் எச்சரிக்கையும் ஊட்டுகிறார்.



# மருத்துவத்

## இஞ்சியின் முழு பலன்களை பெற...

கர்ப்பம், பதற்றம், வயிற்றுப் புழு தொற்றுகள், பயணத்தின்போது ஏற்படும் வாந்தி எனப் பல விஷயங்கள் அவ்வப்போது நமக்கு பிரச்னை தரலாம். ஆனால், உணவில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில பொருட்கள் அவற்றைச் சரிசெய்ய உதவுமா? அவற்றுக்கு வேறு ஏதேனும் ஆரோக்கியம் தொடர்பான பலன்கள் உண்டா?

அப்படிப்பட்ட ஒரு பொருள்தான் இஞ்சி. இது குமட்டல் உள்பட பல நோய்களை எதிர்த்துப் போராடும் ஒரு காரமான பொருளாக உள்ளது. இது உண்மையிலேயே உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துமா? நிபுணர்கள் கூறுவது என்ன?இதன் பின்னுள்ள அறிவியல் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பல ஆய்வுகள் இஞ்சி பலருக்கு குமட்டல் அறிகுறிகளைக் குறைப்பதாக கூறுகின்றன. பிரிட்டன் தேசிய சுகாதார சேவையும் குமட்டலுக்கு இஞ்சி கலந்த தேநீரைக் குடிக்குமாறு பரிந்துரைக்கிறது. ஆனால் இஞ்சி எப்படி இதைச் செய்கிறது? "இதற்குக் காரணம் அதன் சக்தி வாய்ந்த அழற்சி எதிர்ப்புப் பண்புகள்தான். இது செரிமான மண்டலத்தில் ஏற்படும் அழற்சியை குறைக்க உதவுகிறது. அதன் மூலம் அசௌகரியத்தை போக்கி, வயிற்று உபாதைகளைச் சரிசெய்கிறது" என்று உணவியல் நிபுணரும் பிரிட்டிஷ் உணவியல் சங்கத்தின் செய்தித் தொடர்பாளருமான ஆன்னா டேனியல்ஸ் விளக்குகிறார்.

பல ஆய்வுகள் இஞ்சி மாத்திரைகளில் கவனம் செலுத்தி இருந்தாலும், இஞ்சி பிஸ்கட், இஞ்சி சிரப், இஞ்சி தேநீர் ஆகியவற்றின் செயல்திறனை ஆராயும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை அனைத்தும் இஞ்சி குமட்டல் அறிகுறிகளைக் குறைத்துள்ளதைக் காட்டியுள்ளன.

இஞ்சியால் ஏற்படும் நன்மைகள்

இஞ்சி குமட்டலுக்கு உதவுவது மட்டுமின்றி, பிற உடல்நலப் பிரச்னைகளிலும் பயனளிப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இது உண்மையா? உதாரணமாக, அழற்சியைப் போக்குவது, நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துவது போன்றவற்றை அது செய்கிறதா?

உங்கள் நோயெதிர்ப்பு மண்டலத்தை 'வலுப்படுத்தும்' ஓர் அதிசயப் பொருள் என்று எதுவும் இல்லை. உங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து வைட்டமின்கள், தாதுக்கள் அடங்கிய ஆரோக்கியமான, சமச்சீர் உணவைப் பின்பற்றுவது முக்கியமென வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், சக்தி வாய்ந்த ஆன்டிஆக்ஸிடன்ட்களை கொண்டிருப்பதால், சில பொருட்கள் அதற்கு உதவக்கூடும். இஞ்சி அத்தகைய பொருட்களில் ஒன்று என டேனியல்ஸ் நம்புகிறார்.

"இஞ்சியில் ஜிஞ்சரால் போன்ற உயிரியல் ரீதியாகச் செயல்படும் சேர்மங்கள் உள்ளன. இது






சக்திவாய்ந்த ஆன்டிஆக்ஸிடன்ட் பண்புகளைக் கொண்டுள்ளது. சிறிய அளவு, அதாவது ஒரு தேக்கரண்டி அல்லது ஒரு பூண்டுப் பல் அளவு, உங்களுக்குப் பல நன்மைகளை வழங்கும்," என்கிறார் அவர். "அதிலுள்ள அதிகளவிலான ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் பிற உயிரியல் ரீதியாகச் செயல்படும் சேர்மங்களால், இஞ்சி நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தவும், நோய்த் தொற்றுகளின் அபாயத்தைக் குறைக்கவும் உதவும்," என்று அவர் விளக்கினார்.

அதன் ஆன்டிஆக்ஸிடன்ட் பண்புகளை எடுத்துக்காட்டும் ஆய்வுகள் இதை உறுதிப்படுத்துகின்றன. ஒருவேளை தன்னுடல் தாக்க நோய்கள் (நோயெதிர்ப்பு மண்டலம் உடலைப் பாதுகாப்பதற்குப் பதிலாக ஆரோக்கியமான செல்களை தவறாகத் தாக்கும் நிலை) உள்ளவர்களுக்கு இது மிகவும் ஊக்கமளிப்பதாக இருக்கலாம். கொலராடோ பல்கலைக் கழகம் நடத்திய சமீபத்திய ஆய்வு, இது உடலில் ஏற்படும் அழற்சியில் இருந்து பாதுகாக்க உதவும் என்று பரிந்துரைக்கிறது.





**சைலஜா. கே**

இத்தகைய அறிகுறிகளுக்கு ஒரு நிவாரணியாக மக்கள் ஏற்கெனவே இஞ்சியை எடுத்துக் கொண்டிருப்பதே, பேராசிரியர் கிறிஸ்டன் டெமோருயல் இந்த ஆய்வை மேற்கொள்ள முடிவு செய்ததற்கான காரணம். "தன்னுடல் தாக்க நோய்களால் பாதிக்கப்பட்ட எனது நோயாளிகளில் பலர் இஞ்சி சப்ளிமென்ட்ஸ் எடுத்துக்கொள்கிறார்கள். இஞ்சி உடலில் அழற்சி எதிர்ப்பு விளைவுகளை எப்படி ஏற்படுத்துகிறது என்பதை ஆராயும் ஆய்வுகள் அதிகம் இல்லை."

"எனவே, நியூட்ரோபில்ஸ் எனப்படும் ஒரு குறிப்பிட்ட வகை அழற்சி செல்களில் அதன் விளைவைப் பார்ப்பதன் மூலம் இஞ்சியின் அழற்சி எதிர்ப்பு விளைவுகளை நாங்கள் ஆராய விரும்பினோம். முடக்கு வாதம், லூபஸ், ஆன்டிபாஸ்போலிப்பிட் சிண்ட்ரோம் போன்ற பல தன்னுடல் தாக்க நோய்களில் நியூட்ரோபில் செல்கள் அதிகப்படியாகச் செயல்படக்கூடும்." மனித உடலில் அதிகப்படியான நியூட்ரோபில்களை இஞ்சியால் கட்டுப்படுத்த முடியும் என்பதை உறுதி செய்யும் முதல் ஆய்வு எங்களுடையதுதான். இஞ்சியால் கட்டுப்படுத்தப்படக்கூடிய ஒரு குறிப்பிட்ட அழற்சி செல்லை எங்களால் நிரூபிக்க முடிந்ததால், இஞ்சியின் அழற்சி எதிர்ப்பு விளைவுகளால் எந்தெந்த மக்கள் அதிகம் பயனடைவார்கள் என்பதைத் துல்லியமாகக் கண்டறிய எங்கள் கண்டுபிடிப்புகள் உதவும்.

இதன்மூலம், சில தன்னுடல் தாக்க நோய்களின் அறிகுறிகளைக் குறைக்க இஞ்சி உதவக்கூடும் என்பது உறுதியாகியுள்ளது. இருப்பினும், "எங்கள் ஆய்வில் இஞ்சி சத்து மாத்திரை பயன்படுத்தப்பட்டது.




அதே மாதிரியான விளைவை, இஞ்சி தேநீர் அல்லது வெறும் இஞ்சி கொண்டிருக்குமா என்பதை அறிவது கடினம். ஏனெனில் பொதுவாக சத்து மாத்திரைகளுடன் ஒப்பிடும்போது இந்த வகைகளிலான இஞ்சி நுகர்வுகள் மூலம் உடலில் அதன் செறிவு குறைவாக உள்ளது," என்று டெமோரூயல் விளக்குகிறார்.

"எதிர்கால ஆய்வுகளில் தேநீர் மற்றும் உணவுகளில் உள்ள இஞ்சியின் விளைவையும் ஆராய்வது முக்கியம். ஏனெனில் இது முக்கியமானதாக இருக்கலாம். எங்கள் ஆய்வில் தன்னுடல் தாக்க நோய் இல்லாதவர்களும் சேர்க்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது." "தன்னுடல் தாக்க நோய்கள் உள்ளவர்களிடமும், குறிப்பாக முடக்கு வாதம், லூபஸ், வாஸ்குலிடிஸ், ஆன்டிபாஸ்போலிப்பிட் சிண்ட்ரோம் போன்ற அதிகப்படியான நியூட்ரோபில்கள் இருப்பதை வைத்து வகைப்படுத்தப்படும் தன்னுடல் தாக்க நோய்கள் உள்ளவர்களிடமும் இதேபோன்ற விளைவுகளைக் காண்போம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால் அந்த ஆய்வுகளை நாங்கள் இன்னும் விரிவாகச் செய்ய வேண்டியுள்ளது."

*இஞ்சி வலி நிவாரணியாக செயல்படுமா?*

"இஞ்சிக்கு வலி நிவாரணிப் பண்புகளும் உள்ளன. அது தசை வலி, புண் ஆகியவற்றைத் தணிக்க உதவும்" என்கிறார் டேனியல்ஸ்.உடற்பயிற்சியால் ஏற்படும் தசை வலியில் கவனம் செலுத்தும் ஆய்வுகளால் இது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஓர் ஆய்வின்படி, இஞ்சியின் அழற்சி எதிர்ப்பு விளைவு தீவிர உடல் செயல்பாடுகளுக்குப் பிறகு ஏற்படும் தசை வலியைக் குறைக்கும். மற்றோர் ஆய்வில், உடல் வலிமைப் பயிற்சி(**Strength training)** செய்தவர்கள் பச்சை இஞ்சி அல்லது சூடுபடுத்தப்பட்ட இஞ்சியை எடுத்துக் கொள்வது தசை வலியைக் குறைக்கிறதா என்று ஆராயப்பட்டது.

*இஞ்சியால் கிடைக்கும் பிற நன்மைகள்*

"இஞ்சி கொழுப்பு அளவையும் ரத்த அழுத்தத்தையும் குறைக்க உதவுவதாகவும் அறியப்படுகிறது. இதற்கு இதயத்தைப் பாதுகாக்கும் பண்புகள் உள்ளன. இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இதய நோய் அபாயத்தைக் குறைக்கவும் உதவும்" என்கிறார் டேனியல்ஸ்.இத்தாலியில் உள்ள கட்டானியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பயாஜியோ ஃபாலிகோ இந்தக் கூற்றுகளை ஆராய்ந்துள்ளார். "ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தெற்காசியாவின் அன்றாட சமையலிலும் பாரம்பரிய சீன மருத்துவத்திலும் இஞ்சி முக்கியமானதாக இருந்து வருகிறது. உணவுக்கு சுவையையும் நறுமணத்தையும் சேர்ப்பதுடன், ஆஸ்துமா, காய்ச்சல், அஜீரணம், இரைப்பைக் குடல் அசௌகரியம் உள்ளிட்ட பல நோய்களுக்கு சிகிச்சையளிக்க இது வரலாற்று ரீதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது."

ஃபாலிகோவின் ஆய்வு விரிவானதாக இருந்தது. இஞ்சியின் 'உயிரியல் ரீதியாகச் செயல்படும் கூறுகளை' ஆராய்ந்து, அவை உண்மையில் உடல்நலப் பிரச்னைகளை எதிர்த்துப் போராட உதவுகின்றனவா என்பதை அவர் அறிய விரும்பினர்."ஜிஞ்சரால் என்பது இஞ்சியில் உள்ள ஒரு சேர்மமாகும். இது அழற்சி எதிர்ப்பு, பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் புற்றுநோய் எதிர்ப்புப் பண்புகளைக்




கொண்டுள்ளது," என்று அவர் விளக்குகிறார். "உயிரியல் ரீதியாகச் செயல்படும் மற்றுமொரு சேர்மம் '6—ஷோகோல்'. இதுவும் அழற்சி எதிர்ப்பு, புண் எதிர்ப்பு, புரோஸ்டாக்லாண்டின் எதிர்ப்பு, புற்றுநோய் எதிர்ப்பு, ஊடுருவல் எதிர்ப்பு போன்ற பல மருந்தியல் மற்றும் சுகாதாரப் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அதோடு, இதுவொரு சக்தி வாய்ந்த சளி நீக்கி அல்லது திசு எதிர்ப்பு விளைவைக் கொண்டுள்ளது. இது ரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவும்."

இது தொடர்பாக மனிதர்களிடையே பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஒருபுறம் இருக்க, மறுபுறம் இஞ்சி உங்கள் அனைத்து மருத்துவப் பிரச்னைகளையும் தீர்த்துவிடும் என்று நினைத்துவிட வேண்டாமென ஃபாலிகோ எச்சரிக்கை விடுக்கிறார். "இஞ்சி தொடர்பாக இரண்டு விஷயங்களில் நான் உறுதியாக உள்ளேன். முதலாவதாக, ஓர் உணவுப் பொருளின் லேபிளில் இஞ்சியின் படம் இருப்பதாலேயே அந்தப் பொருளால் பயன் கிடைக்கும் என்று அர்த்தமல்ல. இரண்டாவதாக, நீங்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்துவிட்டு, அதை இஞ்சியைக் கொண்டு ஈடுசெய்ய முடியாது."

இஞ்சியின் முழு பலன்களை பெற அதை நம் உணவில் எவ்வாறு சேர்க்க வேண்டும்?

"இஞ்சியை உரிக்க வேண்டிய அவசியமில்லை" என்கிறார் தி குட்னஸ் ஆஃப் ஜிஞ்சர் அண்ட் டர்மரிக் என்ற சமையல் புத்தகத்தின் ஆசிரியரான எமிலி ஜோன்சென். "அதன் தோலை நன்றாகத் தேய்த்து சுத்தம் செய்து, உங்கள் விருப்பப்படி நறுக்கிக் கொள்ளலாம் அல்லது துருவிக் கொள்ளலாம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

உணவில் புதிதாக இஞ்சியை சேர்த்துக் கொள்பவர்களாக இருந்தால், "அதற்கு வலுவான சுவையும் காரத்தன்மையும் உள்ளது. எனவே அதை உங்கள் சமையலில் சிறிது சிறிதாகச் சேர்க்கத் தொடங்குங்கள்" என்று ஜோன்சென் அறிவுறுத்துகிறார். "முதலில் அதை ஒரு பானத்தில் முயன்று பாருங்கள்; ஒரு குவளையில் சிறிது இஞ்சியைத் துருவி, ஒரு துளி எலுமிச்சை சாறு மற்றும் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்து, அதன் மீது சூடான நீரை ஊற்றினால், ஒரு சுவையான, இதமான பானம் தயார்." அதன் பிறகு, அதை வதக்கிய காய்கறிகள், சாப்பாடு வகைகள் போன்ற பிற உணவுகளில் சேர்க்கத் தொடங்கலாம்.

இஞ்சியைப் பயன்படுத்தி சமைக்கும்போது அதன் மருத்துவ பலன்களை முழுமையாகப் பெற விரும்பினால், அதைச் சிறிய துண்டுகளாக நறுக்குமாறு டேனியல்ஸ் பரிந்துரைக்கிறார்."இது செல் சுவர்களை உடைத்து, அதன் சத்துகளை எளிதில் உடல் உறிஞ்சிக்கொள்ள உதவுகிறது. எனவே, துருவிய அல்லது பொடியாக நறுக்கிய இஞ்சியை தேநீரில் சேர்ப்பது நல்லது."

இஞ்சியை உணவில் சேர்த்துக் கொள்வதற்கான மற்றும் சில வழிகளையும் அவர் பரிந்துரைக்கிறார்: "துருவிய இஞ்சி, ஆலிவ் எண்ணெய், வினிகர், தேன், ஒரு சிட்டிகை சோயா சாஸ் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து சாலட் டிரஸ்ஸிங் தயாரிக்கலாம் அல்லது பொடியாக நறுக்கிய அல்லது துருவிய இஞ்சியை நிறைய காய்கறிகள் மற்றும் கடல் உணவு, மீன், கோழி அல்லது டோஃபு போன்ற கொழுப்பற்ற புரதங்களுடன் சேர்த்து வதக்கிய உணவுகளில் சேர்க்கலாம்."

"கருப்பு மிளகு மற்றும் மஞ்சளில் முறையே பைபரின் மற்றும் குர்குமின் எனப்படும் இயற்கைச் சேர்மங்கள் உள்ளன. இந்தச் சேர்மங்கள் இஞ்சியின் சத்துகளை உடல் சிறப்பாக உறிஞ்சிக்கொள்ள உதவுகின்றன. இதன்மூலம் உடலுக்கு இஞ்சியில் இருந்து அதிகப் பலன் கிடைக்கிறது. எனவே இந்த மூன்றையும் ஒரு சூடான பானத்தில் சேர்ப்பது, இஞ்சியின் பயன் திறம்படக் கிடைப்பதற்கு உதவும்."

*பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)*

# வள்ளுவம்


## வாழ்க்கையின் அர்த்தம் பொறுப்புணர்வு!

நம் அனைவருக்கும் எண்ணற்ற அனுபவங்களை தந்த ஆண்டாக 2025 நிச்சயம் இருந்திருக்கும். ஒரு சிலருக்கு ஆகச் சிறந்த அனுபவங்களையும், சிலருக்கு மிகக் கடுமையான பாடங்களையும், இன்னும் சிலருக்கு வேகமாக கடந்து போன ஆண்டாகவும், பலருக்கு எந்த மாற்றமும் இன்றி வெகு சாதாரணமாக கழிந்த ஆண்டாகக் கூட இருந்திருக்கும். ஆனாலும், ஒரு புது ஆண்டு தொடங்க இருக்கிறது எனும்போது எல்லோருக்குள்ளும் புதுப்புது நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் ஏற்படத்தான் செய்கின்றன. நம் வாழ்வில் ஒவ்வொரு தொடக்கத்திற்கு முன்பும் சில தீர்மானங்களை கட்டமைக்க மனம் உறுதி ஏற்கும்.

ஒரு புதிய சுழற்சி வாழ்வில் தொடங்கப்பட்டால் நமக்குள்ளும் பல வைராக்கியங்கள் உருவாகும். அதைத் தீவிரமாக் கடைபிடித்துச் செயல்படுத்துவதில் இருக்கிறது அவரவர் வெற்றி. பொதுவாகவே புத்தாண்டுக்கு பலரும் பல சபதங்களை ஏற்பது வழக்கம். இருப்பினும், பலருக்கு அது இரண்டொரு மாதங்களிலேயே நீர்த்துப் போய்விடுவதும் உண்டு.

புத்தாண்டு பிறந்தாலே பெருவாரியானவர்களுக்கு நாள்குறிப்பை பார்த்ததும் பெரிய உற்சாகம் ஏற்படும். ஜனவரி, பிப்ரவரியில் அடை மழைபோல் பக்கங்கள் எல்லாம் நிரம்பியிருக்க, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் மாதம் மும்மாரி பொழிந்ததுபோல் அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கும். பின்னர் ஜூன், ஜூலை, ஆகஸ்டில் சிறு தூறலாகிப் போய் செப்டம்பர், அக்டோபரில் வறட்சிக் காலமாகி நவம்பர், டிசம்பரில் “கிணற்றையே காணோம்‘ கதையாக நாள்குறிப்பையே எங்காவது தொலைத்திருப்போம். இது பலரது வாழ்விலும் நடந்திருக்கும் நகைச்சுவைதான். ஆனாலும், புத்தாண்டு என்றதும் எடுக்கப்பட்ட சபதங்கள் காலப்போக்கில் கரைந்து போனாலும் புதுப்புது முன்னெடுப்புகள் ஒவ்வொருவருக்கும் அவசியம்தான். அதுதான் நம் வாழ்வை சலிப்பிலிருந்து உற்சாகம் நோக்கி மடைமாற்றும். உடற்பயிற்சி செய்ய, மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள, தவறான பழக்கங்களை நிறுத்த, புத்தகங்கள் வாசிக்க, சுற்றுலா செல்ல, புது மொழி கற்க, புதுக் கலை பழக, நேர்மறையாக இருக்க, குடும்பத்துடன் நேரம் செலவிட, புதிய படிப்பில் சேர என ஒவ்வொருவரும் விதவிதமான சபதம் ஏற்றிருப்பார்கள். ஆனால், நாம் அனைவருமே கைக்கொள்ள வேண்டிய மனநிலை ஒன்று இருக்கிறது; அது பொறுப்புணர்வு.

அண்மையில் வெளிநாடுவாழ் இந்தியர் ஒருவரின் காணொலியைக் கண்டேன். இந்தியர்களை வெறுக்கும் மனநிலை ஏன் பிற நாட்டினரிடம் அதிகரிக்கிறது என்று சில காரணங்களை






# வழி !


பவித்ரா நந்தகுமார்


அடுக்கினார். பொது இடங்களில் குப்பை கொட்டுவதை வெகு இயல்பாக இந்தியர்கள் மேற்கொள்கின்றனர். சாப்பிட்டுவிட்டு, அந்த மிச்சம் மீதிகளை போகிற போக்கில் தூக்கி வீசுகிறார்கள். அதற்கென்று தூய்மைப் பணியாளர்கள் இருக்கிறார்கள் அல்லவா... அவர்கள் செய்யட்டுமே என்ற மோசமான மனநிலை. அதோடு வாயில் பாக்கு போட்டுக் கொண்டு ஏதேனும் இடம் தேடி துப்பாமல் ஆங்காங்கே கண்ணில் படும் சுவரில் எல்லாம் துப்புகிறார்கள். இதனால், அந்தச் சுவற்றை சிரத்தை எடுத்து வண்ணம் பூசி பார்வைக்கு அருமையாக மாற்றியவரின் உழைப்பு மீது துளியும் அனுதாபம் இல்லை.




பொது கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு, அதை தனக்குப்பின் பயன்படுத்த வரும் மற்றொரு பயனாளருக்கு சுத்தமாக விட்டுச் செல்லும் நற்செயல் இல்லை. யார் எப்படிப் போனால் என்ன? தன் சௌகரியம்தான் முக்கியம் எனும் தன்னலம் தாங்கிய குணநலனுடனே எப்போதும் வலம் வருகிறார்கள். மேலும், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கோ சுற்றுலாத் தலங்களுக்கோ செல்லும்போது பிறர் உழைப்பின் மீதான குறைந்தபட்ச மரியாதையுடன் நடந்து கொள்வதில்லை. தனக்குப் பின்வரும் தலைமுறையும் இவற்றையெல்லாம் காண வேண்டும் என்ற எந்த பொறுப்புணர்வுமின்றி செயல்படுகின்றனர். இதுபோன்ற காரணங்களால்தான் இந்தியர்கள் பின்னடைவுகளைச் சந்திக்கிறார்கள் என்று நீண்டது அந்தக் காணொலி.

காணொலியைப் பார்த்த மாத்திரத்தில் பெருமூச்சுதான் வந்தது. தகவல் தொழில்நுட்ப வசதிகள் பெருகிப் போய் முன்னேற்றப் பாதையில் நாடு சென்று கொண்டிருந்தாலும் தனி மனிதனுக்கு பொறுப்புணர்வு இல்லை என்றால் முற்றிலும் கோணல் ஆகிவிடும். சாலை என்பது அனைவருக்கும் பொது. ஆனால், தனக்கு வீட்டில் வண்டி நிறுத்த இடமில்லை என்று சொல்லி சாலையின் இரண்டு அடியை வீட்டு வராண்டாவுடன் இணைத்துக் கட்டும் பொறுப்பற்ற தன்மை சிலருக்கு எங்கிருந்து வருகிறது? கேட்டால் இது அரசு இடம் உங்களுக்கு என்ன வந்தது என விட்டேத்தியான பதில் வருகிறது. தெருவில் வசிக்கும் எல்லோரும் இப்படிக் கிளம்பி விட்டால்






என்ன ஆகும்?


சாலையின் இரண்டு அடிகளை அவரவர் தம் வீடுகளுடன் சேர்த்து கட்டிக் கொண்டால் சாலையில் நடக்கக்கூட இடம் இருக்காது. இது ஒருபுறம் என்றால், சாலைகளில் மாதக்கணக்கில் நிறுத்தியிருக்கும் வாகனங்களால் ஏற்படும் தொந்தரவு சொல்லி மாளாது. இன்று பெருவாரியான நடுத்தர மக்கள் கார் வைத்திருக்கிறார்கள். ஆனால், அதை நிறுத்த அவர்களிடம் இடவசதி இருக்கிறதா? எல்லா சாலைகளுமா பரந்து விரிந்திருக்கின்றன? ஒரு தெருவில் 50 வீடு இருந்தால் குறைந்தது 25 வீடுகளில் கார்கள் இருக்கின்றன. அதில் சரி பாதி நபர்களுக்கு அந்த வாகனத்தை நிறுத்த முறையாக எந்த இடவசதியும் இல்லை. முட்டுச் சந்துகளிலும், மொட்டை நிலங்களிலும், மைதானத்திலும் நிறுத்தியதுபோக, எஞ்சியவை எல்லாம் சாலைகளில் தேங்கிக் கிடக்கின்றன. நாள் கணக்கில் அவை நகர்வது கூட இல்லை.

இதனால், பிள்ளைகள் சாலையில் விளையாட முடிவதில்லை. நிறுத்தப்பட்டிருக்கும் வாகனத்தால் முன்பின் வரும் வாகனங்கள் சரிவரத் தெரிவதில்லை. இதனால், தேவையற்ற விபத்துகள் நேரிடுகின்றன. அது மட்டுமா? அனைவருக்கும் பொதுவான சாலையை உபயோகிப்பதில் பல அசௌகர்யங்கள் ஏற்படுகின்றன. தொடரும் இந்தப் பொறுப்பற்ற நிலை மிக ஆபத்தானது.

எவ்வளவோ கல்வி அறிவு பெற்றும்கூட பேருந்துகளில் பயணிக்கும்போது அருகில் யார் வருகிறார்கள், போகிறார்கள் என காணாது யார் மீதும் அக்கறையின்றி ‘புளிச் புளிச்‘ சென ஜன்னல் வழியே துப்புவது எத்தனை மோசமான செயல்? தனக்கு நேர்ந்தால் அநீதி என்பதும் பிறருக்கு நேர்ந்தால் எனக்கும் அதற்கும் தொடர்பில்லை என ஒதுங்கிக் கொள்வதும் என ஒவ்வாத பழக்கங்களில் பலர் ஊறிப் போய் கிடக்கிறார்கள்.

எங்கள் பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் தினமும் காலையில் வீடு வீடாக வந்து குப்பைகளை எடுத்துச் செல்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பே மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக இரு கூடைகளில் பிரித்துத் தர வேண்டும் என வீடுதோறும் சொல்லிச் சென்றார்கள். மூன்று ஆண்டுகள் கடந்தும் இன்னும் சில






வீடுகளில் குப்பைகளை மொத்தமாக அப்படியே தான் கொடுக்கிறார்கள். தூய்மைப் பணியாளர்கள் குப்பைக் கூடையில் கைவிட்டு பிரித்து எடுத்து போட்டுச் செல்கிறார்கள். உணவகங்களில் துணிக் கடைகளில்கூட ஊழியர்களை அதிகமான அலைக்கழிப்புக்கு உள்ளாக்கும் போக்கை காண முடிகிறது. ஊதியம் வாங்குகிறார்கள் இல்லையா... அவர்களே செய்யட்டும்‘ என்ற அலட்சிய எண்ணம்.

விழிப்புணர்வுடன் அமைதியாக பயணிக்க வேண்டிய சாலைகளில், போட்டி மனப்பான்மையை வளர்த்தபடி பறக்கிறார்கள். துளியும் விட்டுக் கொடுக்காமல் துரத்திச் சென்று விபத்தையோ அசம்பாவிதத்தையோ சந்திக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் பொறுப்புணர்வு பற்றாக்குறைதான். பொறுப்புணர்வு இருந்தால்தான் நன்றி உணர்வு வெளிப்படும். முதலுக்கே மோசமாக இருந்தால் இரண்டாவது எங்ஙனம் சாத்தியம்?

சங்க காலத்தில் மன்னர்களிடையே போர் தொடங்குவதற்கு முன்னர் போரைப் பற்றி அறிவித்து, கொல்லக்கூடாத உயிரினங்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி போரிலும் அறம் பேணினார்கள் என அறிகிறோம். அப்படிப்பட்ட சிறப்பான மாண்பைப் பெற்றவர்கள் நாம். தமிழ்த் தாத்தா என்று சொல்லப்படும் உ.வே.சா.வின் அதீத பொறுப்புணர்வினால்தான் இன்று நமக்கு பல புத்தகங்கள் கிடைத்திருக்கின்றன.

ஒரு சமயம் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைக் காண அரண்மனைக்குச் சென்ற புலவர் மோசிகீரனார் களைப்பு மிகுதியால் முரசுக் கட்டிலில் கண்ணயர்ந்துவிட பொறுப்புணர்வு மிக்க இரும்பொறை, குற்றமான அச்செயலை செய்த புலவருக்கு தண்டனை வழங்காமல் கவரி வீசினானாம். இச்செயலைக் கண்ட புலவர் நன்றியுணர்வுடன் மன்னனை வியந்து பாமாலை பொழிந்தாராம். இத்தனை சிறப்பான பாரம்பரியங்களைக் கொண்ட நாம், இன்று சின்னச் சின்ன விஷயங்களுக்குக்கூட பொறுப்புணர்வு பேணாது ஒருவருடன் ஒருவர் வெட்டி மடிகிறோம்.




இந்த புத்தாண்டில் நாம் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியது பொறுப்புணர்வும் நன்றியுணர்வும்தான் என்பது மேலான கருத்தாக முன்வைக்கப்படுகிறது.

“அனைத்துக்கும் நான் பொறுப்பு’ என்ற மேன்மையான எண்ணத்துடன் வாழும்போது நம் வாழ்வு அர்த்தமுள்ள வாழ்வாக மலரும். தனிமனித ஒழுக்கம் மற்றும் சமுதாயப் பொறுப்புணர்வு இரண்டும் சேர்ந்த நிலையிலேயே மனிதன் சிறப்படைகிறான்.

# தமிழ் 2026

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY




## FEBRUARY




## MARCH

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## APRIL

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
15
Years
ANNIVERSARY
Thank You!